# திங்கள்

தை . 8 அணா



உங்களின்

சுவையான சமையலுக்கு



S.R

பெருங்காயம்

பரிசுத்த

ஆராதனைக்கு ஏற்ற கற்பூரம்



ஊதுபத்தி முதலானவைகளுக்கு

S.R

ஒரு சின்னம்


தயாரிப்பவர்:-

பால கிருஷ்ணா இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ், சென்னை-13

ஐ.ஸி.ஏ. கலந்த

பெட்ரோல்

# நிரப்பி





அதன்

# சிறப்பை



# உணருங்கள்

# ஐ ஸி ஏ


'ஷெல்' உரிமைகளின் கீழ் லைசென்ஸ் பெற்றது

(இக்னிஷன் கண்ட்ரோல் ஆடிட்டிவ்)



விரைவில்
வருகிறது!
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ்
கோகிலவாணி
காதுக்கினிமையாக கானம் · G. ராமநாதன்
கருத்துக்கேற்ற தமிழ் நடை · S. D. சுந்தரம்
கண்குளிர ஒளிப்பதிவு · J. G. விஜயம்
காணத்தகுந்த கற்பனைச்சித்திரம் டைரக்ஷன்:
S. A. நடராஜன்
ஸ்டுடியோ · பிரிமியர் (மைசூர்)
Elegant
விவரங்களுக்கு
பார்வர்டு ஆர்ட் பிலிம்ஸ் NO.2642, 2வது மெயின்ரோட் வி.வி.மோஹல்லா மைசூர்.

எமது பொங்கல் வாழ்த்துக்கள்




கண்ணன் கடைக்குச் சென்றனன்
காலணுவை நீட்டினன்
ஸ்டூடன்ஸ் பாக்குப் பொட்டலம்
சொகுசாய் இரண்டு வாங்கினன்
அப்பாவுக்கோர் பொட்டலம்
அம்மாவுக்கோர் பொட்டலம்
தப்பில்லாமல் தந்தனன்
தந்தை தாயார் மெச்சினர்
குணமும் மணமும் உடையது
குவலயத்தார் புகழ்வது
விலையும் சரசமானது

**P. R. வடிவேலு முதலியார் & ஸன்**

ஸ்டூடன்ஸ் பாக்குத்தூள் பாக்டரி:

28, முல்லாசாயபு தெரு, சென்னை-1.






IF IT IS

**PHOTOGRAPH**

DIAL

**OCTOGRAPH**

★

**86144**

★

**186, Mount Road**

**MADRAS - 2.**

# திங்கள்

ஜனவரி 1956

ஆண்டு - 1 ★ மன்மத — தை ★ மாதம் - 1

## இம்மாதம்


| | | |
|---|---|---|
| திங்களுக்குத் திங்கள் (செய்திகள்) | ... | 9 |
| தமிழ் நாட்டில் பூதானம் | ... | 11 |
| இயற்கையின் கலை அரங்கு | ... | 13 |
| என்றும் பதினாறு (கவிதை) | ... | 14 |
| சுதந்தரமடைந்த சூடான் | ... | 17 |
| ரஸ்ஸல் 'எபெக்ட்' | ... | 20 |
| குடுமியான்மலை சங்கீத கல்வெட்டுகள் | ... | 22 |
| கோவா | ... | 33 |
| ஸ்ரீமதி ஸன்யாட்ஸென் | ... | 39 |
| புகை பிடித்தல் (வாதப்பிரதிவாதம்) | ... | 40 |
| கவிதையின உதயம் | ... | 44 |
| காந்திஜி கடிதம் | ... | 46 |
| சமூகத்தில் குற்றவாளிகள் நிலை | ... | 65 |
| பாரசீக இலக்கியம் | ... | 69 |
| கனிமாரா லைப்ரெரி | ... | 72 |
| மேனாட்டு நவீன நடனம் | ... | 76 |
| சிலைகள் சொல்லும் கதை | ... | 89 |
| சீட்டு விளையாட்டு | ... | 95 |
| ஜீவராசிகள் எப்படித் தோன்றின? | ... | 99 |
| ஷெல்லியின் பொன்னகரப் புரட்சி | ... | 105 |
| தமிழ் நாட்டில் புயல் | ... | 110 |
| கவியும் கனலும் | ... | 115 |
| ஆண்டு விழாக்கள் | ... | 117 |


மற்றும் பல

படக்கட்டுரைகள் :

மதுரை — ரயில்பெட்டிகள் தயாராகின்றன.

கதிர்காமம்


THINGAL, Tamil Monthly Magazine. Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 17, General Patters Road, Madras-2. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath.



சந்தா விபரம்: உள்நாடு வருஷ சந்தா ரூபாய் ஆறு. அரை வருஷ சந்தா ரூபாய் மூன்று. வெளிநாடு வருஷ சந்தா ரூபாய் எட்டு. தனிப்பிரதி விலை எட்டு அணா.

## சிறந்த பொழுது போக்குப் புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| வான வீதி (பாலு) | 1 | 8 | 0 |
| நக்ஷத்திரமாலை (குண்டூசி) | 1 | 0 | 0 |
| ராஜா சாண்டோ (ராமநாத்) | 2 | 0 | 0 |
| மனோரதம் (கே. ஸ்ரீ.) | 1 | 4 | 0 |
| ரேஷன் காலம் ( „ ) | 1 | 4 | 0 |
| நினைவு (நாகர்கோவில் மஹாதேவன்) | 2 | 0 | 0 |
| மீனுவின் பூனைகள் (எஸ். ஒய். சுப்ரமணியம்) | 1 | 4 | 0 |
| புதுமணத் தம்பதிகள் (இளவேனில்) | 2 | 4 | 0 |
| நான் டைரக்டரானேன் (கொத்தமங்கலம் சுப்பு) | 0 | 8 | 0 |

## சிரஞ்சீவி எழுதிய பயங்கர நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| மர்மம் நிறைந்த மாயவில்லா | 1 | 0 | 0 |
| சூனியக்காரி | 1 | 0 | 0 |
| மின்மினி | 1 | 0 | 0 |
| சூறைக்காற்று | 1 | 8 | 0 |
| மரணயாத்திரை | 1 | 8 | 0 |
| நீதி மயக்கம் | 1 | 0 | 0 |
| காதலன் கொலை வழக்கு | 1 | 4 | 0 |
| மர்மத்தீவு | 1 | 4 | 0 |
| இரட்டைக் கொலை | 1 | 4 | 0 |
| மர்மக்கொலை | 1 | 0 | 0 |
| ரத்தப் பசி | 1 | 4 | 0 |
| பயங்கர மனிதன் | 2 | 0 | 0 |

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு. தேவையான பிரதிகளுக்கு முன் பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. யில் அனுப்ப இயலாது.

ராமநாத் பப்ளிகேஷன்ஸ்

17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2

ANNUGANDHI AGENCIES,
16, EAST GATE, TANJORE.

திங்கள்

# வணக்கம்

தமிழ் நாட்டுப் பத்திரிகை வாசகர்களுக்கு எங்கள் அன்பு கலந்த வணக்கம். தமிழ்ப் பெருமக்கள் இப்பொங்கல் புதுநாளில் புத்தரிசிப் பொங்கல் பொங்கி பல வளமும் பெற்று இன்ப வாழ்வு வாழ வேண்டுமாய் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மாதப் பத்திரிகைகளுக்கு எந்த நாட்டிலுமே ஒரு தனி மதிப்பும் இடமும் உண்டு. தமிழ் நாட்டிலும் தற்போது பல்வேறு மாதப் பத்திரிகைகள் உலவி வருகின்றன. இப்பத்திரிகைகள் எல்லாவற்றிலுமே சிறுகதைகளும் தொடர்கதைகளும் பிரதான்யம் வகிக்கின்றன. மேனாட்டு மாதப் பத்திரிகைகளில் கதைகள் தான் சிறந்த அம்சம் என்று சொல்லமுடியாது. கண்கவர் படங்களும் கருத்தும் சுவையும் மிகுந்த பலவகைப்பட்ட கட்டுரைகளே மாதப் பத்திரிகைகளின் அஸ்திவாரமாக அமைந்திருக்கின்றன. அத்தகைய பத்திரிகைகள் மக்களின் மனதைக் கவர்ந்து கோடிக் கணக்கில் விற்பனையாகின்றன. இதையனுசரித்தே 'திங்களி'ல் வெளிவரவிருக்கும் விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

பள்ளிச் சிறுவர் முதல் முதியோர் வரை, எல்லோருக்கும் பயன்தரத் தக்க விஷயங்கள் மாதா மாதம் நமது பத்திரிகையில் பிரசுரமாகும். அவ்வப்போது பிரதான்யம் வகிக்கும் விஷயங்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும்.

படங்கள் மூலம் பல விஷயங்களை சுலபமாக விளக்கலாம். இந்த நோக்கத்துடனே படக்கட்டுரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஏராளமான விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள இப்படக் கட்டுரைகள் உதவும். பல்வேறு விஷயங்களைப் பற்றிய படக் கட்டுரைகள் தொடர்ந்து வெளிவரும்.

'திங்கள்' என்பது மிகவும் அழகானதோர் தமிழ்ச்சொல். சந்திரன், மாதம் என்ற பொருள்களைக் கொண்டது. இதையே நமது பத்திரிகையின் பெயராக வைத்திருக்கிறோம். பேராசிரியர் ஸ்ரீ ரா. பி. சேதுபிள்ளையவர்கள் திங்களுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் 'திங்கள்' என்ற சொல் எல்லோரும் அறிந்த தீந்தமிழ்ச் சொல்லாக வழங்கிவந்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இச்சொல் நம் பத்திரிகையைக் குறிக்கும் புதுச் சொல்லாக மாறி தமிழ் மக்களிடையே தெரிந்த சொல்லாக ஆகவேண்டுமென்று தான் நாமும் விரும்புகிறோம்.

இந்த முதலிதழில் அனேக கட்டுரைகளும் படக்கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் விரும்பிப் படிக்கக் கூடிய அளவு அமைந்திருப்பதைக் கண்டு அகமகிழ்கிறோம். இவ்வாறே நமது வாசகர்களும் சந்தோஷமடைவார்களென நம்பு கிறோம்.

அடுத்துவரும் இதழ்கள் ஒவ்வொன்றிலும் புதிய புதிய விஷயங்களைப்பற்றி அனுபவமிக்கவர்கள் பலர் நம் பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய முன்வந்துள்ளார்கள்.

'திங்களு'க்கு தமிழ் நாட்டினர் பத்திரிகை வருவதற்கு முன்பே காட்டியுள்ள ஆதரவுகண்டு பூரிப்படைகிறோம்.

வணக்கம்.

## தமிழகத்தில் 'திங்கள்'

'திங்கள்' என்பது ஓர் இனிய பழஞ்சொல். "திங் களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்" என்று எடுத்து மங்கல வாழ்த்துப் பாடினர் இளங்கோவடிகள். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னளைப் பாடி மகிழ்ந்தாள் ஒரு தெய்வப் பாவை. முன்பனிக் கால மாகிய மார்கழித் திங்களில் பாவைப் பாட்டு முழங்கும். திருப்பாவை ஒரு பால், திருவெம்பாவை ஒரு பால். திங்கள் மும்மாரி பெய்து நாடு செழிக்க வேண்டும் என்று இள நங்கையர் இறைவனை வேண்டுவர்.

முன்னொரு காலத்தில் 'திங்கள்' என்பது எல்லோ ரும் அறிந்த தீந்தமிழ்ச் சொல்லாக இந்நாட்டில் வழங் கிற்று. இப்பொழுது அரும்பதமாய் விட்டது. அதனை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருகின்றது இந்த வெளியீடு. மதி நலம் வாய்ந்த அறிஞர்கள் போற் றும் இத் 'திங்கள்' தமிழகத்தில் இன்னொளி வீசி என்றென்றும் திகழ்வதாக, என்று பொங்கற் புதுநாளில் வாழ்த்துகின்றேன்.

ரா. பி. சேதுப் பிள்ளை,
2-1-56.

............'தீவிளிக்கு தீவிளி' என்பதுபோல தொனிக்கிறதல்லவா? சென்ற திங்களில் நடைபெற்ற முக்கிய செய்தி விவரங்கள் இப்பகுதியில் தொகுத்து தரப்படும்.

# திங்களுக்குத் திங்கள்

சென்ற திங்களில் கவனத்திற்குரிய முதல் செய்தி தமிழ் நாட்டில் அடித்த புயல்தான். தஞ்சை ஜில்லாவில் கரையோரமுள்ள ஊர்கள் எல்லாம் உருத்தெரியாமல் குலைந்து கிடக்கின்றன. நவம்பர் மாதம் தஞ்சை ஜில்லாவுக்கு எப்போதுமே சனியன் பிடித்த மாதமாகவே இருந்து வந்திருக்கிறது. 1952-ல் அடித்த கோரப் புயலும் நவம்பர் 30உ தான் ஆரம்பமாகியது. அப்போது தஞ்சை ஜில்லாமட்டும் பாதிக்கப்பட்டது. இப்போது திருச்சி, ராமனுதபுரம், மதுரை முதலிய இடங்களும்கூட பாதிக்கப்பட்டிருக்கின்றன. நிவாரண வேலைகள் ஜரூராக நடைபெறுகின்றன.

* * *

தமிழ்நாட்டில்தான் புயல் அடித்த தென்றல் அரசியல் உலகிலும் புயலும் கொந்தளிப்பும் இருந்துவருகின்றன. இந்தியா விஜயம்செய்த ரஷ்யத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள்தான் இதற்குக் காரணம். ரஷ்யத் தலைவர்கள் உண்மையான விஷயங்களைத்தான் வெளியிட்டார்கள், கோவாவை போர்த்துகீஸியர் இன்னும் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டிருப்பது மிகக் கேவலம், காஷ்மீர் இந்தியாவைச்சேர்ந்ததுதான் என்றூர்கள். இந்தியா இதைத் தொடர்ந்து எங்கே ரஷ்யாவின் வலையில் விழுந்து விடுமோ என்று அமெரிக்கா பயந்து விட்டது. இதன் பலனாக டல்லஸ் போர்ச்சுகல் அயல்நாட்டு மந்திரியுடன் சேர்ந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கை மூலம் இந்தியா அமெரிக்கா உறவு முறியும் அளவுக்கு விஷயத்தைக் கொண்டு போய் விட்டார். அபபடியிருந்தும் இந்தியா தன் நிதானத்தை இழக்கவில்லை.

இந்தியா சகிப்புத் தன்மையை எவ்வளவு காட்டியிருக்கிறது என்பது சரித்திரத்தில் இடம்பெற கோவா-காஷ்மீர் பிரச்னை உதவப்போகிறது என்று பண்டிதநேரு லோக்சபையில் எடுத்துச் சொல்லியிருக்கிறூர்.

பண்டிதநேரு ஆந்திராவிலும் மலையாளத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறூர். ஆந்திராவில் அவர் பேசும்போது ராஜ்ய எல்லை சண்டைகளையும் குறுகிய பாஷை பிரதேச மனப்பான்மைகளையும் மறந்து ஆந்திரர்கள் தேசீய முன்னேற்றத்திற்காக ஒத்துழைக்கவேண்டும் என்று கூறினூர். தமிழ் நாட்டுடன் எல்லைத் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்பதை இவர் மறைமுகமாக எடுத்துச் சொல்லியிருக்கிறூர் என்று தெரியவில்லையா!

* * *

இருக்கும் இடம் தெரியாமல் அழுங்கிப்போன முஸ்லிம் லீகுக்கு உயிர்கொடுக்க சிலர் மலையாளப் பகுதியில் முயன்று வருகிறூர்கள். இதைநேரு தீவிரமாகக் கண்டித்திருக்கிறூர். இம்மாதிரி வகுப்புவாத ஸ்தாபனங்களை தான்தோன்றிகளாக ஆடவிட்டுப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்றும் குறிப்பிட்டிருக்கிறூர்.

இந்தியாவில் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த அரபு மன்னர் ஸாஊத் "இந்தியாவில் முஸ்லிம்கள் சௌகரியமாக நடத்தப்படுகிறூர்கள். பாரபட்சம் காட்டப்படவில்லை" என்று தன் கருத்தை வெளியிட்டிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டியது பொருத்தமாகும்.

* * *

அடுத்த வருஷம் இந்த சமயத்தில் பொதுத்தேர்தல் ஆரம்பமாகி விடலாம். அதில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தும்

பொறுப்பை ஏற்கும் கமிட்டி திருப்பூரில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் மகாநாட்டில் ஏகமனதாக நிறுவப் பட்டிருக்கிறது.

இக்கமிட்டி நியமனத்தேர்தலில் ஏகப்போட்டி இருக்கும் என்று எதிர் பார்த்தவர்கள் ஏமாந்திருப்பார்கள். இக்கமிட்டி நிறுவ நடந்த தேர்தல் போல இவ்வளவு ஒற்றுமையாகவும், ஏகமனதாகவும் வேறு எந்த மாகாணத்திலும் காணமுடியாது என்றே சொல்லாம். இக்கமிட்டியிலுள்ளவர்கள் ஸ்ரீமான்கள் காமராஜ், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஸி. சுப்ரமணியம், கக்கன், பக்தவத்ஸலம் ஆகியோர்.

* * *

தேர்தலுக்கு முன்பாகவே ராஜ்ய புனரமைப்பு வேலை நடந்துவிடலாம் என்று தெரிகிறது. இப்படி திருத்தியமைக்கப்படும் ராஜ்யங்களை ஐந்து மண்டலங்களாக பிரிக்கலாம் என்றும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஆலோசனைசபையை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும் பண்டிதநேரு லோகசபையில் யோசனை தெரிவித்திருக்கிறார். இந்த யோசனைக்கு பலத்த ஆதரவு இருந்து வருகிறது. இந்த யோசனை உருவானால் ராஜ்யங்களுடையே பொருளாதார ஒத்துழைப்பு பெருகுவதுடன் குறுகிய பாஷை, மாகாண மனப்பான்மைகளும் ஒழிய வழி ஏற்படும்.

* * *

சென்ற 56 வருஷங்களாக பிரிட்டன்,எகிப்து இவைகளின் கூட்டு ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த சூடான் இவ்வருஷப் பிறப்பன்று சுதந்திர மடைந்திருக்கிறது. நீலம், பச்சை, மஞ்சள் இம் மூவர்ணம் கொண்ட தேசீயக் கொடியை முதல் மந்திரியும் எதிர் கட்சித் தலைவருமாகச் சேர்ந்து ஏற்றி வைத்தனர். கத்தியின்றி ரத்தமின்றி சமாதான முறையில் சூடான் சுதந்திரம் பெற்றது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய விஷயமாகும்.

* * *

சீனக் குடியரசு உதவி ஜனாதிபதி ஸ்ரீமதி ஸன்யாட்ஸென் இந்தியா வந்திருந்தபோது கோவா பிரச்னையை குறித்து ஆணித்தரமானதன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து விட்டு சென்றிருக்கிறார், கோவா விஷயமாக இந்தியாவை சீனா மனப்பூர்வமாக ஆதரிக்கும் என்றும் காலனி ஆட்சி எப்படியும் முடிவடையவே வேண்டும் என்றும் அவர் தெளிவாக்கினார்.

யுனைடெட் ஸ்டேட்ஸ் ராஜாங்க மந்திரி டல்லஸ் இந்தியாவிற்கு வரப் போவதாக ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது.

* * *

பி.ஜி.கேர்ரை தலைவராகக் கொண்ட அரசாங்கமொழிக் கமிஷன் முன்னிலையில் ராஜாஜி ஹிந்தியை இப்போது திணிக்க வேண்டாம் என்றும் ஹிந்தியில் நன்கு பழகும் நிலைமை வரும் வரை ஆங்கிலமே அரசாங்க பாஷையாக இருந்து வரலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கூறியுள்ள யோசனைகளாவன, முதலில் செகண்டரி பள்ளிகளில் ஹிந்தியை கட்டாய பாடமாக்குவது, 20 வருஷ அவகாசம் கொடுப்பது. இதற்குள் எல்லாருமே ஹிந்தியில் பழக்கப்பட்டு விடுவார்கள்; இதற்காக அரசியல் சட்டத்தை திருத்துவது.

1965-ம் வருஷம் வரை ஆங்கிலமே அரசாங்க பாஷையாக இருகக வேண்டும் என்றும் அதற்குபின் 'அதிகப்படியான' பாஷையாக நீடிக்க வேண்டும் என்றும் சென்னை சர்க்கார் யோசனை கூறியுள்ளது

ராஜ்யங்கள் புனரைமப்பு விஷயமாக புதுடெல்லியில் முக்கியமான ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன. அங்கிருந்து கிடைக்கும் தகவல்களைப் பார்த்தால் தேவிகுளம் பீர்மேடு சென்னைக்குக் கிடைக்கும் சாதகமான நிலை இருப்பதாகத் தெரியவில்லை என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

ராஜ்ய புனரமைப்பு முடிவுகளை தாங்கள் ஏற்பதாக ராஜபிரமுகர்கள் பண்டிட் பந்திடம் தெரிவித்துள்ளனர்.

* * *

அமெரிக்கா, ரஷ்யா (உஸ்பெக்) நடனக்கோஷ்டியினரின் நடனங்களை காண சென்னை வாசிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. நியூஜிலாந்து கோஷ்டிக்கும், இந்தியக் கோஷ்டிக்கும் ஏற்பட்ட கிரிக்கெட் போட்டியில் நம்மவர்கள் சக்கைபோடு போட்டிருக்கிறார்கள். ★

# தமிழ் நாட்டில் பூதானம்

## ஜெயபிரகாஷ் நாராயண்

தமிழ் நாட்டில் பூதான இயக்கம் மெதுவாகவே நடைபெற்றபோதிலும் தளர்வடையாமல் நடைபெறுவதைமுக்கியமாககுறிப்பிடவேண்டும். பூமிதான இயக்கம் விஷயமாக மக்கள் இப்போது கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை தமிழ் நாட்டின் பல இடங்களுக்கு விஜயம் செய்ததில் நான் உணர்ந்தேன்.

சென்ற மூன்று வருஷங்களுக்கு முன்பு இருந்ததைவிட பூதானத்திற்காக சேவை செய்யும் ஊழியர்கள் இப்போது தமிழ் நாட்டில் அதிகம் இருக்கிறார்கள். இளைஞர்கள் இந்த இயக்கத்தில் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்திருப்பது ஒரு சிறந்த அம்சம். நிலங்களை தானமாகப் பெற்று அதை ஒருவர் பொறுப்பேற்று விநியோகம் செய்வதை விட மக்களே அந்த நிலங்களை தங்களுக்குள்ளேயே ஒரு ஏற்பாடு செய்து விநியோகம் செய்துகொள்ள வேண்டும். இதைத்தான் நாங்கள் சொல்லி வருகிறோம். இப்போது பூதான நிலங்கள் பூதான இயக்க ஊழியர்களால் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.



பூதான இயக்கம் மூலம் நாட்டில் இருக்கும் வறுமையைப் பங்கு போடுகிறார்கள் என்று சிலர் கூறுகின்றனர். வறுமையையே பங்கு போடுவதாக இருக்கட்டும். அதை ஏன் ஆட்சேபிக்கவேண்டும்? பார்க்கப்போனால் நாமெல்லாம் ஏழைகள்தானே! பூதான இயக்கம் மக்களுக்கு கற்பித்த மிக முக்கியமான பாடம் ஒற்றுமைபட்டு கூட்டுறவு முறையில் முயன்று பலன் பெற்று வாழவேண்டுமென்பதே தங்களுக்கு கிடைப்பது எவ்வளவோ அதை எல்லோருமாகப் பகிர்ந்து கொள்வதும் என்பதுதான். எவ்வாறு சுபிட்சத்தைப் பங்கு போட்டுக் கொள்கிறார்களோ அதே போல வறுமையையும் தான் பங்கிட்டுக் கொள்ளட்டுமே! ஒரு குடும்பத்தில் நாம் பலருடன் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்வதில்லையா? சமுதாயத்தினர் எல்லாரையுமே ஒரு குடும்பமாக்க வேண்டும் என்பதுதான் நமது நோக்கம். தனிப்பட்டு வாழ்வதைவிட ஒற்றுமைப்பட்டு மனமொத்து வாழச் செய்ய வேண்டியதே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

தங்களிடமுள்ளதை பகிர்ந்து அனுபவிப்பது என்பது ஏற்பட்டு விட்டால் வறுமையைக் கண்டு யாரும் எள்ளி நகையாட மாட்டார்கள். வறுமையை

சகிப்பதையும் ஒரு தர்மமாகவும் கொள்ள வேண்டும்.

பூதானத்திற்காக எல்லா நிலங்களும் அளிக்கப்பட்டுள்ள 'கிராம்தான் கிராமங்களில்' கூட்டுப் பண்ணை முறை நடப்பதை நான் ஆதரிக்கவில்லை இந்த கூட்டுப்பண்ணை முறையில் விவசாயிகள் வெறும் கூலியாட்களாக மாறுவது சாத்யம். புது அதிகார வர்க்கம் இக்கூட்டுப்பண்ணை முறையினல் 'ஏற்படலாம். இதனல் கிராம ஜனநாயகத்திற்கே ஆபத்து ஏற்படக்கூடும்.

கூட்டுப்பண்ணையை நடத்துபவர்கள் மிக யோக்யமாக நடந்து கொள்வார்கள் என்று 'வைத்துக் கொண்டாலும் படித்த நடுத்தர வகுப்பினரிடையே அதிகாரம் குவிந்து அவர்கள் பண்ணைகளின் மானேஜர்களாக இருப்பார்கள். அப்படியானல் கூட்டுப்பண்ணை நிர்வாகத்தில் விவசாயிகளுக்கு சிரத்தை இல்லாது போகும். ரஷ்யாவில் கூட்டுப்பண்ணைதான் எதேச்சாதிகாரமும் சுரண்டலும் தோன்ற பிறப்பிடமாக இருக்கின்றன. நம்மிடம் இருக்கும் நிலங்களோ ஒரு அளவுக்குட்பட்டே இருக்கின்றன. ஜனத்தொகையோ பெருகியே வருகிறது. ஆகவே விவசாயத்தில் இயந்திர மயமாக்குவதென்பதற்கு அர்த்தமே இல்லை. மக்கள் வசம் உண்மையான ஜனநாயக அதிகாரம் இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மக்களை தங்கள் விவகாரங்களை தாங்களே செய்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். தன்னம்பிக்கையுடனும், சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு மக்கள் இருக்க வேண்டுமானல் கூட்டுப்பண்ணை எண்ணத்தை விட்டுவிடவே வேண்டும்.

ஆனல் ஒரு கிராமத்தில் உள்ள நிலத்தை அக்கிராமத்திலுள்ளவர்கள் கூட்டாக உடமையாகப் பெற்றிருக்கலாம். இப்படி பொதுவுடமையாக உள்ள நிலங்களை ஒவ்வொரு குடும்பத்திற்கும் இவ்வளவு என்று பிரித்துக் கொடுகக வேண்டியது கிராம பொது சங்கத்தின் பொறுப்பாகும்.

கிராமங்களில் பொதுவுடமையாக ஒரு சில பகுதியை ஒதுக்கியிருப்பது 'கிராம்தான்' வளர்ச்சியைக் காட்டுகிறது வலுவில் தனிப்பட்ட உரிமையை கைவிட்டு பொதுப்பட்ட உரிமையை மேற்கொள்வதென்பது மக்களிடையே தோன்றியுள்ள மகத்தான மாறுதலாகும்.

இப்போது சுமார் 900 'கிராம்தான்' கிராமங்கள் இருந்து வருகின்றன. 80 சத விகிதம் மக்கள் கிராமங்களிலேயே வசிக்கிருர்கள். ஆகவே கிராமங்களில் வாழ்க்கைத் தரம் உயரச் செய்வதை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ★

## வழி காட்டி வயலூர்!

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் தேதி: காந்தி ஜெயந்தி தினம். அன்று தமிழகத்தில் செங்கற்பட்டைச் சேர்ந்த வயலூர் கிராமத்தினர் ஏகமனதுடன் பூதான இயக்கத்திற்கு ஆதரவளித்தனர். நிலச்சுவான்தாரகள் முதுமனதுடன் தங்கள் நிலங்களில் சில பகுதிகளை இந்த இயக்கத்திற்குக் கொடுக்க முன்வந்தனர்.

வயலூர் ஒரு சிறிய கிராமம். 217 குடும்பங்கள் வாழ்ந்து வரும் வயலூரில் சாகுபடிக்கேற்ற நிலம் மொத்தம் 382 ஏக்கர். பூதான இயக்கத்திற்களிக்கப்பட்ட நிலங்களை அந்தந்த குடும்பத்தின் தேவைக்கேற்றவாறு பங்கிட்டு மொத்தம் 45 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளனர்.

பூதான இயக்கத்திற்களிக்கப்பட்ட நிலங்கள் ஐந்து பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு முறையே டால்ஸ்டாய், காந்திஜீ, விநோபாஜீ, ஷங்கர்தேவ், ஜயப்பிரகாஷ் என்று பெயரிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் பூதான இயக்கத்திற்கு முதன் முதலில் பூதானம் செய்து இந்திய சுபீட்சத்திற்கு வழிகாட்டிய வயலூரை மற்ற கிராமங்களும் பின்பற்ற வேண்டும்.

# இயற்கையின் கலை அரங்கு

மு. வரதராசனார்

என்றோ ஒரு நாள் ஒரு மூலை புல்லாங்குழலைக் கண்டுபிடித்து உலகத்திற்கு உதவியது. கண்டு பிடித்தவர் யார் என்பதை உலகம் மறந்து விட்டது. எப்படிக் கண்டு பிடித்தார் என்பதை மட்டும் ஒரு வாறு எண்ணிப் பார்க்கப் முடி கின்றது.

அவர் ஒரு நாள் ஒரு மலையில் ஒரு மூங்கில் புதரை அடுத்து உட்கார்ந்திருந்து காலம் போக்கியிருக்கலாம். அது கோடைக்காலம்; மேற்கே இருந்து காற்று வேகமாக வீசியது. அந்த மூங்கில் புதரிலிருந்து அருமையான மெல்லிய ஓசை இனிமையாகக் கேட்டது. அவர் அந்தப் புதரை உற்று நோக்கிப் பார்த்தார். ஓசை எப்படிப் பிறந்தது என்பது தெரியாமல் விழித்தார். புதரை நெருங்கிச் சென்றார். அந்த இனிய ஓசை பிறந்த இடத்தை அறிய முயன்றார். மறுபடியும் மேல்காற்று வீசியது. இப்போது அந்த இசையின் பிறப்பிடத்தைக் கண்டுவிட்டார். பெரிய மூங்கிலில் சில சிறு சிறு துளைகளைக் கண்டார். வண்டு துளைத்துத் துளைத்து அந்தத் துளைகள் ஏற்பட்டிருந்தன. அந்தத் துளைகளின் வழியாகக் காற்று உள்ளே சென்ற போது அந்த இசை பிறந்தது என்பதை அறிந்தார். உடனே அந்த மூங்கிலை வெட்டினார். அந்தப் பகுதியைத் துண்டு படுத்தினார். செயற்கையாகக் காற்றை வாயால் ஊதிப் பார்த்தார். ஏறக்குறைய அந்த இசை கேட்டது. அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் போல் மகிழ்ச்சி கொண்டார்; துள்ளினார். ஓடிப்போய்த் தன் கூட்டத்தாருக்குச் சொன்னார். அதே போல் மூங்கிலை எடுத்துத் துளைகள் செய்தால இனிய ஓசைகள் பிறக்குமா என்று பார்த்தார். முயற்சியில் வெற்றி பெற்றார். அவரால் புல்லாங்குழல் உலகத்தில் பரவி விட்டது.

புல் என்றால் இங்கே மூங்கிலைக் குறிக்கும். புல்லாங்குழல் என்பது மூங்கிலால் செய்யப்பட்டதைத்தான் குறிக்கும். இவ்வாறே ஆம்பல் குழல் முதலியவைகளும் பிறகு ஏற்பட்டன.

மற்றொருவர், ஒரு நாள் மலையில் ஓர் அருவியின் கரையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ பாட்டைப் பாடிக் கொண்டிருந்தார், அந்த அருவி பாறைகளில் விழுந்து பாய்ந்து கொண்டிருந்தது. அதன் வீழ்ச்சியிலும் ஓட்டத்திலும் ஒரு வகை ஒழுங்கான ஒலி, தபதப தபதப தபதபா. தபதப தபதப தபதபா என்று ஒலித்துக் கொண்டிருந்தது. அவர் பாடிய அந்தப் பாட்டை இதற்குமுன் பல முறை வேறு வேறு இடங்களில் பாடி இருக்கின்றார். ஆனால் அந்த அருவியின் கரையில் உட்கார்ந்து அந்தப் பாட்டைப் பாடிய போது அவருக்கு அளவு கடந்த ஊக்கமும் மகிழ்ச்சியும் இருந்தன. அந்த அருவியின் ஒலியே அதற்குக் காரணம் என்று உணர்ந்தார். தம் பாட்டுக்கு அதன் ஒலி துணையாக இருந்து இனிமை ஊட்டுவதை அறிந்தார்; பாடலில் ஈடுபட்ட மனத்திற்கு அந்த அருவி ஒலி தூண்டுகோலாக இருந்ததாகவும் அவருக்குத் தோன்றியது. இவ்வாறே தொடர்ந்து சில நாட்கள் இன்பமாகப் பாடியபின் ஒரு முடிவுக்கு வந்தார். தனியே பாடும் பாட்டின் ஒலியைவிட, இப்படி ஒருவகை ஒழுங்கான ஓசையும் கலந்தால் இனிமை மிகுதியாக ஏற்படும் என்று முடிவு கொண்டார், அந்தத் துணை ஓசையை உண்டாக்க எவ்வளவோ முயற்சி செய்தார். அவர் முயற்சியும் பிற முயற்சியும் வளர்ந்து வளர்ந்து முழவு (மிருதங்கம்) என்னும் கருவியும் உலகத்தில் தோன்றியது. வெறும்பாட்டைவிட, துணையிசை (பக்க வாத்தியம்) கலந்த பாட்டிசை இனிமையானது என்று உலகம் உணர்ந்தது,

இப்படியே உலகத்தில் மற்ற இசைக் கருவிகளும் தோன்றியிருக்க வேண்டும். தமிழர்களின் தனிச்

செல்வமான யாழும் இப்படித்தான் தோன்றியிருக்கவேண்டும்.

கபிலர் பழந்தமிழ்ப் புலவர்களில் ஒருவர். பாரி என்னும் வள்ளலோடு பறம்பு மலையில் நெடுங்காலம் சிறந்த கலை வாழ்வு வாழ்ந்தவர். இயற்கையோடு இயைந்த இன்ப அன்பு வாழ்வு என்று அவருடைய வாழ்வைப் புகழலாம். வளமான பறம்பு மலைமேல் பல ஆண்டுகள் வாழ்ந்து வந்த அவர் இயற்கையின் சிறப்புக்களை எல்லாம் நன்றாக அறிந்திருந்தார். பாரியின் வளமான அரண்மனையில் வாழ்ந்ததால், அவனை நாடிவந்த பாணர், விறலியர், கூத்தர் முதலியவர்களின் கலைத்திறனை எல்லாம் கண்டு அனுபவம் முதிர்ந்திருந்தார். அந்தக் கலைஞர்களின் இனிய இசைக் கருவிகளை எல்லாம் கேட்டுக் கேட்டுப் பழகிய அவருடைய செவி இயற்கையில் உள்ள இனிய ஓசைகளை எல்லாம் அளந்து அறியக்கூடியதாகஇருந்தது. அந்த விறலியர், கூத்தர்களின் ஆடல் திறனைக் கண்டு பயின்ற கண், மயில் முதலிய பறவைகளின் ஆடலழகை எல்லாம் ஆராயக்கூடிய உணர்வு பெற்றிருந்தது. இவ்வாறு கலையுலகில் விளங்கிய இசை நாடகம் கேட்டும் கண்டும் பழகிய அவருக்கு இயற்கை அந்தப் பறம்பு மலையில் இசையரங்காகவும், நாடக அரங்காகவும் அமைத்து மகிழ்வித்த காட்சிகள் பல இருந்தன. அவற்றுள் ஒன்றை அந்தப் பெரும் புலவர் ஒரு பாட்டோவியத்தில் தீட்டியிருக்கின்றார்.

மேலே கண்டவாறு மேல்காற்று அடிக்கும் காலம்தான். மூங்கில் துளைகளின் வழியாகக் காற்றுச் சென்று இனிய குழலிசையைப் பிறப்பித்தது. அந்த மூங்கில் புதரை அடுத்தே மலையருவி தப தப என்று ஒலித்து விழுந்து ஓடிக்கொண்டிருந்தது. அது முழவின் இசையாக இருந்தது. அருகே மான்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. கலைமான்களின் ஓசை தூம்பு என்னும் துணைக் கருவியின் இசையாக ஒலித்தது. குழலும் தூம்பும் முழவும் ஒலித்தது கேட்டு அந்த இடத்தில் தம்மை மறந்து நின்று கொண்டிருந்தார் கபிலர்.

ஆயினும் அவருடைய செவியில் ஒரு குறை பட்டுக் கொண்டே இருந்தது. பாரியின் அரண்மனை முற்றத்தில் பாணர் கையிலும் பாரியின் மகளிர் கையிலும் ஒலிக்கக் கேட்ட யாழின் ஒலியை அவருடைய செவி நாடியது. அங்கே அந்த யாழ் ஒலி கலந்து கேட்கவில்லை அல்லவா? இவ்வாறு அந்தக் குறையை எண்ணிக் கொண்டிருந்தபோது, தேனீக்கள் கூட்டமாக அந்தச் சாரலில் வந்து பூக்களில் மொய்த்து ரீங்காரம் செய்தன. அந்த ஒலிதான் யாழிசைபோல் கேட்டது. கபிலரின் குறை தீர்ந்தது.

இந்த அரிய இசைக் கச்சேரியைத் தாம் மட்டும் கேட்டு மகிழ்வதாக எண்ணிச் சுற்றிப் பார்த்தபோது ஒரு பக்கத்தில் குரங்குகள் மருண்டு மருண்டு பார்த்துக் கொண்டிருந்தன. கபிலர் அவற்றின் மருட்சியில் மகிழ்ச்சி கலந்திருப்பதை உணர்ந்து இசை இன்பத்தை அவைகளும் கேட்டு நுகர்கின்றன என்று அறிந்தார். அந்தச் சூழலில் இருந்த பாறைமேல் திடீரென்று ஒரு மயில் தோகை விரித்து மெல்ல அசைந்து வந்து ஆடியதைக் கண்டபோது கபிலரின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இசையரங்காக இருந்த அதனைத் திடீரென்று நாடக அரங்காகக் கண்டார் அவர். திருவிழாக் காலத்தில் இனிய பல இசை முழக்கிற்கு இடையே அழகு மிகுந்த விறலி வந்து தோன்றி ஆடும் காட்சியை நினைத்தார். இயற்கையின் கலையரங்கைக் களிப்புடன் போற்றிப் புகழ்ந்து வியந்தார்.

ஆடமைக் குயின்ற
அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி
குழலிசை ஆகப்
பாடின் அருவிப்
பனிநீர் இன்னிசை
தோடமை முழவின்
துதைகுரல் ஆகக்
கணக்கலை இருக்கும்
கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல்
வண்டுயாழ் ஆக
இன்பல் இமிழிசை
கேட்டுக் களிசிறந்து
மந்தி நல்லவை
மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து
இயலி யாடுமயில்
விழவுக்கள விறலியின்
தோன்றும்.....


அகநானூறு—82

[அமை-மூங்கில்; கோடைவளி-மேல் காற்று; மந்தி-பெண் குரங்கு.]

# என்றும் பதினாறு

பெ. தூரன்

நீலத்துப் பாழிலே கோளத்துப் பம்பரங்கள்
தூங்கும் இசையெழுப்பத் தூங்காத ஆட்டத்தான்
நவக்கிரகப் பெருங்கோடி நட்சத்திர மணியுதிரப்
பரவெளியில் வெடிவானம் பவனிக்கு யார் வகுத்தார்?
நீளத்து நெடுவழியோ நீள்வட்டப் பொய் வழியோ
தாளக் கணக்குண்டோ சாவெல்லை தானுண்டோ?
எல்லையற்ற பேரெல்லை எங்கும் நிறை பரமாணு
மனக்குகையில் பேரிமயம் மணிக்கூண்டைக்
காலுதைத்துப்
பூநின்று பிறப்பித்துப் பால்உறங்கி வாழ்வித்து
தாளம் தவறடித்துக் கால்மாற்றிக் கனலெழுப்பிப்
பொறிவானம் பொங்கியெழப் புன்னகையில் சினங்காட்டிப்
பொறிவாயில் ஐந்தவித்த பொக்கணத்தில்
பெண்மயக்க
மச்சான் மனங்குளிர மத்தளத்தின் சுதிசேர
தச்சன் மலரேறிச் சாவுக்குயிர் படைத்துத்
தாளத்தைத் தட்டிடவே சதிருமந்த மார்க்கண்டன்
நீளும் பதினாறாய் நின்றே நடந்திடுமே



# — சுதந்திரமடைந்த சூடான் —

ஜனவரி முதல் தேதி சூடான் சுதந்திர மடைந்தது. இது பற்றி இந்தியர்கள் பெருமைப்பட காரணமுண்டு. சென்ற மூன்று ஆண்டுகளாக சூடான் அரசியல் ஜனநாயக முறையில் உருவானதில் இந்தியா பெருமைப்படலாம்.

சூடானின் சரித்திரத்தைப்பற்றி, எரல் ஆப் க்ரோமர் என்பவர் 'நவீன எகிப்து' என்ற தன் புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறார்.

1881–ஆகஸ்டில் முகம்மது அகமத் என்பவன் சூடானின் 'மகதி' என்று தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டான். இவனுக்குள்ள ஒரே நோக்கம் இதர நாடுகளையும் வென்று அங்கெல்லாம் முஸ்லிம் மதத்தைப் பரப்பவேண்டும் என்பதே. இவன் சூடான், எகிப்து இரண்டும் பிரிக்கப்பட முடியாத ஒரே நாடு என்றே கருதினான்.

அப்போது பிரிட்டிஷ் சர்க்காரும் பிரெஞ்சு சர்க்காரும் எகிப்திய சர்க்கார் நிர்வாகத்தில் தலையிடும் உரிமையைப் பெற முயற்சி செய்து கொண்டிருந்தனர். துருக்கி சுல்தானின் நிர்வாகத்தில் அப்போது எகிப்து இருந்தது. அதனுடைய பிரதிநிதியாக 'கெடிவ்' என்ற அதிகாரி எகிப்தில் இருந்து வந்தார்.

1882–ஜூலை-11-ந் தேதி பிரிட்டிஷ் கடற்படையொன்று அலெக்ஸாண்டிரியாமீது பீரங்கிப் பிரயோகம் செய்தது. பிரிட்டிஷாரின் பிரித்தாளும் கொள்கை பற்றித்தான் நமக்குத் தெரியுமல்லவா? அம்முறையைப் பின்பற்றி எகிப்தையும் சூடானையும் சேரவொட்டாமல் செய்து தங்கள் ஆதிக்கத்தை அவர்கள் ஸ்தாபித்துக் கொண்டார்கள். சூடான் ராணுவத்திற்கு கர்னல் ஹிக்ஸ் என்பவரை சேனாதிபதி யாக்கினர்.

1882–முதற் கொண்டே எகிப்தில் பிரிட்டன் இட்டது சட்டம் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அப்போது எகிப்துக்கும் சூடானுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் எகிப்து படை முறியடிக்கப்பட்டபோது பிரிட்டன் எகிப்துக்கு உதவ முன் வராமல் தட்டிக் கழித்துவிட்டது. சூடானில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்படுத்தும் நோக்கத்துடனேயேதான் இந்தமாதிரி பிரிட்டன் செய்தது என்பதை லார்ட் மில்னர் 'எகிப்தில் இங்கிலாந்து' என்ற தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

எகிப்தும் சூடானும் ஒன்றை ஒன்று நம்பி வாழும்படியான பூகோள அமைப்பை பெற்றிருக்கிறதென்று வின்ஸ்டன் சர்ச்சில் "தி ரிவர் வார்", (நதிப்போர்) என்ற தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆதி முதற்கொண்டே பிரிட்டிஷார் தலையிடாமல் இருந்திருந்தால் எகிப்தும் சூடானும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்திருக்க முடியும். ஆனால் பிரிட்டிஷ் தலையீடு காரணமாக ஒன்றுடன் ஒன்று விரோதித்து நதிச்சண்டையில் இறங்கி விட்டன. சூடானில் ஆதிக்கம்பெற பிரெஞ்சுக்காரர்களும் முயல ஆரம்பிக்கவே அவர்களை விரட்டும் காரணம்காட்டி பிரிட்டன் தன் ஆதிக்கத்தை சூடானிலும் ஸ்தாபித்துக்கொண்டது. எகிப்தின் நலனுக்காகவே சூடான் விஷயத்தில் தலையிட்டதாக பிரிட்டன் கூறி வந்தது.

சூடான் நிர்வாக விஷயமாக 1899ல் பிரிட்டனும் எகிப்தும் இரு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டன. பிரிட்டன் இந்த உடன்படிக்கைகளையும் மீறி தனக்குதான் எல்லா உரிமையும் என்ற ரீதியில் நடந்து வந்திருக்கிறது. எகிப்தின் சார்பில் எவ்வித உடன்படிக்கையையும் பிரிட்டன் செய்துகொள்ள உரிமையில்லை என்று இந்த உடன்படிக்கைகளில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் எதியோபியாவுடன், எதியோபியா–சூடான் எல்லை நிர்ணய விஷயமாக பிரிட்டன் எகிப்து சார்பில் ஒரு

உடன்படிக்கையைச் செய்து கொண்டது.

சூடான் பிறப்பிக்கும் அவசர சட்டங்கள் எகிப்திய மந்திரி சபையின் அங்கீகாரம் பெற்ற சட்டமாக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு 1912 வரை அமுல் செய்யப்பட்டு வந்திருக்கிறது. 1912-க்குப்பின் இதன்படி செய்ய சூடானிலிருந்த பிரிட்டிஷ் கவர்னர் மறுத்து விட்டார்.

இச்சமயத்தில் முதல் உலக யுத்தம் ஏற்படவே பிரிட்டன்,எகிப்து சூடான் இவைகளின் நிர்வாகத்தில் தன்னை ஸ்தாபித்துக்கொண்டு விட்டது.

1923-ல் துருக்கி எகிப்து சூடான் இவை மீது தனக்குள்ள உரிமையை விட்டுக் கொடுத்து விட்டது. இந்த உடன்படிக்கை லாஸேன் என்ற இடத்தில் கையெழுத்திடப்பட்டது.

எகிப்தில் புது அரசியல் சட்டப்படி 1924-ல் தேர்தல்கள் நடைபெற்றன. அப்போதும் பிரிட்டன், சூடான் மீது எகிப்து அதிக உரிமையைக் கொண்டாடாமல் இருக்கும் அளவுக்கு கண் காணித்து வந்தது. சூடானின் நிர்வாக செலவு எகிப்தினுடையது. ஆனால் அதன் மீது ஆதிக்கப் பொறுப்பு மட்டும் எகிப்துக்கு கிடையாது. இம்மாதிரி நிலை நீடித்து வந்தது.

பிரிட்டனின் பிடிப்பிலிருந்து எகிப்து விடுபட்டு சுதந்திரமடைந்த பின்பு சூடானின் எதிர்காலத்தை அந்நாட்டு மக்களே முடிவு செய்ய விட்டு விடுவது என்று பிரிட்டனும் எகிப்தும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

1953-ல் சூடான் தேசத்திற்கு ஒரு பார்லிமெண்ட் தேர்தெடுக்கப்பட்டது. சூடானுக்கு அரசியல் நிர்ணய சபையைத் தேர்ந்தெடுப்பதென்று இப்பார்லிமெண்டுக்கு பொறுப்பு வாய்ந்த சர்க்கார் முடிவு செய்தது.

ஆனால் எகிப்துக்கும் பிரிட்டனுக்கு மிடையேயுள்ள போட்டியின் விளைவாகவும் சூடானியரை பிரித்து தத்தம் பக்கம் சேர்த்துக் கொள்ள இருதரப்பினரும் முயற்சி செய்ததாலும் உடனடியாக சூடான் சுதந்திரப் பிரகடனம் செய்வதுதான் நல்லது என்று கருதப்பட்டு, சென்ற டிசம்பர் 19ல இது விஷயமாக சூடான் பார்லிமெண்ட முடிவு செய்தது.

அந்த முடிவின் விளைவே இந்த சுதந்திரப் பிரகடனம். இம்முடிவை எகிப்தும் பிரிட்டனும் ஏற்றுக் கொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும். ★

## சூரியனுக்கு கோவில்கள்

* தமிழ் நாட்டில் சூரியனுக்கு ஒன்பது இடங்களில் தனி சந்நதிகள் இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் திருவிட மருதூருக்கருகில் சூரியனார் கோவில் என்றே ஒரு இடம் இருக்கிறது.

* இந்தியாவில் ஏற்பட்ட முதல் சூரியன் கோவில். மூல்டானிலுள்ளதுதான். பாரசீகர்கள் தொடர்பு காரணமாக கட்டப்பட்ட இக்கோவில் ஔரங்கசீப் காலம்வரை அழியாமல் இருந்திருக்கிறது. இது 2000 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டது.

* பஞ்சாபிலிருந்து காஷ்மீர், ராஜஸ்தான், சௌராஷ்டிரம் முதலிய இடங்களில் சூரியனுக்கு கோவில்கள் ஏற்பட்டன.

* லலிதாதித்யா முக்தாபீடா என்கிற அரசன்தான் காஷ்மீர் கோயிலைக் கட்டியவன். சிக்கந்தர் புட்டீஸ்கான் என்பவன் இதை இடித்துத் தகர்த்து விட்டான்.

* ஒரிஸாவிலுள்ள கொனரக்கோவில் சூரியனுக்காகவே ஏற்பட்டது. கி. பி. 1238-ல் கலிங்கத்தை ஆண்ட முதலாவது நரசிங்கதேவன் இக்கோயிலைக் கட்டினான்.

* ஜெய்பூரிலுள்ள கல்தா என்ற இடத்தில் மலைமீது சூரியனுக்கு கோவில் இருக்கிறது.

# தமிழ் நாட்டுடன் காந்திஜி தொடர்பு

காந்திஜிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்பட்ட நெருக்கமான உறவு தென்னாப்பிரிக்காவிலேயே முதன் முதலாக ஏற்பட்டது. 1915-ல் காந்தியடிகள் முதன் முதல் சென்னைக்கு வருவதற்கு முன்பே தமிழ் நாட்டினருடன் தனக்கு தனி உரிமை இருப்பதாக எண்ணத் தொடங்கி விட்டார். இதை அவர்தன் சுய சரிதத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்,

தென்னாப்பிரிக்காவில் சென்னை வாசிகளான தமிழர் செய்த தியாகங்களை தம் தியாகங்களுக்கு எல்லாம் மேலானவை என்று 1915-ல் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடந்த கூட்டத்தில் கூறினார். அவர் குறிப்பிட்டதாவது: பதினேழு பதினெட்டு வயதுள்ள சிறுவர்களான நாகப்பனும், நாராயணசாமியும் எத்தனை கஷ்ட நஷ்டங்களையும் அவமானங்களையும் சுமந்து தாய் நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்ற முயன்றார்கள். பதினேழு வயதுப் பெண்ணான வள்ளியம்மை மாரிட்ஸ்பர்க் சிறையில் எலும்பும் தோலுமாக விடுதலை பெற்று நோய் வாய்ப்பட்டு மரணமூலம் விடுதலையும் பெற்றாள் ஒரே மாதத்தில், எட்டு ஆண்டுகளாக நீடித்த அப்போராட்டத்தில் சிறை செல்லாததே அவமானம் என்று கருதினார்களாம்.



தமிழ் நாட்டில் ஏழை மக்கள் ஒரே ஆடையுடன் படும் கஷ்டத்தைப் பார்த்து ஒரே ஆடையை உடுத்துவது என்று தீர்மானித்தார் காந்திஜி

ட்ரான்ஸ்வால் கிளர்ச்சியில் தமிழர்கள் செய்த தியாகத்தைப் போல வேறு எந்த இந்தியரும் செய்யவில்லை என்றும் அவர்களுக்கு என் திருப்தியை நன்கு உணர்த்தவாவது தமிழைப் படிக்க விரும்பினேன். அதைப் படிக்க படிக்கத்தான் அம்மொழியிலுள்ள அழகு அதிகமாகத் தெரிகிறது என்று காந்திஜி கூறினார். காந்திஜி திருக்குறளில் பொதிந்து கிடக்கும் அநேக உண்மைகளை உணர்ந்தார். அன்று முதல் திருக்குறளைப் பயில ஆசைப்பட்டார். அவரால் சில குறள்கள்

மட்டும் தான் கற்க முடிந்தது. வள்ளிக்காகவே தமிழ் கற்றேன் என்று அவர் கூறுவதுண்டு.

சாத்வீக சத்யாக்ரக யோசனை மகாத்மாவுக்கு உதயமானது அவர் சென்னையில் இருந்தபோதுதான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணிக்கு மகாத்மா மதுரை மீனுட்சி கோவிலில் பிரவேசித்தார். கணகணவென்று மணிகள் ஒலிக்க மேள வாத்தியங்கள் முழங்க, யானைகள் வீறிட காந்தி மகான் மீனுட்சி தரிசனம் செய்த அன்றே தமிழகம் மகாத்மாவையும் தன் கண்கண்ட தெய்வமாகத் தரிசித்தது.

அண்ணல் காந்திஜியின் தமிழக விஜயம் தமிழ்மக்கள் நினைவில் என்றும் நிலைத்திருக்கும். தேசப்பிதா காந்திஜியின் கொள்கைகளான அஹிம்ஸை, சத்யம், சகோதரத்வம் இவற்றை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்து நடப்பதே நம் ஜீவியலட்சியம். ★

## திங்கள் வருக!

காவியக் கலைகளுடன்
    கட்டுரைக் கலைகளும்
ஓவியக் கலைகளுடன்
    உள்ளுணர் கலைகளும்
சீவியக் கலைகளுடன்
    செந்தமிழ்ச் செழிக்கவே
தேவியற் கலை விளங்கத்
    திங்கள் பொங்கி வாழ்கவே !

தென்குமரி யன்னையும்
    திருத்தணி முருகனும்
முன்பழனி வேலனும்
    முது மதுரை வல்லியும்
பொன்னரங்க வள்ளலும்
    பொலிகவென்று வாழ்த்தவே
*தென்னரங்கு வெற்றி கொள்ளத்
    திங்கள் பொங்கி வாழ்வே.

சுத்தானந்த பாரதியார்

*தென்னுட்டு கலையரங்கு

# மரத்தின் தராதரம் அறிய புதிய முறை

பேராசிரியர் : வி. பி. நாராயண நம்பியார்

மரம் என்பதை தெரியாதவர்கள் இருக்க முடியாது. பிறந்தது முதற்கொண்டு இறக்கும் வரையில் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மரம் எப்படியாவது உபயோகப்படாமல் இருக்கமுடியாது பிறந்த குழந்தையை உறங்கவைக்க மரத்தினுல் ஆன தொட்டிலே வேண்டியிருக்கிறது. இறந்துபோன பின்பு சவத்தை தகனம் செய்யவும் மரக்கட்டைகள் வேண்டியிருக்கின்றன. ஆனுல் மரக்கட்டையை நாம் மதித்துக்கூட பார்ப்பதில்லை. கரடுமுரடான தோற்றம் கொண்ட மரத்தின் உட்புறத்தே யாருக்கும் எளிதில் புலப்படாத சில அபூர்வமான தன்மைகள் இருக்கின்றன. அவை விஞ்ஞானிகளுக்கே பெரும்புதிராக இருந்து வருகின்றன

நல்ல இருட்டில் ஒரு தேக்கு கட்டையை போட்டோ ப்ளேட் ஒன்றின் பின் வைத்து சில மணிநேரங்கள் விட்டு வைத்தால் அந்த பிளேட்டில் மரத்தின் மீதுள்ள உருவம் எல்லாம் அப்படியே பதிவாகியிருப்பதை சமீபத்தில் கண்டுபிடித்திருக்கிருர்கள். போட்டோ பிளேட்டில் உருவம் பதிய வேண்டுமானுல் வெளிச்சம் விழச் செய்யவேண்டும், நல்ல இருட்டில் கட்டையின் கோடுகள் பிளேட்டில் விழுந்திருப்பதால், மரத்திற்கே இம்மாதிரி ஒரு அபூர்வசக்தி இருக்கிறது என்பது தெரியவருகிறது. ஒரு போட்டோகிராபர் தன்படத்தை தானே எடுத்துக்கொள்ள முயல்வது போன்ற முயற்சி இது பிரபல புகைப்பட நிபுணர்கள் இதைப் பெரும் அதிசயமாகவே கருதினர்.

தேக்கு மரத்தின் வெளிப்புறக் கோடுகள் மிகத் தெளிவாக அந்தப் பிளேட்டில் விழுவது அதிசயத்திலும் அதிசயம்!

மரத்தின் இந்த குணத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர் பிரிட்டிஷ் விஞ்ஞானி வில்லியம் ஜே ரஸ்ஸல். இது 1897-ல் போட்டோ இலக்கியத்தில் இதற்கு ரஸ்ஸல் 'எபெக்ட்' என்று பெயர்.

ரஸ்ஸல் அநேக ஐரோப்பிய தேக்கு மரங்களில் இந்த ஆராய்ச்சியை நடத்தினுர். எல்லா மரத்திற்கும் இம்மாதிரி குணம் இருக்கிறது.ஆனுல் சில மரங்களுக்கு இந்த சக்தி மிக அதிகமாகவும் சில மரங்களுக்கு இந்த சக்தி மிகக் குறைவாகவும் இருப்பதாக அவர் கண்டுபிடித்திருக்கிருர்.



வி. பி. நாராயண நம்பியார்

இந்தியாவிலுள்ள தேக்கு மரங்களும் இதர மரங்களும் இந்த மாதிரி சக்தியுள்ளவையா என்பது இந்நாட்டில் சமீப காலம்வரை ஆராய்ச்சி செய்யப்படவில்லை.

இவ்விஷயமாக ஆராய்ச்சி இன்னும் எவ்வளவோ செய்யவேண்டும். நான் சேவை செய்யும் பச்சையப்பன் கல்லூரி பௌதிக லாபரேட்டரியில் 60 இந்திய தேக்கு மரங்களும் இதர மரக்கட்டைகளும் பரிசோதிக்கப்பட்டன. இவை துண்டாக்கச் செய்யப்பட்டு வழவழப்பாக செய்யப்பட்டு போட்டோ பிளேட்கள் முன்பு சுமார் 48-மணி முதல் 72 மணிவரை இருட்டில் வைக்கப்பட்டன. இந்த மரத் துண்டுகள் எல்லாம் ஒன்று பாக்கியில்லாமல் தன் உருவங்களை போட்டோ பிளேட்டில் பதியவைத்திருந்தன. இதைபற்றி நன்ருகத் தெரிந்திருக்க வேண்டுமானுல் எந்தரக மரங்களில் இந்த குணம் அதிகமாக இருக்கிறது எதில் இது குறைவாக இருக்கிறது என்பதெல்லாம் போன்ற விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும். இந்த லாபரேட்டரியிலுள்ள போடோ எலக்டிரிக் டென்ஸிடோமீட்டர் உதவியின் மூலம் இந்த சக்தியை அளவிடமுடியும்.

வெகுசீக்கிரம் உருவாகும்சக்தியுள்ள போட்டோ 'பிளேட்'டுகளை உபயோகித்துப் பார்த்தோம். அத்தகைய பிளேட்டுகளில் இந்தப் பிரதி விழுவதற்கு நேரம்தான் பிடிக்கிறது. ரஸ்ஸல் "சீக்கிரம் உருவாகும் சக்தியுள்ள 'பிளேட்'டுகளை உபயோகித்தால் உருவம் தீர்க்கமாக விழுகிறது" என்ருர். ஆனுல் இந்த லாபரேடரியில் செய்த ஆராச்சியில் இது நிரூபிக்கப்படவில்லை. முடிவு நேர் எதிராக இருக்கிறது.

மரத்தின் இந்த சக்திக்கு ரஸ்ஸல் கூறும் காரணமாவது: மரத்தினுள்ள ரெஸின் ஆக்ஸிடைஸ் ஆகும் போது ஹைட்ரஜன் பர்ஆக்ஸைடை உற்பத்தி செய்கிறது. அது போடோ பிளேட்டை பாதித்து உருவம் விழச் செய்கிறது. மார்ஷல்வார்ட் என்கிற விஞ்ஞானி மரத்திலுள்ள லிக்னின்ஸ், டானின்ஸ் என்ற சத்துகளே இதற்குக்காரணம் என்கிருர்.

இதுசம்பந்தமாக எங்கள் லாபரேட்டரியில் ஆராய்ச்சி செய்து வருகிருேம். இன்னும் முடிவு தெரியவில்லை.

இந்த மரத்தின் தன்மைக்கு எது காரணமாக இருந்தபோதிலும், மின் சாரசக்தி (ரேடியோ ஆக்டிவிடி) என்னமோ இதற்குகாரணமில்லை. பிளேட்டுக்கும் மரத்திற்குமிடையே கண்ணுடி, மைகா, ஸெலோபேன் காகிதம் இவை வைக்கப்பட்டால் உருவம் பதிவாவதில்லை. பாங்ரோமாடிக் எமல்ஷனிலும் உருவம் பதிவதில்லை, ரேடியோ ஆக்டிவ் தன்மையாக இருந்தால் இவைகளையும் தாண்டி உருவம் 'பிளேட்'டில் பதியும்.

'ரஸ்ஸல் எபெட்'டைக் கொண்டு மரங்களின் தராதரத்தை நிர்ணயித்து விடலாம். இந்த சக்தியைக்கொண்டு மரத்தின் வயதுகூட கண்டுபிடித்து விடலாம். இதுவரை மரங்களின் வயதைக் கண்டுபிடிக்க சரிவர வழிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

நம் நாட்டில் சந்தனமரம் மிக விசேஷமாக உபயோகிக்கப்படுவதாகும் இந்த மரம் போல் தோற்றமளிக்கும் போலி சந்தன மரங்களும் உண்டு. எது உண்மை சந்தன மரம், எது போலி சந்தனமரம் என்பதை 'ரஸ்ஸல் எபெக்ட்' மூலம் கண்டுபிடித்து விடலாம்.

என் வசத்தில் உயர்ரக கருங்காலி, போலிகருங்காலிமரங்கள்எவ்வளவோ இருக்கின்றன. பார்த்தால் எது உயர்வு, எது போலி என்று சொல்வது மிகக் கஷ்டம். இத்துறையில் இன்னும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. இப்போது செய்துள்ள ஆராய்ச்சிகள் ஆரம்பம் தான்.

---

**போர்த்துகீஸிய சொற்கள்.**

ஜன்னல், சாவி இவ்விரண்டும் போர்த்துகீஸியரிடமிருந்து வந்த சொல்லாகும். இவை தமிழ் சொற்கள் அல்ல. ஜன்னல் தமிழ் இலக்கியங்களில் 'காலதர்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது சாவிக்குப் பதில் திறவுகோல் தமிழில் என்றிருந்தது. வான் கோழியை இந்தியாவிற்கு கொண்டுவந்தவர்களும் போர்த்துகீஸியாகளே.

# குடுமியாமலை சங்கீத கல்வெட்டுகள்

க. முத்துசாமி

நம் தமிழ் நாட்டில் சங்கீதமும் சிற்பமும் பெருமளவில் வளர்ந்து உலகத்தை பிரமிக்க வைத்து வருகிறது. இதைப் போல் எந்த நாட்டில் எந்த மக்களிடையேயும் காண்பதறிது.

தமிழ் மக்களுக்கு உலகத்திலே ஏற்பட்ட தனிச்சிறப்பு மலைகளின்மீது தமிழ் சிற்பிகளும், கட்டிடக் கலைஞர்களும் செதுக்கி கட்டிய கோவில்கள் தான்! அவைகள் உலகம் அழியும் வரை சிரஞ்சீவியாக இருந்து நம்மை பிரமிக்க வைக்கின்றன.

தஞ்சை பிரஹதீஸ்வரர் கோவிலின் கட்டிடச் சிறப்பை விளக்கி திராவிட கட்டிடக்கலையின் மகோன்னத அம்சம் என்று என்ஸைக்ளோ பீடியா பிரிடானிகாவில் இக்கோவிலின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. பெர்கூஸன், லாங்ஹர்ஸ்ட், வின்ஸென்ட் ஸ்மித், ஆனந்த குமாரஸ்வாமி போன்ற மேதைகள் நமது கலையின் சிறப்பை வெளிநாடுகளுக்கு எடுத்துக் காட்டி 'தமிழா தலை திமிர்ந்து நில்லடா!" என்ற பெருமையை நமக்கு அளித்தனர்.

தென்னாட்டிலே தமிழகத்தில் தான் கர்னாடக சங்கீதம் வளர்ந்து இன்று அழியா வெளிச்சமாகப் பிரகாசிக்கின்றது. மஹேந்திரவர்மன், கோவிந்த தீக்ஷதர், வேங்கடமஹி, தீர்த்த நாராயணஸ்வாமி, மேலட்டூர் வெங்கடரமண பாகவதர், ஸ்ரீ தியாகபிரும்மம், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், பின்னர் மானம்புச்சாவடி ஸ்ரீ வெங்கட சுப்ரமணியம், பட்டணம் சுப்ரமணிய அய்யர், மஹா வைத்யநாத சிவன், கோபால கிருஷ்ணபாரதி முதலிய வாக்கேயக் காரர்கள் தோன்றி கர்னாடக சங்கீதத்தின் பெருமையை இமயமலையின் சிகரத்திற்குமேல் உயர்த்தி விட்டனர். இம்மகான்கள் யாவரும் தமிழ்நாட்டுச் செல்வப் புதல்வர்கள்.

இவர்களில் பல்லவ அரசரான மஹேந்திரவர்மனை தமிழ்நாடும், தமிழ் மக்களும் என்றும் மறக்கமுடியாது. கற்களை உடைத்து அதில் கோவில்கள் கட்டுவதும், சிற்பங்களைச் செதுக்குவதுமான வேலைகளில் ஆதி கர்த்தாவாகிய விளங்கிய மஹான் இவ்வரசரே. மற்றும் நமது லயத்திற்கு சங்கீர்ண ஜாதி என்று சங்கீர்ண லகு தாளத்தை அமைத்து தந்த பெரியார் இவ்வரசரே. இவருக்கு சங்கீர்ண ஜாதி என்ற பிருதும் உண்டு. இப்பெயரை காலஞ்சென்ற ஸ்ரீ கோபிநாதராவ் 'தலப்பட்டஜாதி' என்று அர்த்தம்புரியாமல் குறிப்பிட்டதை பின்னர் சரித்திர ஆராய்ச்சியாளர்களைப் போன்ற ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியார் சங்கீர்ண ஜாதியைக் குறிக்கும் என்ற பொருளைக் கொடுத்தது மிகப் பொருத்தமாகும். மேலும் மஹேந்திரவர்மன் மட்டவிலாஸ பிரஹஸனு என்ற ஹாஸ்ய நாடகத்தை எழுதியுள்ளார். மஹேந்திரவர்மனுக்கு 'சித்திரக்காரப் புலி' 'விசித்திர சித்தன்' என்ற சில சிறப்புப் பெயர்கள் உண்டு. புதுக்கோட்டையிலிருந்து சுமார் 12 மைல்களுக்கு அப்பாலுள்ள குடுமியாமலையில் மஹேந்திரவர்மன் இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பு செதுக்கிய கல்வெட்டு எழுத்துக்கள் இன்றும் காணப்படுகின்றன.

இந்த சங்கீத கல்வெட்டு எழுத்துக்கள் சுமார் 52 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டன. இந்த எழுத்துக்கள் 'எபிகிராபிக இண்டிகா' என்ற கல்வெட்டு எழுத்துக்களை பிரசுரிக்கும் சஞ்சிகையில் வெளியிடப்பட்டன.

இக்கல்வெட்டு எழுத்துக்கள் 13 அடி நீளம் 14 அடி அகலமுள்ள மலையின் அடிபாகத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு மிக அற்புதமான வலம்புரி கணேசரும் செதுக்கப்பட்டிருக்கின்றது. புதுக்கோட்டை ராஜ்ய சஞ்சிகையிலும் இக்கல்வெட்டுகளின் விவரங்கள் பிரசுரிக்கப்பட்டன.

"சித்தம் நாம சிவாயா" என்று சிவனைப் பிரார்த்தித்த பிறகு இந்தக் கல்வெட்டு எழுத்துக்கள் ஏழு பகுதியில் செதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் அனேக சிறிய பகுதிகள் காணப்படுகின்றன. நான்கு ஸ்வரங்கள் அடங்கிய 16 செட்டுகள் இதில் காணப்படுகின்றன.

இந்த ஏழு பகுதிகள் கீழ்கண்ட தலையங்கத்தில் காணப்படுகின்றன.

(1) மத்யமக்கிராமே சதுஸ் பிரஹார ஸ்வாரகமாஹா; (2) ஷட்ஜகிராமே சதுஸ் பிரஹார ஸ்வாரகமாஹா; (3) ஸாதவே சதுஸ் பிரஹார ஸ்வாரகமாஹா; (4) ஸாதாரிதே சதுஸ் பிரஹார ஸ்வாரகமாஹா; (5) பஞ்சமே சதுஸ்பிரஹார ஸ்வாரகமாஹா; (6) கைஸிக மத்யமே சதுஸ் பிரஹார, ஸ்வாரகமாஹா; (7) கைஸிகே சதுஸ் பிரஹார ஸ்வாரகமாஹா.

இந்தக் கல்வெட்டு எழுத்துக்களின் வலது புறத்தின் கோடியில் கீழ் கண்ட எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன:

"ருத்ராசாரியா சிஷ்யேன பிரம மஹேஸ்வரேன ரச்ன சிஷ்ய ஹிதார்த்தம் கிருதஹ ஸ்வாரக மாஹா"

இதன் பொருள்: ஒரு அரசரால் சிஷ்யர்களின் நன்மைக்காக ஸ்வராகமங்கள் செய்யப்பட்டன. இவ்வரசர் ஒரு மஹேஸ்வரர். ருத்ராசாரியாரின் சீடர்."

இவைகளின் கீழ் தமிழில் கீழ்கண்ட எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன:

"எட்டிற்கும், ஏழிற்கும் இவை உரிய" வலப்புரி கணேசர் மேல் சங்கீத கல்வெட்டு எழுத்துக்களின் வடபாலில் 'பரிவாதினி' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 'பரிவாதினி' என்றது பெரிய வீணை வாத்யம். இதன் கம்பிகள் தங்கத்தினால் செய்யப்பட்டவை என்பது ஓர் மரபு.

கல்வெட்டு எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ள ஸ்வரங்கள் ஏழு அல்லது எட்டு கம்பிகள் உள்ள வீணையில் வாசிக்கலாம் என்பது 'எட்டிற்கும் ஏழிற்கும் இவை உரிய' என்பதற்குப் பொருள்.

மேற்கண்டுள்ள ஏழு ஸ்வர தலையங்கங்கள் அக்காலத்தில் கையாளப்பட்ட ராகங்கள் என்று டாக்டர் பந்தர்க்கார் ஊகித்து தன்னுடைய அபிப்பிராயத்திற்கு சான்ருக 'நாரத ஸிக்ஷாவிலும் சங்கீத ரத்னகரத்திலும் இவைகள் காணப்படுவதாகக் கூறுகிருர்.

பின்னர் தோன்றிய சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் இவைகள் சப்தஸ்வரங்களின் ஸ்ருதி பேதங்களை விளக்குகின்றதென்றும் மஹேந்திர வர்மன் இவைகளை 22 ஸ்ருதிகளின் அடிப்படையாகக்கொண்டு அமைத்திருக்கவேண்டுமென்றும் கருதுகின்றனர்.

இப்பொழுது கர்னடக சங்கீதத்தில் கையாளப்பட்டு வரும் ரா, ரி, ரு (ரா—சுத்த ரிஷபம்; ரி, சதுர்ஸ்ருதி ரிஷபம் ஷட்ஸ்ருதி ரிஷபம் அல்லது சுத்தகாந்தாரம்) கா, கி, கு, (சுத்த காந்தாரம் சாதாரண காந்தாரம் அந்தர காந்தாரம்) மா, மி, (சுத்த மத்யமம், பிரதிமத்யமம்) தா, தி, து. (சுத்தவதவதம், சதுஸ்ருதி தைவதம், ஷட்ஸ்ருதி தைவதம்) நா, நி, நு, (சுத்த நிஷாதம், கைசிக நிஷாதம், காகலி நிஷாதம்) முதலியவைகளுக்கெல்லாம் ஆதிகர்த்தா குடுமியாமலையின் சங்கீத கல்வெட்டுக்களைப் பொறித்த மஹேந்திரவர்மன் என்பதற்கு ஐயமில்லை.

மஹேந்திரவர்மன் சிருஷ்டித்த ர. ரி. ரு போன்ற ஸ்வரங்களின் அமைப்பையும் பின்னர் வேங்கடமஹியும் தனது 72 மேளகர்த்தராகத்தை அமைக்க உபயோகித்தார் என்று திண்ணமாகக் கூறலாம். வேங்கடமஹியும் நமது சங்கீத சாஸ்திரம் என்று கூறப்படும் சங்கீத சம்பிரதாய ப்ரதர்ஷிணியிலும் ராக லக்ஷணங்களை விளக்குகையில் மஹேந்திவர்மன் கையாண்ட ஸ்வரக்குறிக்கோளை கையாண்டிருப்பது குறிப்பிட வேண்டிய மற்றொரு அம்சம்.

குடுமியாமலைக்கு 14 மைல் தூரத்திலுள்ள திருமயம் சிவன் கோவிலில் காலஞ்சென்ற கோபிநாதராவ் சங்கீத கல்வெட்டு எழுத்துகள் சிலவற்றைக் கண்டுபிடித்தார், ஆனல் பிற்கால பாண்டிய மன்னர்கள் அவற்றின் மகிமையை உணராமல் அழித்திருப்பது சங்கீத சரித்திரத்திற்குப் பெரும் நஷ்டம். ★

# மதுரை மாநகரம்

வ. வே. சு. ஐயர்

மதுரை! பெயரே எவ்வளவு மதுரமாக இருக்கிறது. அப்பேரினுள் வெள்ளியம்பலக் கடவுளின் திருநடனம் திகழ்கின்றது. பாண்டியரின் கோலாகலமான பராக்கிரமங்கள் ஒளி வீசுகின்றன. முச்சங்கங்களின் தண்டமிழ் மணம் கமழ்கின்றது. சமயக் குரவர்களின் திருவடிச் சுவடுகள் பொன்னெனப் பொலிகின்றன. நாயகர்களது சிறப்பும் ஈகையும் சிற்ப அபிமானமும் பிரகாசிக்கின்றன. பாளையக்காரரின் தேசாபிமானமும் ஸ்வதந்திர அபிமானமும் மலர்ந்து மனதைக் கவர்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலே பாண்டியரின் புதல்வியாகத் தோன்றி எம்மனோரையெல்லாம் ஆட்கொண்டு வருகிற மீனாக்ஷியம்மையின் திருவருட் பிரகாசமும் கோடி சூரியப்பிரகாசத்துடன் விளங்குகின்றன.

மதுரையை நெருங்கியதும் கோபுரமே உருப்பெற்று என்னைவா என்று அழைப்பதுபோலிருந்தது...


சிங்களம், லக்ஷத்தீவு, மாலத்தீவு முதலிய தீவுகளெல்லாம் தண்தமிழ் நாட்டின் எழிலுடை பாகங்களாக நிற்க குமரியாறு கொந்தளித்து ஓட, தமிழ் மணம் எங்கனும் பரவிவர நாலாயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்பது புலவர்கள் தந்தமிழ் மறவ, தமிழ் மக்கள் பொருளாலும் புகழாலும் அறத்தாலும் மறத்தாலும், அன்பாலும் இன்பாலும் மண்ணுலகில் வாழும் தேவர்போல வாழ்ந்து வந்தனர்...

குமரியாறு பெருகிற்று, அதனோடு இணைந்திருந்த 49 ஆறுகளும் கொதித்துக்கொண்டு எழுந்தன. பூமி குமுறிற்று; கடல் பொங்கியது. என்னே தமிழ்நாட்டின் துயரம். கடல் கொண்டதால் தமிழ்நாடு அளவில் சிறுத்து விட்டது, சோமசுந்தரக் கடவுள் அருள் சுரந்தது. பழந்தமிழ் நாடு அழிந்தும் தமிழின் பெருமை உயர்ந்தது. அரசர்கள் புலவர்கள், வீரர்கள் இவர்களால் உண்டான புகழ் ஆத்மவேகம், தர்மசக்தி இவை குன்றலாயிற்று, ராமாயண காலம் முதல் ஓங்கித் தழைத்து வளர்ந்து வந்த பாண்டிய வமிசமாகிய ஆலமரம் சாய்ந்துவிட்டது...

அப்போதும் மதுரையின் மாண்பு குன்றவில்லை. தமிழ் நாட்டை காக்க நாயகர்கள் தோன்றினர், சிதறிப்போன தமிழ் சக்தியை தமிழ் தாயினின்று பிரிந்து போயிருந்த தெலுங்கு நாட்டவர் ஒன்றுபடுத்தினர். நாயகர் வமிசத்தவர்கள் ஆளுகையின் சின்னங்கள்தான் இன்று நமக்கு நம் கீழ் நிலையை கொண்டு குத்திக் காட்டி நம்மை என்று விழிக்கப் போகிறீர்கள் என்று கேட்டுக்கொண்டு நிற்கின்றன.

ஆலயத்தில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்கள், சிற்றுளி வேலைகள் நிரம்பியதூண்கள். திருமலை நாயகன் மஹாலின் கம்பீரமான அமைப்பு, தோற்றம், இவைகளெல்லாம பார்த்துக்கொண்டிருந்த எனக்கு தமிழ் நாட்டை மறுபடியும் அவளுடைய உச்சமான நிலைக்கு என்றைக்கு கொண்டுபோகப் போகிறோம் என்கிற ஏக்கமும், பயப்படாதே கொண்டு வந்துவிட முடியும் என்கிற தைரியமும் ஒருங்கே உண்டாயின. ஏக்கம் இன்றிருக்கும். நாளை போய்விடும். ஆனால் இவைகளின் நினைவு நம் மனதில் நின்று நமக்கு தைரியத்தை வளர்த்து நமக்கு ஆற்றலையும் அளிக்கும்.

(வ. வே. சு. ஐயரின் பால பாரதியில் வெளியான கட்டுரையில் சில பகுதிகள்.)




# மதுரை


படக் கட்டுரை


திருவாலவாய் என்ற மதுரையம்பதியில் ஈசன் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் புரிந்தார் என்பது புராணம். மூன்று தமிழ்ச் சங்கங்களுக்கு இருப்பிடமாயிருந்தது மதுரை மாநகரம். தற்போது தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாய் விளங்கும் இந்நகரின் நடுநாயகமாக விளங்குவது மீனுக்ஷியம்மனின் பிரும்மாண்டமான கோவில்.


போட்டோக்கள் : சந்தாமியான்




மீனாட்சி அம்மனின் சந்நதி. கிழக்கு நோக்கி அலங்காரமாக அமைக்கப் பட்டுள்ளது. சுந்தரேஸ்வரர் சந்நதிக்கு எதிரே பெரிய கோபுரம் காணப்பட்டாலும் மதுரை மாநகருக்கு தெய்வமாக விளங்குவது மீனாட்சி அம்மன் தான். அம்மன் சந்நதியைக் கடந்து உள்ளே செல்வோமானால் பொற்றாமரைக் குளத்தை அடையலாம்.









கோபுரங்களையும் குளத்தையும் அமைத்த சிற்பிகளின் அற்புதக் கைத்திறன் கோயில் முழுவதுமே வியாபித்து நிற்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள நான்கு தெருக்களும் சித்திரை மாசி மாதங்களைப் பின்பற்றி பெயரிடப் பட்டிருக்கின்றன. இத்தெருக்களில் எங்கு நின்று பார்த்தாலும் கம்பீரமான கோபுரங்கள் கண்முன் தோன்றி மீனாட்சி அம்மனின் புகழைப் பறைசாற்றும்.




1623 முதல் 1659-வரை மதுரையை ஆண்ட திருமலை நாயக்கன் மதுரையின் சரித்திரத்தில் ஒரு நிரந்தர ஸ்தானத்தைப் பெற்றான். "மால்" அல்லது "மஹால்" என்று சொல்லப்படும் அவனது அரண்மனைக் கட்டிடம் தற்போது நியாய ஸ்தலமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.



யானைகள் கட்டுவதற்கென பெரிய பெரிய தூண்கள் வரிசையாகக் கட்டப்பட்டன. கூறையின் விதானங்களில் வர்ணப் பூச்சுகள் அன்று செய்தவை இன்று செய்தவைபோல் பூரணப் பொலிவுடன் விளங்குகின்றன.










மீனாட்சியம்மன் கோவிலுக்கு எதிரே புதுமண்டபத்தில் காணப்படும் கம்பீரமான சிலைகளில் ஒன்று ..ஈசன் அறுபத்தி நான்கு திருவிளையாடல்கள் புரிந்ததை சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்கள், பொற்றாமரைக் குளத்தின் உட்புறப் பிரகாரத்தில்.



மதுரைக்கு அருகே மூன்று மைல் தூரத்தில் உள்ள திருப்பரங்குன்றம் முருகனின் திவ்ய ஸ்தலங்களில் ஒன்று. மலையை ஓரளவு குடைந்து இந்த ஆலயத்தை நிர்மாணித்திருக்கிறார்கள். அங்கும் சிற்பிகளின் கைத்திறம் வெகுவாக வெளிப்படுகிறது.








பழைய மதுரை நகரைச்சுற்றி பல மைலகளுக்கு நகர எல்லை பரவி விட்டது. மதுரைமா நகரத்தின் ஒரு பகுதியைக் காட்டும் மேலேயுள்ள படம் 220 அடி உயரத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். மதுரையில் நெசவுத் தொழில் முக்கியமான தொழில்களில் ஒன்று. மதுரை கைத்தறிப் புடவைகள் நாடெங்கும் பெயர் பெற்றவை.

கீழே :- மதுரைக்கு அடுத்து 3 மைல் தூரத்தில் உள்ள மாபெரும் வண்டியூர் தெப்பக்குளம்.



# கோவா

**அடிமைத்தளையிலுள்ள அந்நியத் திட்டு**

**கோவா** பிரச்னை ஓயாத தொல்லை தரும் பிரச்னையாக இருந்து வருவதற்கு போர்த்துகீஸியர்களின் சன்டித்தனமே காரணமாகும்.

இவர்கள் அங்கு காலடி எடுத்து வைத்து 450 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்பதைக் காட்டி அனுபவ பாத்யம் கொண்டாடுகிறார்கள்.

இந்தியாவில் வியாபார நிமித்தமாக வந்த அந்நியநாட்டினர்களில் முதலில் வந்தவர்கள் போர்த்துகீஸியரே. வாஸ்கோடகாமா என்பவர் ஸான் காப்பிரியல் என்ற கப்பலில் 1498 மே 11-ந்தேதி கள்ளிக் கோட்டையில் காலடி வைத்தார். இவர் வந்தபோது அங்கு ஜாமொரின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஸான் காப்பிரியலும் வேறு சில கப்பல்களும் பல பீரங்கிகளை ஏற்றி வந்தன. அக்கப்பல்கள் வரும் வரை இந்து மகா சமுத்திரம் எல்லாருக்கும் சொந்தமாகத்தான் இருந்தது.

போர்த்துகீஸியர்கள் தொடர்ந்து தம் நாட்டு வீரர்களை இந்தியாவிற்கு கடல் மார்க்கமாக வழி கண்டு பிடிக்க அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் கொலம்பஸ். அவர் கப்பல் வழி தப்பி போனதால் அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டது. முதன் முதலில் இம்மாதிரி கடல் பிரயாணங்களை மேற்கொண்டதன் காரணமாக சமுத்திரங்கள் எல்லாம் தங்களுக்கு சொந்தம் என்று உரிமை கொண்டாடலானார்கள்.

வாஸ்கோடகாமா ஜாமொரினிடம் வியாபாரம் செய்ய அனுமதி பெற்று போர்ச்சுகலுக்குத் திரும்பினார். இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவது என்ற கதையாக, அவருக்குப்பின் காப்பிரியல் என்பவர் 33 கப்பலகளுடனும் 1500 பேர்களுடனும் இந்தியாவிற்குப் புறப்பட்டார். ஆனால் ஆறு



## கோவா சத்யாக்ரகம்

கோவாவில், 1852, 1871, 1895, 1912 ஆகிய வருஷங்களில் மக்கள் புரட்சி செய்திருக்கிருர்கள். 1946-ல் சத்யாக்ரக இயக்கத்தை ஆரம்பித்தவர் லோகியா.

★ இந்தியா சுதந்திரம் அடையப் போகிறது என்பதை எதிர்பார்த்து 1946-லேயே கோவா மக்களால் சத்தியாக்ரகம் ஆரம்பிக்கப்பட்டது. முயற்சி தோல்வி யுற்றது.

★ 1954-ல் மீண்டும் கோவா சத்தியாக்ரகம் தீவிரமாகத் துவக்கப்பட்டது. கோவா வாசிகளல்லாதவர் சத்தியாக்ரகத்தில் சேருவதை சர்க்கார் ஆதரிக்கவில்லை.

★ 1955 மே, ஜூன் மாதங்களில் கோவாவில் நுழைய மறுத்த சத்தியாக்ரகிகள் கடுமையாக நடத்தப்பட்டனர். ஆகஸ்ட் 15-யன்று கோவாவில் நுழைந்த சத்தியாக்ரகிகள்மீது போர்த்துகீஸிய சர்க்கார் அடக்குமுறையைக் கையாண்டது நினைவிருக்கும்.

★ இந்தியர்கள் கோவா சத்யாக்ரகத்தில் ஈடுபடக்கூடாது என்று அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி தீர்மானித்து சர்க்காரை ஆதரித்தது.

கப்பல்களே இந்தியாவை அடைந்தன. ஜாமொரின் அடக்க முயன்ற காப்பிரியல் உதைபட்டு ஓடி கொச்சியில் குடியேறினர். மூன்ருவது படையெடுப்பு வாஸ்கோடகாமாவின் தலைமையிலேயே நடைபெற்றது. இவர் வழியில் கண்ட கப்பல்களை எல்லாம் கொள்ளை யடித்து அவைகளுக்கு தீ மூட்டிவிட்டார். ஜாமொரின் படையுடன் நடைபெற்ற போரில் வாஸ்கோடகாமா தோற்று ஐரோப்பாவுக்கு ஓடினர்.

போர்த்துகீஸியரிடமிருந்து ஓயாது தொல்லை ஏற்பட்டுக்கொண்டேயிருந்ததால் ஜாமொரின் எகிப்து சுல்தானுடைய உதவியை நாடினர். அந்த சுல்தான் 1500 ஆட்களோடும் பீரங்கிகளோடும் ஒருவனை அனுப்பினர். போர்த்துகீஸியர் இத்தடவையும் உதைபட்டு ஓடினர் இது 1507-ல் நடந்தது. மீண்டும் இரண்டு வருஷங்கள் கழித்து போர்த்துகீஸியப் படையூவைத் தாக்கியது. மாலிக்கயஸ் என்ற ஐந்தாம் படையாள் உதவி மூலம் போர்த்துகீஸியர் கைவலுக்க ஆரம்பித்தது. இதைக் கண்ட எகிப்து சுல்தான் மனம் சோர்ந்து தன் நாட்டிற்குத் திரும்பி விட்டான். ஆகவே முடிவான போர் நடைபெருமலேயே போர்த்துகீஸியருக்கு வெற்றி ஏற்பட்டது.

பிரிட்டிஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், டச்சுக்காரர்கள் வியாபாரம் ஆரம்பித்தே சிறுகச் சிறுக அதிகாரத்தை கைப்பற்றினர். ஆனல் போர்த்துகீஸியர் படையெடுக்கவே ஆரம்பித்துவிட்டனர்! அந்த சண்டித்தனத்தினலேயே அவர்கள் இன்று கோவாவை விட்டுச் செல்ல மறுக்கின்றனர்.

வெகு காலத்திற்கு கள்ளிக்கோட்டைக் கருகில் ஜாமொரின் கடற்படை எந்த அந்நியரையும் அண்டவிடவில்லை.

கள்ளிக்கோட்டைக்குத் தெற்கிலுள்ள பொன்னனி என்ற துறைமுகத்தை 1524-ல் போர்த்துகீஸியர் தாக்கினர். இப்போருக்குப் பின் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. ஆனல் போர்த்துகீஸியர் ஒப்பந்தத்தை மீறி போர் ஆரம்பித்தனர். ஜெர்மனி படையைச் சேர்ந்த குட்டி அலி என்பவர் போர்த்துகீஸியரை விரட்டியடித்தார். ஆனல் நான்கு வருஷங்கள் கழித்து போர்த்துகீஸியர் பெரும் படையுடன் வந்து குட்டிஅலியைப் பிடித்து விட்டனர். அவர் மகன் குஞ்சு அலி போரைத் தொடர்ந்து நடத்தியதுடன் இலங்கையிலுள்ள போர்த்துகீஸிய இடங்களையும் தாக்கினர், இவர் ஒரு வருஷத்திற்குள் சுமார் 50 எதிரிக் கப்பல்களைப் பிடித்து விட்டார்,

இதற்கிடையே ஜாமொரின் துருக்கி சுல்தான், காம்பே அரசர் இவர்களு

டன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். இதனால் பிரமாதப் பலன் எதுவும் ஏற்பட்டு விடவில்லை. 1558-ல் கண்ணனூர் அருகே மீண்டும் போர் மூண்டது. அதில் குஞ்சு அலி இருந்த கப்பல் மூழ்கியது. லூயி டிமெல்லோ என்பவர் கள்ளிக் கோட்டையை முற்றுகை யிட்டார். இந்த முயற்சியின் பலன் தெரியுமுன் டிமெல்லோ திருப்பி அழைக்கப்பட்டார்.

போர்த்துகீசியர்கள் இதற்குள் மேற்கு கடற்கரையில் சில இடங்களைப் பிடித்து புன்னைக்காயல் என்ற இடத்தில் ஒரு கோட்டையையும் கட்டிக் கொண்டு ஒரு கவர்னரையும் நியமித்தனர். அப்போது கவர்னராக அனுப்பப்பட்டவர் பெயர் ஆல்புகர்க், இவர் 1510-ல் கள்ளிக்கோட்டையைத் தாக்கினர். இவர் படுதோல்வி அடைந்தார். அப்போதுதான் அவர் கண்ணில் பட்டது கோவா, அங்கே அருமையான துறைமுகம் இருப்பதை அவர் கண்டார். 1510-ல் பிப்ரவரி 27வ சுலபமாக அந்த ஊரை ஆல்புகர்க் பிடித்து விட்டார். அங்குள்ள சிற்றரசர்கள் பலர் அவரை எதிர்த்து விரட்டினர். ஆறு மாதங்கள் கழித்து மீண்டும் கோவாவைப் பிடித்து பழிக்குப்பழி வாங்கினர்.

ஆல்புகர்க்கின் திட்டங்களுக்கு கோவா நல்ல தளமாக விளங்கிற்று. அங்கு ஒரு கோட்டை கட்டப்பட்டு நிரந்தரமாக அரசாங்கம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## காட்டு மிராண்டிகள் !

போர்த்துகீசிய சரித்திர ஆசிரியரான கெபிரியா என்பவனே போர்த்துகீசியர் செய்த கொடுமைகளை எழுதிவைத்திருக்கிறான்.

வாஸ்கோடகாமாவுக்கு மக்களை சித்ரவதை செய்து சாகடிப்பதில் மனப்பூர்வமான திருப்தி!

டி ஆல்மிடோ என்பவன் தன்னிடம் சிக்கிய விரோதிகளின் கண்ணைத்தோண்டி எடுத்து விடுவானாம்!

ஆல்புகர்க்கிற்கு பெண்களின் ஸ்தனங்களையும் மூக்கையும் அரிந்து விடுவதில் திருப்தி!



ஆல்புகர்க்

இந்துமகா சமுத்திரத்தில் போர்த்துகீசியர்களை தட்டிக் கேட்க ஆளில்லாமல் போய்விட்டது. ஆகவே போர்த்துகீசியர் கடலில் செய்த அட்டகாசம் சொல்ல முடியாத அளவுக்கு இருந்தது.

கள்ளிக்கோட்டை ஜாமொரினுக்கு விஷம் கொடுக்கும்படி அவரது பட்டத்துக்குரிய இளவரசனுக்கு ஆலபுகர்க யோசனை கூறினாராம். 1513-ல இதை எப்படியோ சாதித்து விட்டார் இவர். கொள்ளை, கொலைக்கு அஞ்சாதவர் என்பது இதிலிருந்து தெரியவில்லையா? அன்று ஆல்புகர்க் போட்ட அஸ்திவாரம் இன்று ஆட்டங் காணத் தொடங்கி யிருக்கிறது.

கோவா மிகப்பழமையான நகரம். அதை முன்பு ஹிந்து ராஜாக்கள் ஆண்டார்கள். சில புராணங்களிலும் சாஸனங்களிலும் கோவ், கோவாபுரி, கோமந்த் என்ற பெயர்கள் காணப்படுகின்றன. கடம்பவம்சத்து அரசர்களும் அதன்பின் முஸ்லிம்களும் அதை ஆண்டு வந்திருக்கின்றனர். 1370-ல் இது விஜயநகர ராஜ்யத்தில் சேர்ந்

திருந்ததாகத் தெரிகிறது. பின்னர் பிஜபூர்சுல்தான் இதை கைப்பற்றினர்.

கோவாவின் தலைநகர் கோவா. இவற்றுடன் பஞ்ஜிம், அங்டிவா தீவுகள், டையூ, டாமன் இவைகளும் சேர்ந்துள்ளன. இதன் விஸ்தீர்ணம் 3983 சதுர கிலோமீட்டர்கள் (1537 சதுரமைல்) ஜனத்தொகை 6,24,177 பேர். சுமார் 507 உப்பளங்கள் இப்பிரதேசத்தில் உள்ளன. 1906ல் மாங்கனிஸ் அகப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 21 சுரங்கங்களில் வேலை நடைபெற்று வருகின்றன.

போர்ச்சுகல் 12 வது நூற்றுண்டு முதற்கொண்டே சுதந்திர நாடாக இருந்து வருகிறது. கடைசி மன்னனின் பெயர் இரண்டாவது மனுயெல் என்பது. 1910 அக்டோபர் 5-ந்தேதி குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஒரு சிறு புரட்சிக்குபின்பே இது ஏற்பட்டது. இப்போதுள்ள அரசியல் சட்டம் 1933 மார்ச் 19 ந்தேதி அங்கீகரிக்கப்பட்டது.

இப்போதுள்ள பிரதம மந்திரி டாக்டர் அன்டோனியோடி ஆலிவீராஸலாஸார் 1947 பிப்ரவரி 4-ந்தேதி மந்திரி சபையை அமைத்து தொடர்ந்து அதிகாரத்தில் இருந்து வருகிருர்.

கோவாவை ராணுவம் அல்லது போலீஸ் படையின்மூலம் மீட்பதென்று இந்தியா நினைத்தால் அது அசாத்தியமானதல்ல என்பதை பண்டிதநேரு தன் கேரள விஜயத்தின் போது வெளிப்படையாகவே குறிப்பிட்டிருக்கிருர் "பலாத்கார வழி எங்கள் பண்பாட்டிற்கு மாருனது. இந்தியா தனது விடுதலையை நிலைநாட்டுவதற்கு எந்த ஆத்மீகமுறையைக் கடைபிடித்ததோ அதே வழியிலேயே கோவா விடுதலை பிரச்னையைத் தீர்க்க விரும்புகிறது. இதை போர்ச்சுகல் ஆதிக்கவாதிகள் நன்கு தெரிந்து தாமே வெளியேறுவதே விவேகமாகும்" ★

## குப்பையில் கிடந்த குந்துமணி

பர்மாவில் யுத்தசமயத்தில் குப்பைத் தொட்டியில் கிடந்த ஒரு அழகான சலவைக்கல் புத்தர் விக்ரகம் ராஜாஜி வீட்டின் வரவேற்பு அறையில் இடம்பெற்றிருக்கிறது. இதை தட்டிப் பார்த்தால் வெண்கல நாதம் ஒலிக்கிறது. உண்மையில் இந்த விக்ரகம் பளிங்காலானது தான். இதை ஒரு ஆங்கிலேயர் கண்டெடுத்து, கல்கத்தாவுக்குக் கொண்டு சென்ருர். எளிதில் தூக்கிச் செல்ல இயலாத காரணத்தால் அந்த ஆங்கிலேயர் கல்கத்தாவில் நம் ராஜாஜி கவர்னராக இருந்தபோது அதை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார்.

பர்மா குப்பைத்தொட்டியில் இருந்த புத்தர் இப்போது பஸ்லுல்லா ரோடிலுள்ள ராஜாஜி வீட்டில் காக்ஷியளிக்கிருர்!

சங்கராந்தி பண்டிகையின் போது சூரியனை வழிபடுகிறோம். அவன் அருள் இல்லாவிடில் ஜீவனே கிடையாது. உலகத்தின் உயிராக விளங்குவது ஞாயிறு. இந்த சூரியனிடமிருந்து வெளிப்படும் இருவித முக்கிய கிரணங்கள் எவை என்றும் அவைகளை விஞ்ஞானிகள் எப்படி எல்லாம் பயன் படுத்த வழி கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதையும் இக் கட்டுரை விவரிக்கிறது.

# பயன் தரும் சூரிய கிரணங்கள்

எஸ். என்

சூரியன் பூமிக்கு எவ்வளவோ லக்ஷம்மைல்களுக்கப்பாலுள்ளது. அது அங்கிருந்து கிரணங்களைப் பரப்பி வெம்மையை நமக்கு அளிக்கிறது. இந்த அக்னி கோளத்தை மக்கள் தெய்வமாகவே கொண்டாடி வருகின்றனர்.

இருளை அகற்றுவது, மேகத்தை உண்டு பண்ணுவது, மழை பொழியச் செய்வது, உயிரினங்களுக்கு உணவைத் தருவது, இலைகளுக்கு பசுமை ஏற்படச் செய்வது, உடலுக்கு உறுதி அளிப்பது எல்லாம் சூரியனின் தயவினாலே தான் ஏற்படுகின்றன.

இதனால்தான் கம்பரும்,

ஒன்றெனை உலகிடை
 உலாவி மீமிசை
நின்று நின்று உயிர்தொறும்
 நெடிந்து காக்குமே

என்று புகழ்கிறார்.

இக்கட்டுரையில் சூரியவழிபாடு குறித்து எதுவும் பிரஸ்தாபிக்கப் போவதில்லை. சூரியனிடமிருந்து வெளிப்படும் கிரணங்கள். அவற்றின் விபரம் பற்றிய விஞ்ஞான சம்பந்தமான விவரங்களே இங்கு விளக்கப் படுகின்றன.

சூரியன் நமக்கு வெளிச்சமும் உஷ்ணமும் தருகிறான். சூரிய வெளிச்சத்தை நாம் சாதாரணமாகப் பார்க்கும்போது வெள்ளை வெளேரென்று இருக்கிறது. 'பிரிஸம்' என்ற முப்பட்டைக் கண்ணாடிமூலம் வெளிச்சத்தை செலுத்தினால் ஏழுவித வர்ணங்கள் இருப்பது தெரியவரும். சூரியபகவான் ஏழுவர்ண குதிரைகள் பூட்டிய ரதத்தில் சவாரி செய்கிறார் என்பதற்கு இதுதான் காரணம்.

சூரியகிரணத்தில் நம் உடலுக்கு வனப்பும் வலிவும்தரும் சக்திகள் இருக்கின்றன. பெரிய பெரிய நகரங்களில் கிளம்பும் புழுதியும் புகையும், அந்நகரத்தில் எரிக்கும் சூரிய வெளிச்சத்தினின்றும் அவ்வலிவு தரும் சக்தியைப் போக்கிவிடுகிறதாம். ஆகவே பெரிய நகரங்களில் இருப்பவர்கள் தேகாரோக்கியத்தை உத்தேசித்து திறந்தவெளியுள்ள கிராமங்களுக்குச் செல்வதுண்டு. சூரிய உஷ்ணம் அதிகம் இல்லாத மேனாடுகளில் தனித்த இடங்களில் நிர்வாணமாக சூரிய ஸ்நானம் செய்வது பற்றியும் பலருக்குத் தெரிந்திருக்கும்.

இப்போது விஞ்ஞானிகள் சூரிய கிரணத்திலிருந்து அந்த வலிவுதரும் சக்தியை நாமே தயாரிக்க முடியும் என்று கண்டுபிடித்து விட்டனர்.

பாதரஸம் அடங்கிய ஒரு குழாயினுள் மின்சாரத்தைப் பாய்ச்சினால் ஒருவகை கிரணங்கள் உண்டாகின்றன. அவைகளுக்கு சூரியகிரணத்தில் உள்ள அந்த ஆரோக்கியம் தரும் சக்தி இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத இந்த கிரணத்திற்கு 'அல்ட்ரா

வயலெட்ரேஸ்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். இந்தக் கிரணம்போகும் திசையில் எந்த சிறிய தடை தோன்றினாலும் அது திரும்பிவிடும். ஊடுருவி மேலே செல்லாது. அதனால்தான் இந்த கிரணத்தை சூரியனிடமிருந்து பெற விரும்புவோர் குறைந்த அளவு ஆடைகளுடன் நிற்கவேண்டியிருக்கிறது.

அல்ட்ராவயலெட் கிரணங்களின் உபயோகங்கள் யாவை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மைக்ராஸ்கோப் கருவிமூலம் ஒரு சிறிய குண்டூசி முனையைப் பார்த்தால் ஆணி முனையைப்போல பெரிதாகத்தெரியும். சாதாரண வெளிச்சத்திற்குப்பதில் அல்ட்ரா வயலெட் வெளிச்சத்தைப் பாய்ச்சி மைக்ராஸ்கோப் மூலம் பார்த்தால் அதே குண்டூசி கடல் பாறை அத்தனை பெரிதாகத் தெரியும்! ஆகவே மனித ரத்தத்தின் விஷக்கிருமிகளை ஆராய்ச்சி செய்ய இதை உபயோகிக்கிறார்கள்.

பருத்தியை உண்டுவிடும் பூச்சி ஒன்றுஉண்டு. அது கண்ணுக்கே தெரியாத அளவு சிறியதாக இருக்கும. துணிக்கிடங்கில் இப்பூச்சி புகுந்துவிட்டால் துணி அவ்வளவும் சேதம் தான். ஆகவே இப்பூச்சிகள் இருக்கின்றனவா என்று கண்டறிய அல்ட்ராவயலெட் கிரணத்தை உபயோகிக்கிறார்கள்.

அல்ட்ராவயலெட் கிரணங்களைப் போலவே சூரியனிடமிருந்து 'இன்ப்ரா ரெட்' கிரணங்களும் கலந்துவருகின்றன. இதிலும் உடலுக்கு ஆரோக்கியம் தரும் சக்திகள் இருக்கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சூரியன் இன்ப்ரா ரெட் கிரணங்கள் அளிக்காவிட்டால் உலகில் ஜீவ ஜந்துக்களே வாழமுடியாது.

அல்ட்ராவயலெட் கிரணத்தைப் பாய்ச்சினால் நம் கண்ணுக்கு அதனால் ஏதும் தனி உணர்ச்சி இல்லை. இன்ப்ரா ரெட் கிரணங்களைப் பாய்ச்சினால் கண்ணுக்குள் என்னவோ சிவப்பு தெரிவது போலாகிவிடுகிறது. அல்ட்ராவயலெட் கிரணத்தைவிட நீளத்தில் சற்று குறைவாகப் பாயும் கிரணங்கள் இந்த இன்ப்ராரெட் கிரணங்கள்.

இன்ப்ரா ரெட் கிரணங்கள் மூலம் சிகிச்சை பெறும் நோயாளியை இருட்டறையில் படுக்கவைப்பார்கள். இக்கிரணங்களும் கண்ணுக்குத் தெரியாதவையே. உடம்பு மிகவும் வலிக்கிறது என்று அவதிப்படுகிறவர்களுக்கு இக்கிரணத்தைப் பாய்ச்சினால் வலிநீங்கி நிம்மதி ற்படுவதாகத் தோன்றும்.

ஆபரேஷனில்லாமல் சில சிகிச்சைகள் செய்யவும் இன்ப்ரா ரெட் கிரணங்கள் உபயோகிக்கப்படுகின்றன. உள் நாக்கு வளர்ந்து அவதிப்படுபவர்களுக்கு அந்த நாக்கை வெட்டி எடுக்க டாக்டர்கள் இந்த கிரணத்தை உபயோகிக்கிறார்கள். நோயாளிக்கு அதிக சிரமமேற்படாமல் வேறு பல ஆபரேஷன்களைச் செய்யவும் இந்தக் கிரணம் உயோகிக்கப்படுகிறது.

இந்தக் கிரணம் தசை நார்களுக்கு விடமின்களை ஊட்டுவதாக டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சமையல் செய்வதற்குகூட சூரிய உஷ்ணத்தைப் பயன்படுத்த சூரிய அடுப்பு இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது சகஜமாக எல்லோராலும் உபயோகிக்கப்பட இன்னும் சில காலம் பிடிக்கலாம்.

## சந்திர கிரணங்கள்

எல்லா ஜீவராசிகளுக்கும் காதல் உணர்ச்சி சந்திரனுடைய கிரணங்களையே பொருத்திருக்கிறது. கர்ப்பம் தரிப்பதற்கும் மற்றும் வாழ்க்கையில் அநேகமுக்கியஅம்சங்களுக்கும் சந்திரனுடைய வளர்பிறை காரணமாவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். குழந்தைகளிடையே காணப்படும் சில துர்குணங்கள் சந்திரனின் வளர்பிறையின்போது அதிகமாகத் தோன்றுகின்றன. அமாவாசையின் போது பைத்தியம் பிடித்தவர்களுக்கு வெறி அதிகரிக்கும்.

பயிர்களின் உயிர்சத்தை, வளர்பிறை வேரிலிருந்து மேற்பக்கத்திற்கும், தேய்பிறை மேலிருந்து வேருக்குமாக இழுக்கின்றன. இதனால் வளர்பிறையின்போது தண்டு வளர்ச்சியுடனும் தேய்பிறையின்போது வளர்ச்சி குன்றியும் தோன்றுகிறது. சந்திரன் இல்லாத போனால் சமுத்திரத்தில் ஆவியே உண்டாகாது. சூரிய சந்திரர்களின் கிரணங்கள் நம் வாழ்க்கைக்கு எவ்வளவு பயன்படுகின்றன பாருங்கள்.

# ஸ்ரீமதி ஸன் யாட் ஸென்



சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம்செய்த அயல் நாட்டு பிரமுகர் சீனக்குடியரசின் உதவி ஜனாதிபதியான சூங்சிங் லிங்,

சீனப் புரட்சியின் பிதா என்றழைக்கப்படும் சன்யாட் சென்னின் மனைவி ஸ்ரீமதி சியாங்கேஷேக்கின் சகோதரி இவர்.

பிரபல ஷாங்கே வியாபாரி ஒருவரின் இரண்டாவது புத்திரி சன்யாட் சென்னை மணம் செய்து கொள்ள தந்தையின் அனுமதி பெற்று திருமணம் செய்து கொண்டார். அப்போது ஸன்யாட் ஸென்னுக்கு வயது 49. சிங்லிங்கிற்கு 23. மணமான நாள்முதல் சன்யாட் சென்னுக்கு வாழ்க்கைத் துணைவியாகவும் மந்திரியாகவும் ஆலோசனையாளராகவும் ஊக்கத்தையும் தைரியத்தையும் சமயசந்தர்ப்பங்களில் அளித்து அவருடைய கொள்கைக்கு பிடிகொம்பாக வாழ்ந்து வந்தார்.

ஸன்யாட்ஸென் பிரசங்கங்கள் செய்யும்போதெல்லாம் இரண்டு கொள்கைகளை சதா வற்புறுத்திவந்தார். ஒன்று அரசியல் விடுதலை. மற்றொன்று ஸ்திரீகளுக்கு சமத்துவம். ஸ்திரீகளின் விடுதலையின்றி சீன சுதந்திரமில்லை என்றும் அவர் கூறினர். ஸ்ரீமதி ஸன்யாட் ஸென்தான் இக்கொள்கை உருவாக்க காரணமாக இருந்தவர்.

ஸன்யாட்ஸென் தம்பதிகளின் சேவை சீனப்பெண்களை தேசீய சேவைக்கு இழுத்தன. பிற்காலத்தில் நடைபெறவிருக்கும் போராட்டத்திற்கு அஸ்திவாரமாக இந்த ஆதரவை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

சுமார் 30 வருஷங்களுக்கு முன்பு பண்டிட் ஜவஹர்லால் நேரு தன் தகப்பனுருடன் மாஸ்கோ சென்றிருந்தபோது ஸ்ரீமதி ஸன்யாட் ஸென்னைச் சந்தித்து இந்தியாவுக்கு வரும்படி அழைத்தார். இடையில் பிரிட்டிஷ் சர்க்கார் குறுக்கே நின்றதால் அப்போது வரமுடியவில்லை. இந்தியா சுதந்திரமடைந்த பின் இப்போதுதான் அவர் வரமுடிந்தது. ★

அல்பாயுசாகி விடாமல் நீண்ட வாழ்வு வாழவே எல்லோரும் ஆசைப் படுகிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் ஏதோ ஒரு வழியில் தன்னை யறியாமல் சாவைத் தேடிக் கொள்கிறார்கள். அதிலே புகை பிடிப்பவர்கள் ஒரு சாரார்!



# புகை பிடிப்பது தீங்கு!...

பீடி, சிகரெட் போன்ற லாகிரிப் பொருள்களை உபயோகிப்பதால் ஏற்படுகிற தீமைகள் இவ்வளவு அவ்வளவு என்று வரையறுக்கவே முடியாமல் இருக்கிறது! அதைப்பற்றி அறிவாளிகள் பலர் அணு அணுவாக அலசி ஆராய்ந்து தந்துள்ள வியாக்யானங்களைப் படிக்கும்போது குலை நடுங்குகிறது! அதன் குண விசேஷங்களைப் பரிசோதித்துப் பார்த்தவர்கள் அதிலே பத்தொன்பது வகைக் கொடிய பாஷாணங்கள் இருப்பதாக அறிவிக்கும்போது 'அப்படியா?' என்று இடிந்து போகச் செய்கிறது! அதோடு மட்டுமல்ல, சிகரெட்டுகளில் அபினி, கொக்கைன் போன்ற போதைப் பொருளும் கலந்திருப்பதாகக் கூறும்போது கதிகலங்குகிறது! இருந்தாலும் பலனென்ன?

இதையெல்லாம் தெரிவிப்பவர்கள் சாமான்யப்பட்டவர்கள் அல்ல. அறிவாளிகள், ஆராச்சியாளர்கள், அன்றாட வாழ்விற்கு அவசியமாகிவிட்ட டாக்டர்கள் ஆகியோராவர்! சொல்லுகிறவர்கள் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் பாமரர்கள் மட்டுமல்ல, படித்தவர்களும்கூட அதையெல்லாம் காதில் போட்டுக்

42-ம் பக்கம் பார்க்க

சிகரெட் குடிப்பதில் உங்களுக்கு ஒரு ஆனந்தம் இருக்குமேயானுல் தாராளமாகப் பிடியுங்கள். நம் உயிருக்கு நாமே உலே தேடுவதாக எண்ணித் தடுமாற வேண்டியதில்லே. வாழ்க்கை ஒரு சூதாட்டம். அதிலிருந்து யாருமே மீண்டதில்லே.



# ...இல்லே தாராளமாகப் பிடி!

'சிகரெட் குடிப்பதால் மக்கள் பல சீர்கேடுகளே அடைகிருர்கள்; கொடிய புற்று நோய்க்குப் பலியாகிருர்கள்!' என்றெல்லாம் பல மருத்துவர்கள் கூறுகிருர்களல்லவா? இதெல்லாம் ஆதாரமற்ற பீதிப் பிரதிபலிப்பே தவிர, சிகரெட் பிடிப்பதற்கும் சுவாசப் பையில் ஏற்படுகிற புற்று நோய்க்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லே என்று கூறுகிருர் பிரபல டாக்டரான ரெய்ன்ஹாப்.

சிகரெட் குடிப்பதனுல் பயமொன்றுமில்லே என்று கூறுகிற இந்த டாக்டர் சாதாரணமானவரல்ல, பால்டிமோரிலுள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் புற்றுநோய் டாக்டராக நெடு நாள் தொண்டாற்றி பிரசித்தி பெற்றவர். புற்றுநோய் வைத்தியத்தில் 1933-ம் வருஷம் முதன் முதலாக ரண சிகிச்சையைக் கையாண்டுவெற்றிகண்டவர் மேலும் புகையிலே ஆராய்ச்சிக் குழுவின் கௌரவ ஆலோசகராகவும் இருந்து வருகிருர்,

சிகரெட் பிடிப்பவர்களில் பெரும்பாலோர் புற்று நோய்க்கு இலக்காகிருர்கள் என்று சாதிக்கிற டாக்டர்களில் எவராவது புகையிலேயில் புற்று

44-ம் பக்கம் பார்க்க

## புகை பிடிப்பது தீங்கு!

40-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டதாகத் தெரியவில்லை. புகை பிடிக்கும் பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறதே ஒழிய குறைந்தபாடில்லை. சிகரெட் தயாரிப்பவர்கள் தங்கள் சரக்கை பிரபலப் படுத்த ஆண்டு ஒன்றுக்கு, விளம்பரங்களுக்காக மட்டும் பத்து கோடிரூபாய்வரை செலவழிக்கிறார்கள் என்றால் மொத்த விற்று வரவு எவ்வளவு இருக்குமோ!

சிகரெட், பீடி, சுருட்டு முதலியவைகளை உபயோகிப்பவர்களிடம் "எதற்காகப் புகை பிடிக்கிறீர்கள்?" என்று கேட்டால் நான்கு விதமான பதில்கள் கிடைக்கின்றன. 'சுறு சுறுப்பைத் தருகிறது' என்கிறார்கள் பலர். 'குளிருக்குக் கதகதப்பாக இருக்கிறது' என்கிறார்கள் வேறு சிலர். 'சுகமான மலக் கழிப்புக்கு அது ஒரு கை கண்ட மருந்தாக இருக்கிறது' என்று சொல்லிக் கொள்கின்றனர் மற்றொரு பகுதியினர். எஞ்சியுள்ளவர்களோ 'ஏதோ ஒரு வித மன மயக்கத்தையும் ஆனந்தத்தையும் தருகிறது' என்று சொல்லிப் புன்சிரிப்பை உதிர்க்கின்றனர்! இந்த பதிலெல்லாம் ஒரு சமாதானம் போலத் தோன்றுகின்றனவே யொழிய, அத்தனை பேரும் அதை நாகரீகப் பழக்கங்களில் ஒன்றாகக் கருதி பாவித்து வருவதாகவே தீர்மானித்துவிடலாம்.

புகை பிடிப்பதன் கொடுமையான விளைவுகளைப்பற்றி விரிவாக எழுதப் போனால் அதற்கு ஒரு தனித் தொகுதியே வேண்டும். சுருங்கக் கூற வேண்டுமானால் புகை பிடிப்பதால் இருதயம் பலவீனம் அடைகிறது. இரத்தக் கொதிப்பு, காசம் போன்ற நோய்களுக்குப் பலியாகிவிடநேரும். கண் பார்வையைக் குறைத்து விடுகிறது. மூளை வலு விழக்கிறது. ஆண்மையை நசித்து வாழ்வின் இன்பத்தை சுகிக்க முடியாத ஒரு தத்தளிப்பைத் தருகிறது. தலை மயக்கம், முக வெளுப்பு, குமட்டல், உடல் நடுக்கம் ஆகியவை அடிக்கடி தோன்றத் தலைப்படுகிறது. நிதான புத்தியை அபகரித்துக் கொண்டு படபடப்பையும் முன் கோபத்தையும் கிளப்பிவிடுகிறது. நுட்பபுத்தி க்ஷீணமடைந்து விடுகிறது. பசியை மந்தித்துக் குடலைச் சுருக்கி வைக்கிறது.

அத்தகைய பயங்கரக் கெடுதிகளை விளைவிக்கிற பொருள் அதிலே என்ன இருக்கிறது என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கலாம். மனிதனின் உயிரை ஒரு சில விநாடிக்குள் உறிஞ்சிவிடக்கூடிய பிரஸிக் ஆஸிட், கார்பன் மானாக்சைட் போன்ற நஞ்சு வகைகளைச் சேர்ந்த நிக்கோட்டின் சிகரெட்டிலே நிரம்பியிருக்கிறது. அது எத்தன்மை கொண்டது என்பதை அமெரிக்க விஞ்ஞானியான டேவிட் பால்சன் நிரூபித்திருக்கிறார்.

இரண்டு சிகரெட்டுகளைப் பிரித்துத் தண்ணீரில் ஊற வைத்து அதை நன்றாகக் காய்ச்சினார் அவர். அது சுண்டிய பிறகு இரண்டு துளிகளை எடுத்து பூனையின் நாக்கிலே தடவினார். இரண்டொரு விநாடிகளில் பூனை மயங்கித் தள்ளாடியது. பிறகு மூன்றாவது துளியைப் புகட்டியபோது பூனை அதிரவும் குலுங்கவும் துடிக்கவும தொடங்கியது. மரண அவஸ்தையால் இருபது நிமிட நேரத்திற்குள் செத்து விரைத்து விட்டது அந்தப் பூனை!

சிகரெட்டில் இருக்கும் இந்தப் பொல்லாத நஞ்சில் இரண்டு சொட்டு போதும் ஒரு மனிதனைக் கொல்ல. எட்டுத் துளியைப் புகட்டினால் மனிதனைவிட அதிக வலுவும் திடமும் கொண்ட குதிரையே செத்து விடுகிறது!

தீராத ஒரு பயங்கர வியாதி 'கான்சர்' என்றும, அந்தப் புற்று நோய்க்கு ஒரு காரணம் புகை பிடிப்பது என்றும் பல டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

உலகப் பிரசித்திபெற்ற தாமஸ் ஆல்வா எடிசனை அறியாதவர்கள் இருக்கமுடியாது. "ஒருவனுடைய கையிலே சிகரெட் வைத்திருப்பதை என்னால் பொறுக்கவே முடியாது" என்று கூறியிருக்கிறார் அவர். சிகரெட் பிடிப்பது மனித வாழ்விற்கு எத்தகையதொரு சத்துருவாக இருக்க வேண்டும் என்பதற்கு மேலே கூறியவைகளே போதுமானது. ★

## இல்லை, தாராளமாகப் பிடி!

41-ம் பக்கத் தொடர்ச்சி

நோய்க்கு காரணமான கிருமியோ, பொருளோ இருப்பதாக ஆராய்ச்சி மூலமாக நிரூபித்தார்களா என்று கேட்கிறார் அவர்.

உலகமெங்கும் 'கான்சர்' எனக் குறிப்பிடப்படுகிற புற்றுநோய் முன்னைவிட இப்போது அதிகரித்துள்ளது. இந்த உயர்வுக்குக் காரணம் சிகரெட் பிடிப்பவர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது என்றார்கள். அது முற்றும் தவறானது என்று கூறுகிற ரெய்ன்ஹாப் புள்ளி விபரங்களின் மூலம் தெளிவாக விளக்குகிறார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, டச்சு, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளை எடுத்துக் கொள்ளலாம். சுவிட்சர்லாந்து, டச்சு ஆகிய இரண்டு நாடுகளிலும் சேர்ந்து செலவாகும் சிகரெட்டுகளைவிட இரண்டு மடங்கு அதிகமாக உபயோகிக்கிறது அமெரிக்கா. சிகரெட்டினால்தான் சுவாசப் பையில் புற்றுநோய் உண்டாகிறது என்பது உண்மையான ஒரு சித்தாந்தமாக இருக்குமேயானால் அதிகமாக சிகரெட் பிடிக்கும் அமெரிக்க நாட்டில் புற்று நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கையும் சுவிட்சர்லாந்து, டச்சு ஆகிய நாடுகளைவிட அதிகமாக அல்லவா இருக்கவேண்டும்? அப்படியுமில்லை. எண்ணிக்கைக்கு சரிசமமாக இருக்கிறது!

அதேபோல இங்கிலாந்து, வேல்ஸ் போன்ற நாடுகள் அமெரிக்காவை விட 30 சதவிகிதம் கம்மியாகவே. சிகரெட்டை உபயோகிக்கிறது. ஆனால் அந்த நாடுகளில் சுவாசப் பையில் பிடிக்கும் புற்றுநோய் காரணமாக மரணமடைபவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் மடிபவர்களின் எண்ணிக்கையைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கிறது!

புகை பிடிப்பதை உலகத்திற்கு அறிமுகப்படுத்தி வைத்த துருக்கி நாட்டை எடுத்துக் கொள்ளலாம். மிக மிக அதிகமாகப் புகை பிடிக்கும் பழக்கமுள்ள அந்த நாட்டிலே புற்று நோயின் காரணமாகச் சாவை அடைபவர்கள் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருக்கிறது!

இந்தப் புள்ளி விவரங்களை யெல்லாம் பார்க்கும்போது புற்று நோய் அதிகரிப்புக்குக் காரணம் சிகரெட் பிடிப்பதுதான் என்பது நம்பக்கூடியதாக இல்லை.

உண்மையிலேயே புற்று நோயை உண்டாக்கக்கூடிய எந்தவித சத்தும் புகையிலையில் கிடையாது. அந்த நோயின் உற்பத்திக்குக் காரணமான அணுக்களும் அதில் இல்லை. புற்று நோய் அதிகரிப்புக்குத் துணை புரிவது இதர சூழ்நிலைகளாகும். புகை போக்கிகள் நிறைந்திருக்கும் இடங்கள், இயந்திரம் இயங்கும் சாலைகள், ஆஸ்பத்திரியின் அசுத்தத் தேக்கம், தார் உருக்கும் இடங்கள், முதலிய வற்றில் நிலவியிருக்கிற காற்றிலே தான் கான்சர் அணுக்கள் நிறைந்திருக்கின்றன. அந்த அசுத்தக் காற்றை அடிக்கடி அளவுக்கு மீறி சுவாசிப்பதால்தான், அக்கிருமிகள் சுவாசப் பைக்குள் சென்று புற்று நோயை உண்டாக்குகிறது. இந்த உண்மையைச் சிந்திக்காமல் சிகரெட் பிடிப்பதனால்தான் சுவாசப் பையில் புற்று நோய் ஏற்படுகிறது என்று சொல்வது, தற்கால ஆராய்ச்சிக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை.

ஆகவே, அந்த டாக்டர் சொல்கிறார். உங்களுக்கு சிகரெட் புகைக்க வேண்டும் என்ற சித்தம் இருந்தால் —அதிலே ஒரு தனி இன்பம் இருக்கிறது என்று தெரிந்தால் குறைவாகவே பிடித்து வாருங்கள். புகைத்து இன்ப போதையில் மூழ்குங்கள். நீங்கள் வெளிவிடுகிற ஒவ்வொரு புகைச் சுருளும் சாவின் விளிம்பில் உங்களைத் தள்ளிவிடுமோ என்று பீதியடைய வேண்டாம்! ★

### ஆகவே முடிவு

சிகரெட் பிடிப்பது சுக நலக் குந்தகம் என்பதை ஒதுக்கி விட்டு பொருளாதாரக் கண்ணோடு பார்க்கலாம். சராசரிக் கணக்குப்படி இந்தியாவில் ஒருவர் புகை பிடிப்பதற்காகச் செலவிடும் தொகை மாதமொன்றுக்கு இருபது ரூபாயாகும்! ஐந்து வருடம் இதை ஒரு சேமிப்பாகச் சேர்த்து வந்தால் ஆயுள் வரை அரிசி கொழிக்கக்கூடிய ஒரு பூமியாக உருவெடுக்கும்!

# கவிதையின் உதயம்

பேராசிரியர் பி. ஏ. சுப்பிரமணிய அய்யர்

ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அண்ணாமலை சர்வகலாசாலையில் ஆங்கிலப் பேராசியராக இருந்தவர். இப்போது காஞ்சி காமகோடி மடாதிபதியின் ஆக்ஞையின்பேரில் சம்ஸ்கிருத ஆங்கில அகராதியைத் தயாரித்து வருகிறார்.

அழகானதோர் ஆற்றங்கரை; அதில் பழமும் நிழலும் தரும் மரங்களும் பூக்களைச் சொரியும் செடிகளும் அடர்ந்து தூய்மைக்கே இருப்பிடம் போன்றதோர் இடம். அதன் நடுவில் ஒரு குடிசை! குடிசையில் முதிர்ந்த வயதும் நரைத்த தாடியுமுள்ள முனிவரொருவர். அவர்தான் வால்மீகி—அவர் குடிசைக் கருகாமையில் ஓடும் அந்நதிதான் தமசா நதி.

ஒரு சமயம் முனிவர் காலைச் சடங்குகளை முடித்தபின், தவத்தின் வலிமையே உருவெடுத்தாற்போல குடிசையிலிருந்து வெளி வந்தார். வந்தவர் குடிசையை நோக்கி நடந்து வரும் மற்றோர் முனிவரைக் கண்ணுற்றார். அக மகிழ்ந்து அப்பெரியாரை எதிர் கொண்டழைத்து, மணையிலிருத்தி, பாலோடும் பழத்தோடும் வரவேற்று அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்தார். வந்தவர் நாரதர்; பெயர் பெற்ற உலக சஞ்சாரி.

வால்மீகி முனிவருக்கு நாரதர் வரவு ஒரு சரியான வாய்ப்பு. சில நாட்களாகவே அவர் மனத்தில் சொல்லுதற்கியலாததோர் ஆர்வமும் பரபரப்பும் குடியேறியிருந்தன. அதை வெளிக்காட்ட நாரதமாமுனி அவருக்கு அப்போது வாய்ப்பளித்தார். வால்மீகியின் மனம் வந்தவரிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்று அவரைத் தூண்ட, அவர் சொன்னார்.

"முனிவர் கோமானே, உமக்கோர் விண்ணப்பம் செய்ய விரும்புகிறேன். இவ்வுலகில் தற்காலம் நற்குணங்களனைத்தும் நிறையப் பெற்றுள்ள, நீதி நெறிதவறாதவனும் வீரத்தன்மையும் வாய்ந்த மகா புருஷன் யாரென்று தெரிவித்தருளுங்கள்!"

நாரதர் இதைக்கேட்டுக் களிப்புற்று ஸ்ரீராம பிரானின் கல்யாண குணங்களையும் தீரச் செயல்கள் நிறைந்த அவரது கதையையும் சுருக்கிச் சொன்னார். அதைக்கேட்டு வால்மீகி மகிழ நாரதர் விடைபெற்றுத் தன் வழியே சென்றார்.

ஆனந்தக் கடலில் மூழ்கின வால்மீகி நாரதர் சொன்னதைச் சிந்தித்துச் சிந்தித்து இடைவிடாது மகிழ்வுற்று நேரம் போவதையும் அறியாமல் உட்கார்ந்திருந்தார். வெகுநேரம் செல்ல, சீடனும் உச்சிகாலம் வந்து விட்டதை நினைவூட்ட, முனிவர் எழுந்து உச்சி கால நீராடலுக்காக நதியை அணுகினார். அதை அன்றுதான் முதன் முதலாகப் பார்ப்பவர்போல் அவர் அதன் அழகில் ஈடுபட்டு மயங்கி நின்றார். ஆஹா! என்ன நீர் இது! என்ன தெளிவு இதற்கு! நதிக்குப் பெயர் என்னவோ தமசாதான்; அதன் பொருள் என்னவோ இருள் என்பது தான். இருந்தும் ஸ்ரீராமனின் கதை போலவே இதுவும் இதில் மூழ்கினவரின் உள்ளத்து இருளை நீக்குமென்பதில் ஐயமில்லையே!" என்றெல்லாம் முனிவர் தனக்குள் சொல்லிக் கொண்டார்.

நதியில் மூழ்கி எழுந்து மறுவுடை உடுத்தி முனிவர் நதிக்கரையில் சற்று உலாவலானார். அப்போது நேர்ந்தது ஒரு நிகழ்ச்சி. அது மானிட சரித்திரத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் முதன்மையானது.

அருகாமையில் இரண்டு பறவைகள் ஆணும் பெண்ணுமாக உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தன. திடீரென்று வேடனொருவன் அம்பை எய்து அவற்றில் ஆண் பறவையைக் கீழே வீழ்த்தினான். அப்பறவை உயிர் நீத்தது; பெண் பறவை தவிப்புற்றது. இதைக் கண்டு, முனிவரின் மனம் இளகிற்று. கருணை

யென்னும் உணர்ச்சி மிகுதியால் அவர் வேடனை நோக்கிக் கூறினர்:

"அடா, வேடா! மெய்ம்மறந்து ஆணும் பெண்ணுமாக விளையாடிக் கொண்டிருக்கும் பறவைகளில் ஆணை அம்பெய்து கொன்ற உனக்கு வாழ்வு வெகு காலம் நீடித்திராதடா!" என்ருர்.

இதைச் சொல்லி, அவ்விடம் விட்டு நகர்ந்த முனிவர் தான் சொன்ன தைத் திரும்பவும் மனத்திலிருத்திச் சிந்தித்தார்; அது ஒரு செய்யுளாக அமைந்திருந்ததைக் கண்டார்; வியப் புற்ருர். என்ன ஆச்சரியம் இது! செய்யுள் செய்கிற எண்ணத்துடன் அவரதைச் சொல்லவில்லை; அது தானு கவே அப்படியமைந்ததைக் கண்டு. "ஆஹா, இது கவிதையாயிற்றே! உணர்ச்சியுண்ட மனித இதயம் நீருண்ட மேகம் மழையைப் பொழி வதைப் போலன்ருே, கவிதையைப் பொழிகிறது!" என்று எண்ணினர். இப்படி எண்ணமிட்டுக் கொண்டே குடிசைக்குள் நுழைந்தார்.

அன்று வால்மீகி இரண்டு காரியங் களைச் செய்து முடித்திருந்தார். முத லாவது, அவர் காவியத்தைச் செய் தது; இரண்டாவதாக அவர் கவிதை அன்று பிறந்து விட்டது என்பதைக் கண்டது. இப்பேரின்பத்தில் ஆழ்ந்த அவர் சற்று கண்களை மூடி தியானத்தி லீடுபட்டார். அவருக்கப்போது மற்ற தோர் பெருஞ் சம்பவம் நேர்ந்தது. அவர் மனக்கண் வாகீசையான ஸரஸ்வதி தேவியின் நாயகனை, பிரம்மதேவனைக் கண்டது; அவரது செவிகளில் அப்பிரம்மனின் வார்த்தைகள் தெளிவாக ஒலித்தன; "குழந்தாய், இன்று நீ கவிதைக்குத் தகப்பனுக ஆகிவிட்டாய்; நீயே ஆதிகவி. நீ பார்த்தறியாத விஷயங் களும் பார்த்தறிந்த விஷயங்கள் போலவே உன் மனக்கண்ணுக்குத் தெளிவாகத் தென்படும்; அதாவது, நீ கவி சக்தி வாய்ந்தவனுவாய். ஆகையால் நீ ஸ்ரீ ராமனுடைய சரித்தி ரத்தைச் சொல்லலாம்; அதில் சொல் லிலும் சரி, பொருளிலும் சரி, பிச கானதோ தகாததோ எதுவும் புகாது"

நான்முகனையும் கண்களால் கண்டு அவர் சொற்களையும் காதிஞல் கேட் டோமென்ற ஆனந்தத்தில் பரவச ஞய் விட்ட முனிவர் கண்களை விழித் துப் பார்த்தார்; அங்கே பிரம்ம தேவனைக் காணும். அவரது சீடன் மட்டும் எப்பொழுதும் போல் நின் ருன். ஆனுல் பிரம்மதேவனின் அருள் தனக்குக்கிட்டிய சக்தியால் முனிவர் ஸ்ரீ ராமன் கதையை விரிவாகவும், எவ்வளவு விரிவோ அவ்வளவு அழகாகவும், சொல்லத் தலைப்பட்டார், இருபத்து நான்கா யிரம் செய்யுட்களடங்கின இராமா யண காவியம் வெளி வந்தது. அது தான் இப்பரத நாட்டில் ஆதிகாவியம் என்று பெயர்பெற்று விளங்குகிறது; அதன் கர்த்தாவான வால்மீகிதான் நமது ஆதிகவி.

இதிலிருந்து கவி சிருஷ்டி யென் ருல் என்ன, அது எத்தகையது, அதன் இலக்கணங்கள் யாவை, அவை பொருந்தின கவிதை எப்படியிருக்கும் என்பவற்றை நாம் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். ★

## ராம ராஜ்யம்

ராமராஜ்யத்தில் எங்கும் மகிழ்ச்சி; ஒவ்வொருவனும் அறத்தை விரும்பினுன்; ஒருவன் மற்றவனைத் துன்புறுத்தவில்லை.

அந்த நாட்டில் கொள்ளை இல்லை, திருட்டு இல்லை. யாரையும் எவ்வித தீங்கும் தீண்ட வில்லை.

பெண்கள் கணவனை இழக்கும் புலம்பல் இல்லை. நோய் நொடி என்ற பெயரே இல்லை. குழந்தைகள் மரித்து, வயதானவர்கள் ஈமக்கடன் புரியவில்லை.

எங்கும் இன்பமே காணப் பட்டது. மக்கள் நீடுழி வாழ்ந்தார் கள். நிறைந்த மக்கட்பேறு பெற் ருர்கள். எங்கும் ராமன் பெயர், எங்கும் ராமகதை.

மழை உரிய காலத்தில் பெய் தது; தென்றல் இன்பமாக வீசியது.

எல்லா இனத்தாரும் அவரவர் கள் கடமையைச் செய்து களித் தார்கள்.

—வால்மீகி

# இந்தியா பொறுமையின் சின்னம்

மகாத்மா காந்தி

அமரத்வம் அடைந்த அண்ணல் காந்திஜீ முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பே தன் தீர்க்க தரிசனத்தின் மூலம் வருங்கால இந்தியாவின் நிலையை நிர்ணயித்து விட்டார். 'பொறுமையின் சின்னமாக இந்தியா விளங்கும்-ஆயினும் போர்முறையையும், யுத்தங்களின் பின் விளைவுகளையும் தாங்கிக் கொள்ளவும் இந்தியா மேலும் கற்றுக்கொள்ள வேண்டும்' என்பதை டேனிஷ் கிறிஸ்தவ சங்கத்தைச் சேர்ந்த மிஸர்ஸ் எஸ்தர் மேனனுக்கு ஒரு கடிதம் மூலம் காந்திஜீ தெரிவித்துள்ளார். இக்கடிதம் இதுவரை பிரசுரிக்கப்படாதது. ஸ்வீடன் தலைநகரான கோபன் ஹேகன், ராயல் லைப்ரெரியில் இக்கடிதம் பார்வைக்கு வைக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகிறது.

"அன்புக்குரிய எஸ்தர்,

உன் கடிதத்தில் நீ ஒரு சிக்கலான கேள்வியைக் கேட்டிருக்கிறாய். அன்பின் உருவான ஒருவன் எந்தவித ஜீவஹிம்ஸையையும் அறவே வெறுப்பான்'-இதுவே பரமபிதாவின் வாக்காகவும் இருந்து வருகிறது. பாம்பைக் கண்டு, அன்பு சொரிந்து, அதன்மீது பரிதாபங் கொள்பவன் அதைக் கண்டு அஞ்சமாட்டான்; பயப்படவும் தேவையில்லை. அந்நிலையில் பாம்பும் தன் குணத்திற்கு மாறாக அவனைக் கடிக்காமல் சென்றுவிடும்!

இத்தகைய மனப்பான்மை நம்மிடம் குடிகொள்ள வேண்டும். ஆனால், நம்மில் சிலரிடையேதான் இந்தக் குணாதிசயம் இருந்து வருகிறது. தேசங்கள் இம்மாதிரி இருந்து வரமுடியும் என்பது சாத்தியமானதாக எனக்குத் தோன்றவில்லை. எல்லா வகையிலும் ஒவ்வொரு நாடும் ஒன்றுக்கொன்று இணையாக இருப்பதும் கடினம் என்பதே என் அபிப்பிராயம். ஆகவே நாடுகள் முன்னேற்றமடைய போர்தொடுப்பு முறையை அனுஷ்டிக்கின்றன.

தனிப்பட்ட மனிதனின் கடமை என்ன என்ற கேள்வி உண்மையில் சிந்திக்க வேண்டிய விஷயம்தான். நான் செயல் முறையில் நிரூபிக்க ஒரு திட்டம் வகுத்துள்ளேன், எந்தக் காரணம் கொண்டும் பிற உயிரைப் போக்க நான் சம்மதியேன்; என் பொறுமையையும் மீறி கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் அதையும் நான் என் சுய முயற்சியில் செய்யப் போவதில்லை. இதையே நான் ஒவ்வொருவருக்கும் போதித்து வருகிறேன். அன்பின்றி செயல் பரிணமிக்க இயலாது.

இந்தியாவில் வெறுப்புணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது. ·வீணாகப் போரும் கொலையுமே செய்வதில் மக்கள் விருப்பம் கொள்ளக்கூடாது. இந்த ஆவல் தணிந்தாலொழிய போர் முறை சீர்படாது.

அன்புவழி நடப்பவனையும், மன்னிக்கும் தன்மை படைத்தவனையும் நாம் மனிதருள் சிறந்தவனாக மதிக்கலாம். ஆனால் 'யாரை யார் நேசிப்பது! யாரிடம் யார் அன்பு கொள்வது?' என்பது சிந்திக்கப்பட வேண்டிய விஷயம். 'சுண்டெலி கடுவம் பூனையை அன்புடன் நேசிப்பது இயலாத காரியம்'.—அத்தகைய அன்பு ஆபத்தை விலைக்கு வாங்குவது போலாகும். அன்பு கொண்டாட விரும்பும் சுண்டெலி பூனையிடமிருந்து பயமின்றி இருக்கமுடியும் என்பது அறியாமை.

யாரைக் கண்டு நீ அஞ்சுகிறாயோ அவனை நீ நேசிக்க முடியாது. அவனைக்கண்டு அஞ்சுவதை நிறுத்தினால் அங்கு தானாகவே அன்பு வளரும்! பொறுமை ஆத்மீகசாதனை! போர், உடலியக்கத்தின் சாதனை! ஆத்மீக சாதனையால் போரில் காணாக வெற்றியை அடையலாம். அதேசமயம் உடலுறுதி அவசியமற்றது என்பது கருத்தல்ல. அதுவும் தேவைதான்!

நாதியாட்
3 – 8 – 1917

அன்புள்ள.
(ஒ-ம்) பாபு

# ஹாஸ்ய சம்பவம்

ஹாஸ்ய சம்பவம் எவ்வளவோ உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 100 வார்த்தைகளுக்குள் எழுதப்படவேண்டும். பிரசுரிக்கப்படும் எல்லாவற்றிற்கும் சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர் : 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாஸமிட்டு எழுதியனுப்புங்கள்.

### கதை வந்த கதை!

பத்திரிகைகளுக்கு ஏதாவது கட்டுரைகள் எழுத வேண்டும் என்ற ஆசை எனக்கு எட்டாவது வகுப்பிலிருந்தே இருந்து வந்தது. அதன்படி சில கதைகள் எழுதி அனுப்பியிருந்தேன். ஒன்றிரண்டு பிரசுரமாயின. மற்றவை திரும்பி வந்தன. சமீபத்தில் எனக்கு ஒரு பத்திரிகை ஆபீஸில் கொஞ்ச காலம் அச்சுப் பிழை திருத்தும் உத்தியோகம் கிடைத்தது. அப்போது அங்கு வேலை பார்க்கும் ஒரு பையன் என்னிடம் ஒரு கதையைக் கொண்டு வந்து கொடுத்தான். அவனுக்கு என்னிடம் தனி அபிமானம். "ஸார்! நான் உங்களுக்கு ஒரு நல்ல கதை தருவேன்! அதை நீங்க எழுதி சன்மானம் வாங்கின எனக்கு என்ன தருவீங்க?" என்றான். நான் சன்மானத்தில் பாதி தருவதாக ஒப்புகொள்ளவே, கையில் வைத்திருந்த காகிதச் சுருளை என்னிடம் கொடுத்தான். "ஸார்! இது பழைய குப்பையோட கிடந்தது ஸார்! படிச்சு பார்த்தேன். ரொம்ப நல்லா இருக்கவே, உங்ககிட்டே கொடுத்துப் பார்க்கலாம்னு கொண்டு வந்தேன்!" என்றான். அதைப் பிரிக்கும்போதே 'பிரசுரிக்க ஏற்றதென' எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். அதை முற்றிலும் பிரித்தவுடன் நான் நாற்காலியிலிருந்தே துள்ளி எழுந்து விட்டேன். ஏன் தெரியுமா? நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அந்தப் பத்திரிகைக்கு அனுப்பி வைத்த ஒரு கதைதான் அது! எப்படியோ ஆசிரியர் கவனத்திலிருந்து தவறிய அது, என் பிரவேசத்திற்குப் பிறகு அச்சாகியது. இந்தச் சம்பவத்தை நான் மறக்க இயலுமா? என் வாக்குப்படி பையனுக்கு நான் பணம் கொடுத்து விட்டேன்!

ஜே. ராமஸ்வாமி,
சென்னை-8.

### வக்கீலின் திகைப்பு

என் வீட்டிற்கருகில் குடியிருந்தார் ஒரு வக்கீல். அவர் தன் வீட்டின் பின்புறம் பெரிய தோட்டம் போட்டிருந்தார். அந்தத் தோட்டத்தினுள் என் வீட்டுக் கோழிகள் அடிக்கடி நுழைந்து மண்ணைக் கிளறி சிறு செடிகளை நாசமாக்கி வருவதாகப் புகார் செய்தார். என்னால் என் கோழிகளுக்குப் புத்தி சொல்லி அவற்றை அங்கே போகாமல் தடுக்க இயலவில்லை. ஒரு நாள் நான் வெளியிலிருந்து வரும்போது அந்த வக்கீல் என்னைக் கூப்பிட்டார், அப்போதைய நிலையில் எனக்கு அவரைப் போய் நேரில் சந்திக்க மிகவும் தயக்கமாக இருந்தது. ஒருவாறு என் தயக்கத்தை சமாளித்துக் கொண்டே என் மோட்டார் சைக்கிளை அவர் வீட்டு வாசலில் நிறுத்தி விட்டு உள்ளே போனேன். என் கோழி அவருக்கு பலத்த சேதத்தை விளைவித்ததன் காரணமாக அன்று அதைத் தன் தோட்டக்காரனைக் கொண்டு அடித்துக் கொன்று விட்டதாகச் சொன்னார். என் கோழியும் இறந்து கிடந்ததைக் கண்டேன்.

என்னையே உற்று கவனித்துக் கொண்டிருந்த அந்த வக்கீலைப் பார்த்து நான் சொன்ன பதில் இது தான்.

"பரவாயில்லை ஸார்! அடிபட்ட கோழியை நான் எடுத்துக் கொள்ளு-

கிறேன்! வரும் வழியில் உங்கள் நாய் மீது என் மோட்டார் சைக்கிள் ஏறிவிட்டது! அதை விசாரிக்கத் தான் நீங்கள் கூப்பிட்டீர்களோ என்று நினைத்தேன்!"–வக்கீல் என்னிடம் வாதாட வாயின்றித் தவித்தார்!

சிதம்பரம்,
சென்னை–10.

## எதிர்பாராத பதில்!

கோவையில் தமிழ் எழுத்தாளர்களின் முதல் மகாநாடு பத்துவருஷங்களுக்கு முன்பு நடைபெற்றது. தலைவர் வ. ரா., திறப்பாளர் டி. எஸ். சொக்கலிங்கம், நான், மற்றும் சென்னை தமிழ் எழுத்தாளர்கள் பலர் ஒரு பிரத்யேக ரயில்பெட்டியில் பிரயாணம் செய்தோம். அரக்கோணம் தாண்டியதும் ஒரு பிலிப்பினோ மூட்டை முடிச்சுடன் எங்கள் வண்டியில் ஏறிக்கொண்டார். இது பிரத்யேக வண்டி என்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்கவில்லை. படுக்கையை விரித்துப் படுத்துகொண்டும் விட்டார். 'நாரதர்' சக்கரவர்த்தி அய்யங்காருக்கு இது பொறுக்கவில்லை. நாம் சொல்வது இவன் அடம்பிடிப்பதா என்று அவருக்கு கோபம். அவரை ஒன்றும் செய்யமுடியாத காரணத்தினால் 'இவன் எங்கேடா இங்கு வந்து தொலைஞ்சான்' என்றவாறு வாயாரத் திட்டினர். கடைசியில் ஓய்ந்தார். இது வரை மௌனம் சாதித்து வந்த பிலிப்பினோ படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். 'என்ன, அவ்வளவு தானு? இன்னும் உண்டா?' என்று கொச்சைத தமிழில் கேட்டார். 'நானும் என்நாட்டில் ஒரு எழுத்தாளன்தான்' என்று கூறி அவர் அவ் வண்டியில் வர உரிமை உண்டு என்று ஸ்தாபித்துக்கொண்டார். நாங்கள் எல்லோரும் பிரமித்து வாயடைத்துப் போனோம்.

எஸ். என். ஆர்.
சென்னை

## அவசரப் பிரயாணம்

1950–ம் வருஷம் மே மாதம் 16–ம் தேதியன்று எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை முடிவுகள் வெளிவந்தன. பத்திரிகை ஆபீஸ்காரருக்கு என்மீது என்ன கோபமோ என் நம்பரை மட்டும் தன் பத்திரிகையில் போடாமலிருந்துவிட்டார்! பரீக்ஷயில் 'கோட்' அடித்ததன் காரணமாக என் தகப்பனர் என்னை அளவுக்கு மீறி கோபித்துக் கொள்ளவே அன்றிரவு யாவரும் தூங்கும்போது பீரோவைத் திறந்து என் துணிமணிகள் வைக்கப்பட்டிருந்த படியிலிருந்து கையில் அகப்பட்ட இரண்டு துணிகளுடனும் ஒன்றிரண்டு ஷர்ட்டுகளுடனும் என் வீட்டிலிருந்து கிளம்பி விட்டேன். ரயில்வே ஸ்டேஷன் சென்று டிக்கட் வாங்க விளக்கடியில் சென்ற போது என் பையினுள் என் பார்வை சென்றது. வெள்ளை வெளேரென்று வெளுக்கப்பட்ட துணியின் இரு கரைகளையும் பார்த்தபோது எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கு சிவப்பு கரை வேஷ்டியும், நீலநிற பூ போட்ட பார்டர் வேஷ்டியும் கிடையாது என்பது நன்கு தெரியுமாதலால் பையினுள்ளிருந்து அவற்றை திகைப்புடன் வெளியிலெடுத்தேன்.

அவை என் தங்கையின் தூய வெள்ளை நிற தாவணிகள்!

ஆர். எஸ்.
மதுரை.

## சோக கட்டத்தில்.....!

ஒரு நாடகத்தில் நடிக்க எனக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. அந்த நாடகத்தில் நான் கழுற்றில் சுருக்கு மாட்டிக் கொள்ள வேண்டிய கட்டம் வரும்போது, கதாநாயகி கதறிக் கொண்டு ஓடிவந்து என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பது நாடகாசிரியரின் கற்பனை. ஆனல் நடந்தது என்ன தெரியுமா? நான் விளையாட்டாக சுருக்கு மாட்டிக்கொள்ளப் போய் அது வினையாக முடிந்து, சுருக்கு என் கழுத்தை நன்ருக இறுக்கி விட்டது! கதாநாயகிக்குப் பதில் நான் கதற, கதாநாயகி குலுங் குலுங்கிச் சிரித்துக்கொண்டே ஓடி வந்து என்னை சுருக்கினின்றும் விடுவித்த சம்பவத்தை எனக்குத் தெரிந்த யாவரும் சொல்லிச் சிரிப்பதால் நானும் சிரிக்க வேண்டித்தான் இருக்கிறது.

மணி,
சென்னை





# ரயில் பெட்டிகள் தயாராகின்றன

சென்ற அக்டோபர் மாதம் 2-ம் தேதி மகாத்மா காந்திஜியின் பிறந்த தினத்தன்று சென்னையைச் சேர்ந்த பெரம்பூரிலுள்ள ரயில் பெட்டி இணைப்புத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் ரயில்பெட்டியை இந்தியப் பிரதமர் ஜவாஹர்லால் நேரு ஓட்டிவைத்தார்.

1947-ல் இந்தியா சுதந்திரமடைந்தது. சுதந்திர சர்க்கார் பதவியேற்றவுடன் எல்லாத் துறைகளிலும் சுயதேவை பூர்த்தி செய்து கொள்வதை கொள்கையாகக் கொண்டனர். ஆனால், சில வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட ரயில்வேக்களின் நிலைமை யுத்தம் காரணமாக மோசமாகவிருந்தது. ரயில்வே என்ஜின்கள் சித்தரஞ்சன் லோகோ தொழிற்சாலையிலும், டாடா தொழிற்சாலையிலும் பழுதுபார்க்கப்பட்டு வந்தன. ரயில்வே பெட்டிகளைச் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் பெரிய அளவில் ஸ்தாபிதம் செய்யப்படவில்லை. 1948-ல் ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார் ரயில்வே மந்திரியாக இருந்தபோது ரயில்பெட்டிகள் தயார் செய்வதற்கென ஒரு தனி தொழிற்சாலை நிர்மாணிக்கத் தீர்மானமாயிற்று.


இத்தொழிற்சாலையை நிர்மாணிக்க பெரம்பூரில் அனேக சௌகர்யங்களிருந்தன. இந்தத் தொழிற்சாலை இந்திய மக்களின் நுண்ணறிவுக்கும் தொழில் முன்னேற்றத்துக்கும் சான்றாக விளங்குகிறது. இத்தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்துவர இப்படக் கட்டுரை மூலம் நமது வாசகர்களை அழைத்துச் செல்கிறோம்.




மேலே: பெரம்பூர் தொழிற்சாலை விமானத்திலிருந்து பார்ப்பதற்கு மிகவும் அழகாக அமைந்திருக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை வெகு விஸ்தாரமான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இத்தொழிற்சாலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நாட்டுக்குப் பயன்படக் கூடிய முறையில் உழைத்து வருவதை உணரலாம்.

கீழே: தொழிற்சாலையை அணுகும் போது பிரம்மாண்டமான சாலைகள் வருவோரை வரவேற்கின்றன.

வலது புறம்: தொழிற்கூடத்தின் கூரையில் ஆயிரமாயிரம் இரும்புச் சட்டங்கள் பின்னிக் கிடக்கின்றன.









மேலே: கடினப்பொருள்களை தொழிற்சாலையின் வெளிப்புறமிருந்து தொழிற்கூடத்திற்கு எடுத்துச் செல்லும் 'கிரேன்'


கீழே : தொழிற்கூட வாயிலிலிருந்து கடினப் பொருள்களை தொழிற்கூடத்தினுள் தூக்கிச் செல்ல உதவும் 'கிரேன்'






மேலே : ரயில்பெட்டியின் அடித்தளங்களுடன் சக்கரப்பகுதி கள் இணைக்கப்பட்டு அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காட்சி.

கீழே : இரும்புத் தண்டவாளங்களைச் சீராக்கி, அளவுப்படி வெட்ட உதவும் யந்திரம்.










மேலே: பளுவான இரும்புத் தகடுகளை எளிதில் நகர்த்தும்படி அமைக்கப்பட்டு அவற்றைச் சமனப் படுத்தும் யந்திரம்.


கீழே: நீண்ட இரும்புக் குழாய்களை துரு நீக்கிய பின் ஒரே அளவு பருமனுள்ளதாக மாற்றும் ஸ்விஸ் யந்திரம்.







மேலே: ரயில் பெட்டியின் சக்கரங்களின் நுணுக்கமான பகுதிகளைத் தயாரிக்கும் ஜெர்மானிய யந்திரம்.


கீழே: பெட்டிகளின் முக்கிய பகுதிகளுக்காக அமைக்கப் படும் கடினமான இரும்புத் தகட்டில் எளிதில் துளைபோடும் ஸ்விட்ஸர்லாந்து தேச யந்திரம்.



'இன்டிகரல்' ரயில் பெட்டியின் தளத்திற்கும், ஜன்னல் அமைப்பதற்கும் வேண்டிய தகடுகளை சீராக்கப் பயன்படும் யந்திரங்கள். இதைப் போன்ற நுணுக்க வேலைக்கான யந்திரங்கள் எட்டு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகி யுள்ளன. மொத்தத்தில் 15 சதவிகிதம் ஸ்விஸ், ஜெர்மானிய யந்திரங்களாகும்.











மேலே: உறுதிப்படுத்தி உப பாகங்களைப் பொருத்துவதற்கு உதவும் ஸ்குரு ஆணிகள் தயாரிக்கும் யந்திரம். இதனைப் போல் மொத்தம் 735 தனிப்பட்ட யந்திரங்கள் ஒரு ரயில் பெட்டியைத் தயாரிக்க இத்தொழிற்சாலையில் உபயோகத்திலிருந்து வருகின்றன.


கீழே: 'ஆயிரம் டன் எடை'யுள்ள இரும்புத் தகட்டை ஒரே தடவை அழுத்தி சமனமாக்கும் ராக்ஷஸ யந்திரம்.







தொழிற் கூடங்
களில் மிகப் பெரிதான
இதன் விஸ்தீர்ணம்
1000' x 260' பெரிய
யந்திரங்களை இயக்க
இந்த நிலப்பரப்பு
வசதியாக அமைந்
திருக்கிறது. இந்தத்
தொழிற்கூடத்தை
மாடியிலிருந்து பார்க்
கும்போது இவ்வாறு
தோற்றமளிக்கிறது.






மேலே: ரயில் பெட்டியின் வளை வான மேற்பரப் பைத் தயாரிக்க உத வும் 'ஜிக்' என்னும் யந்திர அச்சு. இந்த அச்சில் அமைக்கப் படும் மேற்கூரை ஒவ்வொரு பெட்டிக் கும் தனித்தனியே தயாரிக்கப்படும்.


கீழே: பெட்டி யின் மேற் கூரைக் குத் தேவையான 'இன் ஸலேஷன்' கம்பிகளைத் தயாரிக் கும் யந்திரம்.








A தொழிற் கூடத்தில் ரயில் பெட்டியின் கீழ்ப்பகுதிகளும் B தொழிற் கூடத்தில் இருபுறச் சுவர்களும் C பகுதியில் மேற் பரப்பும் தயாரானபின் D தொழிற் கூடத்தில் வர்ணம்பூசப்படுகிறது.

இந்தோ-ஸ்விஸ் நட்புறவுடன் இத் தொழிற்சாலை இயங்கி வருகிறது. இன்னும் ஸ்விட்ஸர்லாந்தில் 19 இந்தியர்கள் இத் தொழிற்சாலையில் வேலை பார்க்க பயிற்சி பெற்று வருகின்றனர்.












இம்முறையில் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டி விபத்துகளுக்குள்ளாகும் போது அதிக சேதமாவதில்லை. மேலும் பூர்ண பரிசோதனைக்குப் பிறகே அவை பிரயாணத்திற்கு அனுப்பப்படுகின்றன.

கீழே:- ஒரு பெட்டியைப் பரிசீலனை செய்யும் காட்சி.



'இன்டிகரல்' கோச் பெட்டிகள் விபத்து நேரும்போது பலத்த சேதத்திற்குள்ளாகாதபடி 'ஏன்டி-டெலஸ்கோபிக்' முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இம்முறை ரயில் பெட்டி தயாரிப்பில் புதுமையானது.







ஸ்விட்ஸர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு கம்பெனியின் கூட்டுறவில் பெரம்பூர் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டது. அந்த ஸ்விஸ் கம்பெனியில் வேலை பார்த்துவந்த ஸ்ரீ கே. சடகோபன் பெரம்பூர் தொழிற்சாலையின் பிரதம நிர்வாகியாக நியமனம் செய்யப்பட்டார். அவரது மேற்பார்வையில் தொழிற்சாலை செவ்வனே நடைபெற்று வருகிறது. தற்போது இத்தொழிற்சாலையில் சுமார் 1500 பேர்கள் வேலை செய்து வருகிறார்கள். சராசரி ஆறு மணி நேரத்தில் ஒரு ரயில்பெட்டி வீதம் இந்தத் தொழிற்சாலையில உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தப் பகுதியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் போட்டோக்கள் இந்திய சர்க்கார் செய்தி இலாக்கா புகைப்பட நிபுணர்களாலும் நமது காரியாலய போட்டோ நிபுணராலும் எடுக்கப்பட்டவை.

# சமூகத்தில் குற்றவாளியின் நிலை

ஸ்ரீ வி. டி. ரங்கஸ்வாமி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.

குற்றமிழைப்பது என்பது நாகரீகம் தோன்றிய காலம் முதற்கொண்டே இருந்து வருகிறது. என்ருலும் குற்றவாளிகள் நிலை குறித்து 19-ம் நூற்ருண்டின் மத்திய காலம் வரை தீவிரமாகக் கவனம் செலுத்தப்படவில்லை. குற்றம் செய்துள்ளவன் நிலை விஷயமாக விவரிப்பதே 'கிரிமிஞலஜி' என்பதாகும். சட்டத்தை ஏற்படுத்தும்போது சட்டத்தை மீறுபவர்களைத் தக்கபடி தண்டிக்க அதில் வழி ஏற்படுத்தப்படும். அப்படி சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்க வழி செய்யப்படவில்லை என்ருல் சட்டத்திற்கு மதிப்பில்லாது போய்விடும்.

ஆதிகாலத்தில் எந்தக் குற்றம் செய்தாஞே அதையே தண்டனையாக அனுபவிக்கச் செய்வது என்றிருந்தது. இது ஒழுங்கற்றது என்பதுடன் அநாகரீகமானது என்பதில் சந்தேகமே இல்லை. குற்றம் இழைத்தவன் அக்காலத்தில் தனிப்பட்டவஞகவே கருதப்பட்டு வந்தான். அவனுக்கும் அவன் ஏற்கனவே சேர்ந்திருந்த சமூகத்திற்கும் சம்பந்தமில்லை. குற்றம் செய்தவனை கடவுளுக்கும் மனிதனுக்கும் விரோதியாக மதித்ததுடன் அவனை சமூகத்திலிருந்தே பகிஷ்கரித்து விடுவது வழக்கம்.

வெகுகாலத்திற்குப் பிறகுதான் குற்றமிழைத்தவனை ஒதுக்கக் கூடாது; அவனுக்கும் சமூகத்தில் இடமுண்டு என்பது உணரப்படலாயிற்று. இந்த 'கிரிமினல் ஸோஷாலஜி' பின்ஞல் ஏற்பட்ட ஒரு அபிவிருத்தியேயாகும். இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி அரசரின் மந்திரியாக இருந்த தாமஸ் மூர், குற்றம் இழைப்பதற்கு காரணமாக இருப்பது சமூகத்திலுள்ள ஊழல்களே என்பதை எடுத்துக் காட்டிஞர். 18-வது நூற்ருண்டின் மத்தியிலே இங்கிலாந்தில் இவ்விஷயமாகக் கவனம் செலுத்தப்பட்டது. தனி நபரின் சமூகத்தோடு ஒட்டிய தொடர்பு, பாதுகாக்கப்பட வேண்டிய உரிமையாக உயர்ந்தது.

'கிரிமிஞலஜி', 'கிரிமினல் ஸோஷாலஜி' இவை இரண்டும் ஒன்ருேடு ஒன்று இணைந்திருப்பவை. ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்ருல் மற்ருென்றைப் பற்றியும் நன்கு தெரிந்து கொண்டால்தான் முடியும். அதாவது குற்றவாளியின் நிலையும், சமூகத்தின் சூழ்நிலையிலிருந்து உருவாகும் குற்றத்தின் தன்மையும் ஒன்றுடன் ஒன்று சேர்த்துப் பார்க்கப்பட வேண்டியவை. முதலில் குற்றம் செய்த முழுப்பொறுப்பும் தனிப்பட்ட நபருக்குத்தான் என்ருலும் பிற்காலத்தில் குற்றம் செய்வதற்கு சமூகத்தின் சூழ்நிலையும் காரணம் என்று அறியப்படலாயிற்று. இதிலிருந்து சமூக நலனை முன்னிட்டு, குற்றவாளிகளுக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு, தன்மை இவைகளை நிர்ணயிக்கவும் சிக்கல்களை விடுவிக்கவும் சமுதாயத்தாலேயே திட்டங்கள் வகுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

யாரும் பிறவியிலிருந்தோ அல்லது பரம்பரையாகவோ குற்றவாளிகளாக இருப்பதில்லை. சமூகச் சூழ்நிலை அவ்வப்போது மாறுவதற்கு ஏற்ப குற்றவாளிகளும் மாறுகிருர்கள். சமூகமும்

குற்றம் செய்தவன் திருந்தி தலைதூக்க முடியாதா? சமூகத்தில் அவனுக்கு இடமில்லையா? இன்று நாகரீக நாடுகளை எதிர்நோக்கியுள்ள பல முக்கிய பிரச்னைகளில் இது ஒன்ருகும். மேஞடுகள் பல, சிறை சீர்திருத்தங்களில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. சென்னை 'பப்ளிக் பிராசிக்யூட்'ராக சேவை செய்த ஸ்ரீ வி. டி. ரங்கஸ்வாமி அய்யங்கார் இப்பிரச்னையைக் குறித்து இக்கட்டுரையை எழுதியிருக்கிருர்.

தேங்கிப்போன நிலையில் எப்போதும் இருப்பதில்லை. வாழ்க்கைத்தரம், நாகரீகம் இவைகளின் தராதரத்திற் கேற்றபடி சமூக சூழ்நிலையும் மாறிக் கொண்டே இருக்கிறது. குற்றவாளி மனமாறுதல் அடைந்து ஒழுங்கான வாழ்க்கையை நடத்தும் எண்ணத்தையும் மேற்கொள்ளுகிறான். சமூகத்தில் குற்றவாளிகளின் நிலை திருந்துவதற்கான வசதி ஏற்பட இரு முக்கிய விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று சமூக சூழ்நிலை, மற்றொன்று பொருளாதார சூழ்நிலை.

சமூக சூழ்நிலையை எடுத்துக் கொண்டு பரிசீலித்தால் குற்றம் இழைப்பது சமூகத்திற்குச் செய்யப் படும் தீங்குதான். சமூக அபிவிருத்திக் காகத் தொழிற்சாலைகள் ஏற்பட்டு சுபீட்ச நிலை ஏற்பட்டாலும், 'இருப்பவன்—இல்லாதவன்' என்ற நிலை ஏற்படுவது காரணமாக அதிருப்தி ஏற்பட்டு, குற்ற மிழைக்கவும் இடமேற்படுகிறது. செழிப்பற்ற நிலையும் அதிருப்தியும் சமூகப் புல்லுருவிகளை உற்பத்தி செய்கின்றன. இத்தகைய நிலை பொருளாதார நிலையிலுள்ள மாறுபாடுடன் நிற்காமல், வளமான வாழ்விற்காக மனிதனை குற்றவாளியாக்கும் நிலைக்கும் கொண்டு வந்துவிடுகிறது.

இரண்டாவது, பொருளாதார சூழ்நிலை சமூகச் சிக்கல்களுக்கு மிக முக்கியமான காரணம், அதன் பொருளாதாரத்தில் காணப்படும் சீர்கேடுதான். ஒரு பொருளாதார அமைப்பில் ஆடம்பர வஸ்துவாகக் கருதப்படுவது மற்றொரு பொருளாதார அமைப்பில் அவசிய வஸ்துவாக இருக்கிறது. மனைவி மக்களின் பசிக்கொடுமையைத் தீர்க்க ஒருவன் ஒரு ரொட்டித் துண்டைத் திருடுவது அனுமதிக்கப் படலாம் என்றால் மற்றொரு பொருளாதார அமைப்பில் சிகரெட்டையோ அல்லது சினிமா டிக்கட்டையோ திருடுவது அனுமதிக்கப்பட வேண்டியதுதான்.

சமீபத்தில் ஒரு சஞ்சிகையிலே வெளியான சிறு கதை ஒன்று இதை நன்றாக விளக்கக்கூடியது. வியாபாரத்தில் வெற்றி கண்ட ஒருவர் தான் படித்த கல்லூரிக்கு ஒரு சமயம் விஜயம் செய்தார். அங்கே பொருளாதாரப் பேராசிரியரிடம் இருந்த பரீக்ஷை கேள்வித்தாள் ஒன்றை வாங்கிப் பார்த்தார். அவர் படித்த காலத்தில் கேட்கப்பட்ட கேள்விகளே அதில் இருந்ததைக் கண்டு ஆசிரியரை இதுபற்றிக் கேட்டார். பேராசிரியர்பதிலளிக்கையில், "பொருளாதாரம் பற்றிய கேள்விகள் எப்போதும் மாறுபடாமல்தான் இருக்கும் என்றும் ஆனால் வினாக்களுக்குரிய விடைதான் பொருளாதார நிலைக்கேற்ப அவ்வப் போது மாறிமாறிக்கொண்டே இருக்கும் என்றும் எடுத்துரைத்தார்.

இதிலிருந்து சமுதாயத்தின் பொருள்துறை எப்படி மாறுபாடு அடைகிறதென்றும் அதையொட்டி குற்றங்களும் குற்றவாளிகளும் எத்தகைய மாறுதல்களுக்குள்ளாக நேரிடுகிறது என்றும் தெரியவருகிறது. வாழ்க்கைத் தரம் மாறுபடும்போது தேவைகள் அதிகமாகின்றன. இன்றைய சமூகத்தினர், வேலையின்மையாலும் போதுமான வருமானம் இன்றியும் குடியிருப்புக்குரிய வசதிக்குறைவுகளாலும் தங்கள் தேவைகளை தங்கள் சக்தியைக்கொண்டு சரிக்கட்ட முடியாமல் தவிக்கின்றனர். இதிலிருந்துதான், இந்த விதமான பற்றுக்குறைகளின் தாக்குதல்கள் குற்றம் புரிவதற்குரிய எண்ணம், மனப்பான்மை இவற்றை உருவாக்குகின்றன. இதுதான் தீங்கிழைத்தலின் முதற்படி.

வர்த்தகத்துறையிலே நடக்கும் போட்டியும் இதன் விளைவாக ஏற்படும் பொருள் நஷ்டங்களும் குற்ற மனப்பான்மையைத் தூண்டுவதாக அமைகின்றன. சட்ட பூர்வமான வழிகளை விடுத்து குறுக்கு வழிகளைக் கையாளத் தூண்டுகின்றன. வாழ்க்கைத்தரத்தில் ஆடம்பரத்தை மேற்கொள்ளும்போது தேவைகள் விரிவடைகின்றன. தனக்கிருக்கும் பொருளாதார வசதிகளைக் கொண்டு, புதிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தவிக்கிறான் மனிதன். இதன் காரணமாகக் குற்றங்களும் சட்ட விரோதமான செய்கைகளும் நிகழ்கின்றன. ஒரு நாட்டின் நேர்மையான பிரஜை என்ற ஸ்தானத்திலிருந்தே மனிதன் தவறி விழுந்து விடுகிறான்.

மாறுபட்ட வாழ்க்கைத்தரமும் விரிவான தேவைகளும் உயர்ந்த நம்பிக்கையுடன் நடந்து கொள்ளும் மனிதர்களைக்கூட நிலை தவறும்படித் தூண்டுகின்றன. ஆரம்பத்தில ஒருவராலும் கண்டு கொள்ள முடியாமலும் பிறரிடத்திலிருந்து மறைக்கப்பட்டும்செய்யப்படும் தவறுகளும் குற்றங்களும் ஆரம்பத்தில் மனிதனுக்கு ஊக்கத்தையே கொடுக்கின்றவென்றாலும்,குற்றங்கள் வெளியாகும் போது, ஒருவனது வாழ்வே குலைந்து விடுகிறது. சிறுகச் சிறுக செய்த குற்றங்களுக்கு பெரும் தண்டனையை முடிவில் அடைகிறான் மனிதன்.

குறுக்கு வழிகளைக் கையாளும் முறைகள் பல காணப்படுகின்றன. சிறிய தொகைக்குப் பிரதிபலனாக பெரும் தொகை தரப்படும் என்ற விளம்பர வித்தைகளும் நோட்டுக்களை இரட்டிப்பாக்கித் தரப்படும் என்ற வஞ்சனைகளும் இவைகளில் சில. இதிலே மனித நம்பிக்கை நசித்துப் போவதோடு பொருள் விரயமும் ஏற்படுகின்றது. சட்ட விரோதமான வழிகளிலே பணம் குவித்து ஆடம்பர வாழ்வு நடத்தவேண்டும் என்ற மனப்பான்மைதான், இந்த விதமான தீங்குகள் இழைப்பதற்கு மூலகாரணமாக இருக்கிறது. இப்படிப்பட்ட மனப்போக்கு, மனித உள்ளத்தில் உதிப்பதற்குக் காரணம் அவன்வாழும் சமூக நிலைதான், என்றார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயுமாக வாழ்ந்த 'லகாஸாகாண' என்ற பிரஞ்சுக்காரர். சமுதாயத்திலே காணப்படும் குற்றவாளிகள் சமுதாயத்தின் தகுதிக்கு ஏற்றவர்கள்தான் என்பது கருத்து.

ஜனநாயக தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் சமூகத்திலே காணப்படும் குற்றவாளிகளின் நிலைமையை ஆராய வேண்டியது அவசியம். ஜனநாயகம் எல்லோருக்கும் எல்லாவிதமான சுதந்திரங்களையும் வழங்கி யிருக்கிறது. பொருளீட்டுவதில் யாருக்கும் எந்த விதமான தடையும் ஜனநாயகம் ஏற்படுத்தியதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் திறமைக்கேற்ற முறையில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம். சுதந்திர விஷயத்திலும் தனிப்பட்ட நபரை ஜனநாயகம் கட்டுப்படுத்தவில்லை. பொருளீட்டுவதிலுள்ள இந்த கட்டுப்பாடில்லாமை, சமூகத்திலே நேர்மையானவர்களையும் சமுதாய விரோதிகளையும் சிருஷ்டிக்கிறது. கட்டுப்பாடும். நிபந்தனைகளுமற்ற ஜனநாயகத்தின் சலுகையால், சமுதாயத்திலே குற்றவாளிகளும் குற்றங்கள் புரியும் விதமும் புதுமுறைகளில் பெருகிக்கொண்டே வருவது உண்மை. குற்றவாளிகளுக்குத் தங்கள் பாதுகாப்பிற்காக புதுமுறைகளைக் கையாளும் வசதிகளும் இந்த சமூக அமைப்பிலே கிடைத்திருக்கின்றன. இந்தப் பாதுகாப்பு முறை, குற்றவாளிகளுக்கிடையே சங்கங்களை நிறுவுவதற்கும் ஒன்றாகத் திரண்டு தங்கள் தொழில் முறையை விருத்தி செய்யவும் வழி வகுத்துக் கொடுக்கிறது.

### பெரும் குடும்பம் என்றால் அதிக குற்றங்கள்!

மூன்று,நான்கு சகோதரர்கள், சகோதரிகள் உள்ளவர் கிரிமினல் குற்றம் செய்தவராக மாறுவது சகஜம் என்று, சமூக சேவையாளரும் சிறைசீர்திருத்தவாதியுமான ஜோஸப் டிரெனமன் கூறுகிறார்.

இவர் ஆயிரக்கணக்கான வழக்குகளைப் பரிசிலனை செய்து இம்முடிவுக்கு வந்தார். 'பெரிய குடும்பங்களில் பிறந்தவர்களில் மூவரில் ஒருவர் குற்றங்களைச் செய்பவராக இருக்கின்றார்' என்று அவர் கூறுகிறார். சிறு குடுமபங்களில் இத்தகைய குற்றங்கள் மிகவும் குறைவு என்பது அவர் கருத்து.

'அதிக குழந்தைகள் என்றால் வறுமை அதிகரிப்பு. அதனாலேயே குற்றங்கள் செய்வதும் அதிகரிக்கின்றன' என்கிறார் அவர்.

'குடும்பத்தில் ஒரே பிள்ளையாகப் பிறந்து, அதிக செல்லம் கொடுக்கப்படுவதின் காரணமாக குற்றம் செய்பவனாக மாறலாம்' என்று அவர் எச்சரிக்கிறார்.

ஜனநாயக சமூகத்தில் இளம் குற்றவாளிகளின் நிலைமையைக் கவனிக்க வேண்டும். தங்களுக்கு டெக்னிகல் துறையில் வேலை தெரிந்தும் சமூகம் வாழ வழி செய்யவில்லை என்றும் ஆகவே தாங்கள் குற்றம் செய்ய நேரிட்டதாகவும் இவர்கள் பழி சுமத்துகிறார்கள். உலகயுத்தம் காரணமாகவே இளம்குற்றவாளிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. யுத்த காலத்தில் பெற்றோர்களிடமிருந்து பிரிந்த இந்தச் சிறுவர் சிறுமியர், ஆதரிப்பாரற்று வயிற்றுப் பிழைப்புக்காகக் குற்றமிழைக்கத் தொடங்கினர். இவர்கள் வயது வந்தபின் சமூகத்திற்கு நடுக்கம் தரக்கூடியவர்களாக விளங்குகின்றனர்.

ஸோஷலிஸ சமுதாயத்தில் குற்றவாளியின் நிலைபற்றிச் சிந்திப்போமானால்,குற்றவாளி ஒருமுறைதண்டிக்கப்பட்டால், தண்டனை அனுபவித்தபின் வாழ்வில் திருந்தி நடக்கும் வகையில் சட்டம் தண்டனையை நிர்ணயிக்க வேண்டும். அப்போதுதான் சமூகத்தில் குற்றங்கள் பெருகாமலிருக்க வழியுண்டு. சந்தர்ப்பத்தால் குற்றவாளியானவனும் திருந்தி வாழ மார்க்கமுண்டு.

ஜனநாயகம், ஸோஷலிஸ அமைப்பு அல்லது மற்ற எவ்விதமான சமூக அமைப்புக்களிலேயும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையும் அளிக்கப்படும் தண்டனைகளும் பயனளிப்பவைகளாகத்தான் இருக்கின்றன. துரிதமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முறையும் வழிகளும் முன்னேறினால் நிச்சயம் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறையத்தான் செய்யும். சமூக நலனுக்காகக் குற்றவாளிகளின் மீது சரியான கண்காணிப்பு வைப்பதோடு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

சமூக நலன், வளர்ச்சி, பாதுகாப்பு இவைகளின் முன்னேற்றத்திற்காக, யுத்தம், பஞ்சம் முதலிய சமூக நெருக்கடிகள்ஏற்படும்போதுஅதனால் பாதிக்கப்பட்ட சாதாரண மனிதனுக்குச் சிறந்த பாதுகாப்பு அளித்தல் வேண்டும். அவனது தேவைகளின் மீது விலைவாசி உயர்த்தி கொள்ளையடிக்க முயற்சிக்கும் யாரையும் சமூகத் துரோகி என்று முத்திரை யடித்துத் தக்க தண்டனைகள் வழங்குவதில் தயக்கமோ, தாக்ஷண்யமோ இருத்தல் கூடாது.

சமூகச் சிக்கல்களுக்கு இரையாகி, தீங்கு செய்து குற்றவாளியாக மாறும் மனிதன், திருந்தி நேர்மையாகவும் சமுதாய அங்கமாகவும் வாழ்ந்து வருவதற்கு இவைகள் இன்றியமையாதவை. வாழ்க்கைத் தரத்தின் உயர்வு தாழ்வுகளால் பாதிக்கப்பட்டு மதியிழந்து, வெறி கொண்டு, கொலை, கொள்ளை முதலிய பெரும் குற்றங்களைச் செய்யும் மனிதனைச் சீர்படுத்த, சமுதாயம் முன்வந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் புரையோடிப் போன சமுதாய சரீரத்திற்குச் செய்யப்படும் ரண சிகிச்சை.

முதல்முறை வழிதவறிக் குற்றவாளியாகி, வாழ்வின் நீண்ட காலத்தைச் சிறையிலே கழித்து, உணர்ச்சியற்றுத் திரும்பி வரும் மனிதனைப் பாதுகாத்து, பண்புடையவனாகவும் பாட்டாளியாகவும் மாற்றுவதற்குச் சமுதாயத்தில் முயற்சிகளும் ஸ்தாபனங்களும் இருக்க வேண்டும். இந்த முயற்சி சமுதாயத்தையும் குற்றவாளிகளையும் சீர்படுத்த உதவுகிறது.

சமூக வளர்ச்சியையொட்டி,அதிலே உறவு கொண்டாடும் குற்றவாளிகளின் மனப்போக்கும் மாறுதலடைந்தே தீரும். முன்னேறும் சமூகத்தின் சீரான அமைப்பு பாபச் செயல்களைத் தடுப்பதோடு மனித உள்ளத்திலே பாப எண்ணங்களைப் பற்றிய நினைவையும் அகற்றி விடுகிறது. சமூகவாசியாக, நேர்மையான மனிதனாக வாழவேண்டும் என்ற அவா உள்ளத்திலே ஆர்ப்பரித்துப் பொங்கும்.

---

**ஒரு சம்பாஷணை!**

"வக்கீல் கொஞ்சம் மந்த புத்திக்காரரானால் 'கேஸ்' வளர்ந்து கொண்டே போகும்!"

"ஆமாமாம்! டாக்டர் கொஞ்சம் மந்த புத்திக்காரரானால் 'கேஸ்' உடனுக்குடன் முடிந்து விடும்!"

---

# பாரசீக இலக்கியம்

டி. எப். ஆர். மஆலி சாகிப்

வடமொழியாகிய சம்ஸ்கிருதம் தான் உலகில் மிகப் பூர்வீக பாஷை' என்று ஆரியர்கள் கூறுகின்றனர். அரபு மொழிதான் ஆதியிலிருந்து யிருக்கும் அரிய மொழி' என்று இஸ்லாமியர்கள் கூறுகிறார்கள். இவ்வாறே, 'பாரசீக மொழிதான் மிகத் தொன்மை வாய்ந்த' தென்று ஈரானியர்கள் கூறுகிறார்கள்.

இம்மூன்று சொற்களிலும் உண்மையில்லாது போகவில்லை. ஏனெனில் இம்மூன்றும் மிகப் புராதன மொழிகளேயாம்; இதில் சந்தேகமில்லை. அம்மூன்று கருத்துக்களோடு நம் தமிழ் மொழியைப் பற்றிய கீர்த்தியையும் சேர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். ஆம், உலகின் சரித்திரமே எழுதத் தொடங்கப்படாத காலத்திலிருந்தே—அதாவது அகஸ்தியமாமுனிவர் காலத்திலிருந்தே தொன்மை மிகு நந்தமிழ் மொழி இருந்து வளர்ந்து வந்திருக்கிறதென்று, தென்னாட்டவர்களாகிய நாம் பெருமிதம் கொள்கிறோமல்லவா? இது நியாயம்தான்.

சம்ஸ்கிருத மொழிக்குத் தாய் எதுவென்று தெரியவில்லை; அதே போல் அரபு மொழிக்கும் தாய் எதுவென்று தெரியவில்லை. ஆனால் பாரசீக மொழிக்கு மட்டும் தாயும் தந்தையும் 'யார்' என்பது ஒருவகையில் தெரியவருகிறது. பாரசீக மொழிக்கு சம்ஸ்கிருதம் தாய் என்றும் அரபு பாஷை அதன் தந்தை யென்றும் சிலர் கூறுகிறார்கள். இதைப் பலர் ஆதரிக்கிறார்கள். ஏனெனில் பாரசீக பாஷையில் சம்ஸ்கிருத மொழியின் தொனிப்பும் சாயலும் நிறைய இருக்கின்றன. அடுத்தபடியாக அரபு வாக்கியங்கள் அதில் ஏராளமாகக் காணப்படுகின்றன.

உதாரணமாக, ஆஸ்தி, நாஸ்தி, ஏக, துவ, பஞ்ச, ஷஷ், சப்த, நவ முதலிய சொற்களின் தோற்றமும் சிதைவும் நிறைய இருக்கின்றன. இதைக் கொண்டே, சம்ஸ்கிருத மொழியும் பாரசீக மொழியும் ஆதி காலந் தொட்டே உறவு கொண்டிருந்து வருகின்றனவென்று, மொழி ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார்கள். பாரசீகத்துக்கு சம்ஸ்கிருதம் தாய் என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

பாரசீகத்துக்கு அரபு பாஷையே தந்தை என்பதற்கு மற்றொரு ஆதாரம் உண்டு. பாரசீகத்துக்கு தனி அட்சரம் (லிபி) கிடையாது. நம் பாரத நாட்டில் உருது மொழி எழுதப்படுவது போல், அரபு அட்சரங்களைக் கொண்டேதான் அதுவும் எழுதப்படுகின்றது. ஆனால் சாயல் மட்டும் வெவ்வேறு. இதனாலும், பாரசீகத்துக்கு தாய் உறவோ, தந்தை உறவோ தற்காலத்தில் கிடையாதென்று ஏற்படுகிறது.

## பாரசீக இலக்கியம்

இஸ்லாம் மதத்தினர் தோன்றி சற்றேறக்குறைய 1350 வருடங்கள் தான் ஆகின்றன. ஆனால் பாரசீக மொழி அதற்கு முன்னரே இருந்து வருகிறது. ஆகையால் பாரசீகம் (இப்போது கருதப்படுவதேபோல்) முஸ்லீம்களுடைய பாஷையல்ல. இஸ்லாம் தோன்றுவதற்கு முன், அரபு பாஷையானது விக்ரஹ ஆராதிகளான ஆதி அராபியர்களின் பாஷையாக இருந்து வந்ததைப் போலவே பாரசீக மொழியும் இஸ்லாத்துக்கு முன்னரே, 'அக்னியை' தெய்வமென வணங்கிவந்த 'ஜொராஸ்திரியர்'களின் பாஷையாக இருந்து வந்தது.

ஜொராஸ்திரியர்களின் பழம்பெரும் வேதமாகிய 'ஜெந்த் அவஸ்தா' என்பது பாரசீக மொழியில் இருந்து வந்துள்ளது. பாரசீக இலக்கியத்தில் இந்த வேதத்துக்கு முன் இயற்றப்பட்ட (பழைய) நூல் ஏதேனும் இருப


பதாகவோ இருந்ததாகவோ தெரியவில்லை.

பாரசீகர்களின் 'ஜெந்த் அவஸ்தா' என்ற வேதம், கி. பி. 400-ம் ஆண்டு முன்னிருந்தே இருந்து வந்துள்ளது. 'பெஹ்ராம்கோர்' என்ற மன்னனும் 'திலாராம்' என்ற அழகிய ராணியும புராதன பாரசீக (ஈரான்) நாட்டில் வாழ்ந்திருந்தனர். அவ்வரச தம்பதிகளின் வீரதீரப் பராக்ரம, காதல் கதையும் பாரசீக மொழியில் 1500 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

கி. பி. 600-ம் ஆண்டில் நீதி நெறிவழுவாத 'நவ்ருஷர்வான்' என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனைப் பற்றி வரலாற்று நூலும் பழைய பாரசீக மொழியில் இருந்து வருகிறது.

## முஸ்லீம்கள் தொடர்பு

பாரசீக மொழி இலக்கியம், அதன்பின் முஸ்லீம்களின் தொடர்பு ஏற்பட்டவுடன் தான் வளம் பெற்றுத் திகழ ஆரம்பித்தது. மஹான் முகம்மத் நபிஸல் அவர்கள் நபியாகத் தோன்றிய சொற்ப காலத்தில், அரபு தேசம் முழுவதையும் முஸ்லீம்கள் ஆதிக்கங்கொண்டு, இஸ்லாமிய ஆட்சியை ஸ்திரப்படுத்தி வைத்தார்.



வெய்யிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெரிந்து பாட நீயும் உண்டு
வையந்தரு மிவ்வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?

(மூலம் : உமர்கய்யாம்
மொழிபெயர்ப்பு : கவிமணி தேசிகவிநாயகம்)

முகம்மத்நபிஸல் காலத்திலும் அதன்பின் நான்கு கலீபாக்கள் குடியாட்சிக் காலத்திலும், அரபு வீரர்கள் தங்கள் இஸ்லாமியக்கொடியை எசிப்து, ஸிரியா, பாரசீகம் முதலிய பல பிரதேசங்களில் பறக்க விட்டார்கள். அதாவது அரபு தேசத்தை யடுத்த சுற்றுவட்ட நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று, வெற்றி பெற்று இஸ்லாத்தை நிலை நிறுத்தினார்கள். அத்துடன் அரபு மொழித் திருவேதமாகிய குர்ஆன் போதனையை அடிப்படையாகக் கொண்ட அருங்கலை இலக்கியத்தை அந்த அயல் நாடுகளிலெல்லாம் தீவிரமாகப் பரவச் செய்தார்கள்.

இங்ஙனம் கி. பி. 850-க்குப் பிறகு பாரசீகத்தில் இஸ்லாமிய மன்னர்களால் அந்நாட்டு இலக்கியம் வளம் பெறத்தொடங்கியது. அக்காலப் பாரசீக (முஸ்லிம்) மன்னர்கள், இஸ்லாமிய சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டு, கவிதையாகவோ, உரைநடையாகவோ மொழிச்சேவை புரியும் பாவாணர்களையும் நூலாசிரியர்களையும் பெரிதும் ஆதரித்துப் போஷித்தார்கள். இதன் காரணமாக அன்னிய பாஷைகளிலிருந்து பல இலக்கியங்கள் பாரசீக பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டன. உதாரணமாக சமஸ்கிருதத்தில் சோமசன்மா எழுதிய 'பஞ்சதந்திரம்' என்னும் கதை 'கலீலா-வதம்கு' என்ற பெயரால் பாரசீக மொழியில் ஓர் இலக்கிய நூலாக இருந்து வருகிறது.

## மஹ்மூத் கஜினி காலம்

கி. பி. 998-ல் சுல்தான் மஹ்மூத் கஜினி, பாரசீகத்தை ஆண்டு கொண்டிருந்தார். இவர், பாரசீக இலக்கியத்தை உலகத்திலெல்லாம் பரவச் செய்ய முயற்சித்தார். இவர் தன் ஆஸ்தானப் புலவர்களும் வித்வான்களுமான அன்ஸரி, பர்ருகி பிர்தௌஸி, ஆஸாதி, அஷ்ஜதி போன்றவர்களின் ஊழியம் பெற்று, பெரும் காவியங்களையும் நூல்களையும் இயற்றுவித்தார்.

இவைகளில் குறிப்பிடத்தக்க தொன்று, 1000 ஆண்டுகளுக்கு முன் கவி பிர்தௌஸி இயற்றிய 'ஷாநாமா' என்ற பெருங் காவியமாகும்.

புலவர் பிர்தௌஸியை மஹ்மூத் கஜினி தன்னுடைய தர்பாரில் வைத்துக் காப்பாற்றத் தவறிவிட்டார். ஆயினும் அவருடைய தூண்டுதலால்தான் 'ஷாநாமா' இயற்றப்பட்டது.

## ஸல்ஜூக்கியர் காலம்

அதன்பின் ஸல்ஜூக்கியர் பாரசீகத்தை ஆண்ட காலம் வருகிறது. இது கி. பி. 1030-ம் ஆண்டாகும். இது மலிக்ஷா என்ற மன்னருடைய காலம். இவருடைய காலத்தில்தான், இணையிலா ருபாயியாத்களைப் பாடி வைத்த உமர்கய்யாம் இருந்தார். உமர்கய்யாம் தன் 'ருபாயியாத்' காவியத்தை எந்த மன்னருடைய ஆதரவு பெற்றும் இயற்றவில்லை. அவர் தன் மனம்போனபடி வாழ்ந்து, குடித்து, மகிழ்ந்திருந்த நாட்களில் உல்லாசமாய்ப் பாடிய இன்பரசக் கவிதைகளாகும் ருபாயியாத்கள்! அதன்பின் அப்பாஸியா வம்ச கலீபாக்களின் ஆட்சிக் காலம் வந்தது. அப்போதுதான், முற்ற முற்ற இஸ்லாமிய வைதிகாசாரக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பாரசீக மொழியில் இலக்கியங்கள் பெருக்கெடுத்தன. அப்போது பாக்தாத் நகரம் கலைவளம் பொருந்திய இஸ்லாமியக் களஞ்சியமாய்த் திகழ்ந்தது. இமாம் கஜ்ஜாலி, ஷெய்க் ஸஅதி, மௌலானா ரூமி, பரீதுத்தீன், அத்தார் நிஜாமி, ஜாமி, காகானி, காஜாஹாபிஜ் முதலிய பெரும்புலவர்கள் தோன்றி, பாரசீக மொழியில் குலிஸ்தான், போஸ்தான், யூசுப்-ஜுலேகா, கிமியாஸ ஆதத், மஸ்னவீ, ஷரீப் முதலிய ஞான காவியங்களையும் வசன நூல்களையும் இயற்றிக் குவித்தார்கள்.

## இந்தியாவில் பாரசீகம்

இந்தியாவில் (கி. பி. 1400-ல்) மொகலாய முஸ்லீம்களின் ஆட்சி ஏற்பட்டபின், அமீர்குஸ்ரூ, தபீர், மீர் ஹஸன், அல்லாமா இக்பால் போன்ற புலவர்கள் பாரசீகத்தை வளர்த்தவர்கள் இக்பால் என்னும் பெரும் புலவர் பாரசீக மொழியில் பலகவிதை நூல்கள் இயற்றி, பாரசீக இலக்கியத்துக்குப் புத்துயிர் அளித்தார்.

இன்று ஆப்கானிஸ்தானிலும் ஈரானிலும் பாரசீகமே அரசாங்க மொழியாக இருந்து வருகிறது. ★

# கனிமாரா புத்தகசாலை

"நந்தலால்"

புழலேரி நிரம்பி வழிவதைக் கண்டிருக்கிறோம்; அதுபோல் புத்தகசாலை 'நிரம்பி வழிவ'தை எழும்பூரிலுள்ள கனிமாரா லைப்ரெரிக்குச் சென்றாலும் காணலாம்.

காபிரைட் (1948) சட்டப்படி பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் 5 பிரதிகள் (எதற்காக 5 பிரதிகள் என்பது தெரியவில்லை) இந்தப் புத்தக சாலைக்கு அனுப்பப்பட வேண்டும். அச் சட்டப்படி இந்தப் புத்தகசாலை ராஜ்ய மத்ய லைப்ரெரியாக உயர்த்தப்பட்டது.

1955-ம் வருஷ "டெலிவரி ஆப் புக்ஸ்" சட்டப்படி இந்தியாவில் ப்ரசுரிக்கப்படும் புத்தகங்கள், தலா பிரதி ஒன்று இந்தப் புத்தகசாலைக்கு அனுப்ப வேண்டும். இச்சட்டப்படி இந்தியாவிலுள்ள நான்கு தேசீய லைப்ரெரிகளில் கனிமாரா தென் பிராந்தியத்திற்கான தேசீய லைப்ரெரியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தின்படி ஒவ்வொரு பிரசுரகர்த்தரும் 6 பிரதிகள் அனுப்பிவைக்கவேண்டும். புத்தகசாலை ஏன் நிரம்பி வழிகிறதென்று இப்போது தெரிகிறதல்லவா?

இப்படி வந்து குவியும் புத்தகங்கள் கட்டுகள் பிரிக்கப்படாமலேயே ஒரு அறையில் போட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பிரித்து அடுக்கி வைக்க சிப்பந்திகள், இடம் இரண்டும் போதாது. புத்தகசாலையை விஸ்தரிக்கும் எண்ணத்துடன் மற்றொரு கட்டிடத்தையும் புத்தகசாலைக்கு ஏற்பாடு செய்யலாமா என்பது குறித்து சர்க்கார் யோசனை செய்து வருகின்றனர். ஆறு பிரதிகள் என்றிருப்பதை ஒரு பிரதி அல்லது இரண்டு பிரதிகளை பிரசுரகர்த்தர்கள் அனுப்பினால் போதும் என்று முடிவு செய்யலாமா, என்றும் சர்க்கார் யோசித்து வருகின்றனர். சட்டத்தைத் திருத்துவதன் மூலம்தான் இதைச் செய்ய இயலும்.

கனிமாரா லைப்ரெரியை தேசீய லைப்ரெரியாக செய்ததின் மூலம், எல்லா ஜில்லாக்களிலும் புத்தகசாலைகள் ஏற்பட்டபின் இந்தியாவின் ஒரு கோடியில் உள்ள ஒருவர் விரும்பினால் இந்தியாவின் மற்றொரு கோடியிலுள்ள லைப்ரெரியிலிருந்தும் தனக்கு வேண்டிய புத்தகத்தை வாங்கிப் படிக்க வசதி ஏற்பட்டிருக்கிறது.

புத்தகசாலை வளர்ச்சிக்காக 'ஸெஸ்' வசூலிப்பது ஆரம்பித்து ஏழு வருஷங்களாகிவிட்டன. ஆனால் லைப்ரெரி சட்டத்தை அமுல் நடத்துவது என்னமோ ஆமை வேகத்தில்தான் நடைபெற்று வருகிறது.

கிழக்கிலேயே மிகச் சிறந்த 'லைப்ரெரி' என்ற புகழைப்பெற்றது இந்தப் புத்தகசாலை. கனிமாராவின் பெயர் இதற்கு வைக்கப்படுமுன் இது 'மியூஸியம் லைப்ரெரியாக'மட்டுமே இருந்து வந்தது. இதை ஆரம்பித்து வைப்பதில் விசேஷ சிரத்தை காட்டியவர் 1859 முதல் 1872 வரை 'மியூஸியம் சூப்பரின்டென்டென்டாக இருந்த காப்டன் மிட்சல் என்பவர்.

காப்டன் மிட்சல் அப்போது சர்க்காருக்கு எழுதிய கடிதத்தில் மியூஸியத்தைப் பெரிதாக்கவேண்டும் என்றும் இயற்கை சாஸ்திரத்தைப் பற்றி அறிவதில் மக்களுக்கு ஆர்வம் ஏற்படச் செய்யவேண்டும் என்றும் இதற்காக ஒரு லைப்ரெரி வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

1860-ல் லைப்ரெரி ஆரம்பித்தபோது விஞ்ஞான புத்தகங்களை வாங்கி சேகரிப்பதில் மட்டுமே மிட்சல் கவனத்தைச் செலுத்தினர்.

ஜூன் 1862-ல் பொதுமக்கள் வந்து படிக்க புத்தகசாலை திறந்து விடப்பட்டது என்றாலும் அதனுள் பிரவேசிக்க டிக்கட்டுகள் வழங்கப்பட்டன.

மியூஸியத்தின் அடுத்த சூப்பரின்டென்டென்ட் ஜார்ஜ் பிட்டி லைப்ரெ

இந்தியாவில் கிராமங்களில் 17,000 'லைப்ரெரி'கள் ஏற்பட வேண்டுமென்றும் சிறு நகரங்களில் சுமார் 1000 'லைப்ரெரி'களும் 14,000 மோட்டார் 'லைப்ரெரி'களும் ஏற்பட வேண்டும் என்றும் டில்லி சர்வகலாசாலை லைப்ரெரியன் ஸ்ரீ எஸ். ஆர். ரங்கனாதன் கூறியிருக்கிறார். இவைகளை நடத்த 60,000 லைப்ரெரியன்கள் தேவைப்படுவார்களாம். 1961 மார்ச் மாதத்திற்குள் இதைச் சாதிக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறது.

வேண்டிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்தார். இக்கட்டிடம் 1875-ல் பூர்த்தியாயிற்று. 1876-ல் சென்னை கவர்னர் பக்கிங்ஹாம் இந்தக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

சென்னை சுவடி புத்தகசாலை 1935 வரை இப்புத்தகசாலையுடன் சேர்ந்து தான் இருந்தது. பிறகுதான் சென்னை சர்வகலாசாலை கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. லிடரரி சொஸைட்டி லைப்ரெரியும் சர்வகலாசாலை லைப்ரெரியும் இங்கிருந்து பின்னர் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. இந்த லைப்ரெரிக்கு 1896-ல்தான் சென்னை கவர்னராக இருந்த லார்ட் கனிமாரா வின் பெயர் வைக்கப்பட்டது. 1914 வரை இந்த லைப்ரெரிக்கென்று புத்தகப் பட்டியல் பிரசுரிக்கப்படவில்லை. 1914-ல்தான் பிரசுரிக்கப் பட்டது. 1920-ல் கிரேவ்லி சூபரின்டென்டென் நியமிக்கப்பட்டபோது, லைப்ரெரியிலும் அநேக மாறுதல்கள் ஏற்பட்டன. இப்போது யூனிவர்ஸிடி (சர்வகலாசாலையின்) லைப்ரெரியனாக இருக்கும் ஸ்ரீ ஜனார்த்தனம் நாயுடு 1924-ல் நியமிக்கப்பட்டார்.

இதுவரை லைப்ரெரிக்குள் வாசகர்கள் படிக்கத்தான் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ ஜனார்த்தனம் நாயுடு லைப்ரேரியனாக நியமிக்கப்பட்டபின் இந்த லைப்ரெரி ராஜ்யத்தில் மிகவும் பிரசித்தியடைய வேண்டி அவர் செய்த சேவையை அளவிட்டுக் கூறமுடியாது.

வாசகர்கள் ரூ. 20 'டெபாஸிட்' தொகை கட்டி தங்களுக்கு வேண்டிய மூன்று புத்தகங்களை 14 நாட்கள் வரை வைத்துக் கொண்டு படிப்பதற்கும் அதற்குப் பிறகு இன்னும் 14 நாட்கள் வரை படிப்பதற்கு அவகாசம் அளித்தும் முதலில் ஏற்பாடு செய்தார் ஜனார்த்தனம் நாயுடு.

புத்தகங்களில் லேபிள் ஒட்டி அவைகளின் மீது 'வாசகர்கள் எப்பொழுது இவைகளைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்' என்கிற ஏற்பாடு இங்கு தான் முதலில் செய்யப்பட்டது.

இந்த லைப்ரெரியை மேலும் அபிவிருத்தி செய்ய மேனாட்டு லைப்ரெரி முறைகளை நேரில் கண்டறியும் பொருட்டு ஸ்ரீ ஜனார்த்தனம் நாயுடு இருமுறை இங்கிலாந்துக்குச் சென்று திரும்பினார்.

1948-ல் அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி மந்திரியாக இருந்தபோது சென்னை லைப்ரெரி மசோதா சட்டமாக்கப்பட்டது. இதன்படி ஜில்லா போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் 'ஸெஸ்' தொகையை வசூலித்து, பெற்ற தொகையைப்போல மற்றொரு பங்கை சென்னை சர்க்காரிடமிருந்து பெற்று, ஜில்லாக்களிலும் முனிசிபாலிடிகளிலும் லைப்ரெரிகள் ஆரம்பித்து வைப்பதற்கு வழிகிடைக்கும். இப்புது சட்டத்தினால் லைப்ரெரி நிர்வாகப் பொறுப்பு கல்வி இலாகா காரியதரிசியிடமிருந்து கல்வி இலாகா டைரக்டர் நிர்வாகத்தின் கீழ்வந்தது.

ஸ்ரீ ஜனார்த்தனம் நாயுடுவுக்குப் பின் ஸ்ரீ கே. கோவிந்த மேனன் லைப்ரேரியனாக நியமிக்கப்பட்டார். 25 ஆண்டுகளாக லைப்ரெரி விஷயத்தில் இவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். இவர் பதவிக்கு வந்ததும் லைப்ரெரியில் அநேக அற்புத மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. விஸிட்டர்களின் வசதிகள் கவனிக்கப்பட்டன.

அன்றாடம் சுமார் 200 விஸிட்டர்களுக்குமேல் (ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிகம்) வருகிறார்கள். நாளுக்கு நாள் இத்தொகை அதிகரித்து வருகிறது. ★

# மனிதனின் அதிசய சாதனைகள்

1873 முதல் டைப்ரைட்டரை அமைத்தவர் ரெமிங்டன்.

1874 பஸிபிக் கடலுக்கடியில் தந்திக் கம்பிபோட முதன் முதலாக கடல் ஆழக் கணக்கு எடுக்கப் பட்டது.

பூச்சிகளைக் கொல்லும் டி. டி. டி. மருந்து செய்வது கண்டு பிடிக்கப்பட்டது.

1876 பெல் என்பவர் டெலிபோன் கண்டுபிடித்தார்.

எடிஸன் முதல் போனகிராப் செய்து முடித்தார்.

1876 வெறிநாய் கடிக்கு ஊசி போடும் மருந்தை லூயி பாஸ்டர் கண்டுபிடித்தார்.

1881 அணுக்களின் பரிமாணத்தை கெல்வின் என்பவர் மதிப்பிட்டார்.

1882 க்ஷயரோகக் கிருமியை கோச் என்பவர் கண்டுபிடித்தார்.

1883 இங்கிலாந்தில் ரேபயின் என்ற பட்டு உற்பத்தி ஆரம்பமாயிற்று.

1884 மொகந்தாலர் என்ற பெயருடைய வினே டைப் யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது. வாட்டர்மென் பவுண்டன் பேனு தயாரிக்கப்பட்டது.

1885 கலர் போட்டோக்கள் எடுக்கும் விதம் கண்டு பிடிக்கப்பட்டது.

1886 ஹெர்ட்ஸ் என்பவர் ரேடியோ அலைகளைக் கண்டுபிடித்தார்.

1888 முதல் பிலிம் ரோல்காமிரா விற்பனைக்கு வந்தது.

1890 பிரான்ஸில் நான்கு ஸிலிண்டர் மோட்டார்கார் செய்யப்பட்டது.

1891 லண்டனிலிருந்து பாரிஸுக்கு டெலிபோன் போடப்பட்டது.

1893 ஹென்ரி போர்டுதான் முதல் காரை அமைத்தார்.

எடிஸன் சினிமா மிஷின் அமைத்தார்.

1894 லேக் என்பவர் சப்மரீன் கப்பல் கட்டினுர்.

1895 ராண்ட்ஜென் என்பவர் எக்ஸ்ரே கண்டுபிடித்தார். முதல் டீஸல் என்ஜின் அமைக்கப் பட்டது.

1896 மார்கோனியின் கம்பியில்லாத் தந்தி செய்திப்போக்கு வரத்து இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்குமிடையே ஆரம்பமாகி விட்டது. ரேடியோ ஆரம்பம்.

1897 அணுவுக்குள் உள்ள எலெக்ட்ரான் என்ற நுண்ணிய அம்சத்தை தாம்ஸன் என்பவர் கண்டுபிடித்தார்,

1898 ரேடியம் கண்டுபிடிக்கப்பட்டது. போட்டோ எடுக்கும் காகிதம் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்டது.

மனிதன் எவ்வளவோ அரிய பெரிய சாதனைகளை இதுவரை கண்டுபிடித்து, வாழ்க்கைக்கு வசதிதேடிக்கொண்டிருக்கிருன் விஞ்ஞானத் துறையில் செய்யப் பட்டுள்ள இந்த அரும்பெரும் முயற்சிகள் காரணமாக உலகில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. முக்கியமான சாதனைகள் பற்றிய விவரம் இங்கு தொகுத்து தரப்பட்டிருக்கிறது.

இந்த ஜாபிதாவில் எவ்வளவோ விடப்பட்டிருக்கலாம். வாசகர்கள் தங்களுக்குத் தெரிந்ததை குறிந்து எழுதினல் அவைகளும் பிரசுரிக்கப்படும்.

1899 சனிக்கிரகத்தை சுற்றும் மங்கலான இரு கிரகங்களை போட்டோ மூலம் கண்டுபிடித்தார்கள்.

1900 ஜெப்பனின் என்ற ஜெர்மானியர் கட்டிய முதல் ஆகாயக் கப்பல் மணி ஒன்றுக்கு 17 மைல் 6 பர்லாங்கு வேகத்தில் பறந்தது.

1901 உணவுப் பொருள்களில் புரதச் சத்து (புரோடின்) கலந்து இருப்பதைப் பற்றிய ஆராய்ச்சி தொடங்கியது.

1903 ரைட் சகோதரர்கள் முதல் ஆகாய விமானத்தை கட்டினர். இட்டிஹாக் என்ற இடத்தில் முதன் முதலாகப் பறந்தார்கள்.

காஸ்மிக் கிரணம் இவ்வருஷத்தில் தான் கண்டுபிடிக்கப் பட்டது.

1905 பரஸ்பர கவர்ச்சி என்ற பொருள் கொண்ட 'ரிலடிவிடி' என்ற சித்தாந்தத்தை ஈன்ஸ்டீன் வெளியிட்டார்.

1906 பிராண்ட் ராக் என்னும் இடத்தில் முதன் முதலாக பகிரங்க ரேடியோ ஒலிபரப்பு நடந்தது.

1909 வடதுருவத்தை பியரி கண்டு பிடித்தார்.

1910 அல்பே னி என்ற இடத்திலிருந்து நியூயார்க் நகருக்கு ஸெளன்கர்ட்டிஸ் என்பவர் பறந்து சென்றார். இதற்காக அவர் பதினாயிரம் டாலர் பரிசு பெற்றார்.

1911 அமுன்ஸென் என்பவர் தென் துருவத்தைக் கண்டுபிடித்தார்.

1916 துருபிடிக்காத எஃகை கண்டு பிடித்தார்கள்.

1919 ஹாட்ஷாட் என்ற விமானி யில்லா விமானம் தயாரிப்பு.

1922 இன்ஸுலின் என்ற மருந்து தயாரிக்கப்பட்டது.

1923 முதன்முதலாக செயற்கை ரப்பர் செய்யப்பட்டது.

1925 டெலிவிஷன் முயற்சி ஆரம்பம்.

1926 ஒரு வினாடியில் ஒளி 1,86,284 மைல் பிரயாணம் செய்கிறது என்று மிக்கேல்ஸின் என்பவர் கணக்கிட்டார்.

1928 பென்ஸிலின் கண்டு பிடிக்கப் பட்டது.

1931 வெகு தூரத்திலுள்ள பொருளை காணக்கூடிய வசதியளிக்கும் ராடார் கண்டு பிடிப்பு. அணுவைப் பிளக்கும் ஸைக்ளட்ரோன் என்கிற யந்திரம் கண்டு பிடிக்கப்பட்டது.

1932 அணுவுக்குள் உள்ள நியூட்ரான், பாஸிட்ரான் என்ற இரு நுண்ணிய அம்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

1934 எக்ஸ்ரே படம் எடுக்கக்கூடிய கருவியை அமைத்தார்கள்.

1937 ஜெட் புரொபல்ஷன் என்ஜின் வெற்றிகரமாக ஓட்டப்பட்டது.

1938 யுரேனியம் அணுக்குண்டுகளை பிளக்கும்முறை கண்டு பிடிக் கப்பட்டது.

1940 ஹெலிகாப்டர் விமானம் முதன் முதல் பறந்தது.

1943 வி 1 என்ற பறக்கும் குண்டுகள் வி 2 என்ற வானக்குண்டுகள் நாஜிகளால் வீசப்பட்டன.

1945 ஹிரோஷிமா மீது அணுக் குண்டு பிரயோகம். சூரியனைவிட 80,000 மடங்கு பிரகாசமான ஈகிள் என்ற புதிய நக்ஷத்திரம் கண்டு பிடிப்பு.

1946 பிகினி என்ற இடத்தில் முதல் அணுக்குண்டு பரீக்ஷை. 1947 சந்திரனுக்கு ராடார் சமிக்ஞை. அது சந்திரனில் மோதி திரும்பி வந்தது.

சமீப வருஷங்களில் செயற்கை முறை மூலம் மழை பெய்யச் செய்தல், பெரிய கணக்குகளை நொடியில் போடும் யந்திர மூளைகள், மொழி பெயர்க்கும் யந்திரங்கள் இன்னும் பல நூதன சாதனைகள் மனிதனால் சாதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக்க வேலைக்கு அணுசக்தியை எப்படி எல்லாம் பயன்படுத்தலாம் என்பது பின்னர் விவரமாக வெளியிடப்படும். ★



# மேனாட்டு நவீன நடனம்

அமெரிக்காவில் நவீன நடனத்தில் தலைசிறந்து விளங்கும் மிஸ். மார்த்த கிரஹாம் 17 பேர் கொண்ட கோஷ்டியுடன் சென்னை வந்திருந்தார். பாலே நடனம் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்களையும், அவருடைய கோஷ்டியினர் சிலரிடமிருந்து சேகரித்த தகவல்களையும் சேர்த்து நமது விசேஷ நிருபர் இக்கட்டுரையை எழுதியிருக்கிறார்.

அமெரிக்க நவீன நாட்டியக் கலையின் அபிவிருத்திக்கு மிக அதிகம் பாடுபட்டவர் மிஸ். மார்த்த கிரஹாம். பழங்காலத்து முறையான நாட்டியங்களை விட்டு. நாட்டியத்தில் புதுமுறையைப் புகுத்துவதில் இவர் உழைத்தார். இவர் ஏற்படுத்திய புது முறையை

இப்போது பலர் கடைப்பிடிக்கின்றனர்.

இவருடைய கோஷ்டியில் நடனமாடும் யுவதிகள் எல்லோருமே ஒற்றை நாடி யுள்ளவர்களாகவும் நடனமாடுவதற்கென்றே பிறந்தவர்கள்மாதிரியும் காணப்படுகிருர்கள். இவர்களில் ஒருவரான மாட் டர்னர் என்பவர்தான் 'பாலே' விஷயமாக பல தகவல்களைத் தெரிவித்தார்.

'பாலே' நடனம் பல நாடுகளில் ஆடப்பட்டபோதிலும், கடைபிடிக்கும் முறைகளில் நாட்டுக்கு நாடு வித்தியாசம் கிடையாதாம். பலவித நடனச் சித்திரங்கள், காலடிகள், உடலுறுப்புகளின் அழகு நடை, நிலை இவை எல்லாம் பரதநாட்டியத்தில் முக்கியமான அம்சங்களாக இருப்பதைப்போல 'பாலே' நடனத்திலும் முக்கிய அம்சங்களாக இருக்கின்றன.

'நீங்கள் எங்கள் நடனத்தை புரிந்து ரஸிக்கமுடியும். நாங்களும் உங்கள் நடனத்தை ரஸிக்கமுடியும். ஆனல் விசாலமான மனப்பான்மை தான் அவசியம்' என்ருர் மாட் டர்னர்.

மார்த்தகிரஹாம் நடன நிகழ்ச்சிகளில் உள்ள விசேஷம் உள்ளுணர்ச்சியை நடனத்தின் மூலம் வெளியிடுவதுதான். சாதாரணமாக மேல் நாட்டு நடனங்கள் உள்ளது உள்ளபடியே கருத்துக்களை பச்சையாகவே பிரதிபலிப்பதாகவே தென்படும். ஆனல் இவர் நடனம் அம்மாதிரி இல்லை.

பரதநாட்டியம் ஆடக்கற்று ஒரு வருஷம் முடிவதற்குள் அரங்கேற்றம் செய்து மேடையில் ஆடவந்து விடுகிருர்களே அதெல்லாம் 'பாலே' நடனத்தில் முடியாது. 'பாலே' நடனம் கற்க இளமைப் பருவத்திலிருந்தே மிகக் கடும் பயிற்சி அவசியமாகும். பொறுமையும் விடாமுயற்சியும் வேண்டும். அவரிடமுள்ள நடன நடிகைகளில் பெரும்பாலோர் மிகச் சிறுவயதிலேயே நடனம் கற்க ஆரம்பித்தவர்களாம். 'பாலே' நடனத்தில் நிபுணத்துவம் அடைவதற்கு குறைந்தது பத்து வருஷங்களாவது பிடிக்குமாம்.

கிரஹாமின் நடனத் துறையில் உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்த உடம்பு ஒரு கருவியாகவும் நடனம் ஒரு சாதனமாகவும் உபயோகிக்கப்படுகின்றன.

மேல்நாட்டு நடனங்களில் எட்டு அடிகள் உள்ள தாளங்களை ஒரே ரீதியாக உபயோகிக்கிருர்களாம். (நம் நாட்டு நடனங்களில் தாளங்கள் பல ரகங்களில் உபயோகப் படுத்தப் படுகின்றன.)

பாலே நடனம் கால் கட்டைவிரல் நுனியில் நின்று ஆடுவதாகும். இதற்கான விசேஷ பாதரட்சைகள் உண்டு. 'உங்கள் நாட்டில் ஆடுபவர்கள் பாதரட்சைகளை அணிவதில்லையே' என்ருர் அந்த நடன அழகி. இந்திய நடன முறையில் பாதங்களை தட்டையாகவும் குதிகால் படும்படியாகவும் முன் பாதம் தரையில் படுவதாகவும் ஆடுவது தான் இங்குள்ள வழக்கம். பூட்ஸ் போட்டால் ஆடவே முடியாது என்று விளக்கினேன்.

நம் நாட்டியங்களுக்கேற்ற நவீன சங்கீதத்தை அமைத்துக்கொள்ள அவருடைய சங்கீத அறிவு அவருக்குப் பயன்பட்டிருக்கிறது. பிரபல அமெரிக்க கவிஞர் ஆரான் கோய்லாந்தின் 'அபலாச்சியின் வஸந்தம்' என்னும் பாட்டு அவ்வாறு அமைந்ததாகும். இப்பாட்டின் இசைக்கும் அழகுக்கும் 1945-ம் வருஷம் புலிட்ஸர் பரிசு வழங்கப்பட்டது.

வார்த்தைகளின்றி அங்க அசைவுகளாலும் முகபாவங்களாலும் ஆடும் நடன நிகழ்ச்சிகளைத் தான் பாலே நடன முறையில் மேல் நாட்டினர் ஆடிக்காட்டுகின்றனர். பாலே நடனத்தில் ருஷ்யப்பாணி, பிரெஞ்சு பாணி, இதாலியபாணி என்று மூன்று வகைகள் உள்ளன. பரத நாட்டியத்தில் வழுவூர் முறை. பந்தணை நல்லூர் முறை என்றெல்லாம் இல்லையா அம்மாதிரி போலிருக்கிறது. இதிலுள்ளவற்றைக் கலந்து அமெரிக்க நிபுணர் கிரஹாமே தனக்கென ஒரு புது பாணியை வகுத்துக்கொண்டிருக்கிருர்.


பாலே நடன வகையில் முதல் நடனம் போர்கன் கியோ டிலோட்டா என்பவரால் மிலான்கோ மகனின் திருமணத்தின்போது 1489ல் ஆடப்பட்

டது என்று தெரிகிறது. இங்கிலாந்தில் 18-ம் நூற்றுண்டுக்குப்பின் தான் பாலே நடனம் தோன்றியது.

ருஷ்யபாணியும் பிரெஞ்சுபாணியும் கலந்த பாலே நடனம்தான் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பரவியிருக்கிறதாம்.

அமெரிக்காவில் பாலே நடனத்தை முதன் முதலில் ஆடினவர் ஜான்டி யூரங் என்பவர்தான். 1785-ல் பிலடெல்பியாவில் இவர் முதன் முதலாக ஆடினுர். ஆட்டோ எச்ரோஜன் என்ற அமெரிக்கரின் அழைப்பின் பேரில் பாவ்லப், மார்ட்டின் என்ற ரஷ்ய பாலே நடன நிபுணர்கள் அமெரிக்காவில் ஆடினர். இவர்கள் நடனத்தைக் கண்டு விட்டுதான் அமெரிக்கர்கள் நடிகர்களுக்கு மதிப்பு கொடுக்கத் தொடங்கினர். பாலே சம்பந்தமான பல அரிய நூல்களை லிங்கன் கிருஸ்டீன் என்பவர் எழுதியிருக்கிருராம். இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் எஸ்டோவி டங்கன் என்ற பெண்மணி பாலே நடனத்தில் புதுமையையும் கவர்ச்சியையும் உண்டு பண்ணினுர். கிரேக்க, ரோம சிற்பங்களை ஆராய்ந்து அதன் மூலம் தம்முடைய நடனத்திற்கு மெருகூட்டினுர்.

மேல் நாட்டு நடனத்திற்கும் இந்திய நடனத்திற்கும் அடிப்படை கொள்கையிலும் லட்சியத்திலும் வித்தியாசங்கள் உள்ளன. மேல் நாட்டுக் கலையின் நோக்கம் பெரும்பாலும் அந்தந்த கால, நாடோடி வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகும். இந்தியக் கலையின் லட்சியமோ அவ்வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, மனதால் சிருஷ்டிக்கப்படும் வேறு அழகு உலக வாசனையை ஊட்டுவதாகும்; சாஸ்வதமான உள்ளெழுச்சிகளை பிரதிபலித்து மனதுக்கு சாந்தி கொடுப்பதற்காகவே இந்தியக்கலை தொன்று தொட்டு வளர்க்கப்பட்டிருக்கிறது. அதனுல் தான் இந்திய நடனங்கள் தெய்வங்களையும் சமய தத்துவங்களையும் தழுவி நிற்கின்றன.



மார்த்த கிரஹாமும் அவர் கோஷ்டியாரும் சென்னை வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

நம் நாட்டியத்தை ரசித்தவர்களுக்கு பாலே நடனம் அவ்வளவாக ரஸிக்காமல் போகலாம். கைகளேயும் கால்களேயும் கன்னுபின்னு வென்று அசம்பாவிதமாக தூக்கிப்போடுகிருர்கள் என்றும் சிலர் சொல்லலாம், ஆனல் அதிலும் நல்ல கலே அம்சம் இருக்கிறது. விறுவிறுப்பும் இருக்கிறது. இல்லாவிட்டால் உலகில் ஏறக்குறைய பாதிபாகத்தில் அது வியாபித்திருக்க முடியுமா ?

## உஸ்பெக் நடன கோஷ்டி

நமது நேச தேச மக்களாகிய உஸ்பெக் கிராமியக் கலாச்சாரத் தூது கோஷ்டியினர் சென்னேயில் ஜனவரி 10, 11, 12-ந் தேதிகளில் கலா நிகழ்ச்சிகள் நடத்தினர். சிறந்த கிராமியக் கலா பரம்பரையைச் சார்ந்த அருமையான பல அம்சங்களேக் கண்டுகளிக்கும் பெரும் வாய்ப்பு சென்னே நகர மக்களுக்குக் கிடைத்தது.

உஸ்பெக்கிஸ்தான் நாடு சரித்திரப் பிரசித்தி பெற்ற சம்பவங்கள் நிறைந்ததோர் தேசமாகும். இந்நாட்டின் நகரங்களின் சிறப்பு நான்கு திசைகளிலும் பரவி யிருந்தது. இவற்றின் புகழை நாம் கவிஞர் கீட்ஸின் பாடல்களிலிருந்து மட்டும் தெரிந்து கொள்ளவில்லே; சரித்திர பூர்வமான தொடர்புகள் மூலமும் நாம் இவற்றைப்பற்றி அறிந்துள்ளோம். இந்திய சரித்திர மாணவர்களுக்கு பொக்காராவும், சா ம ர் க்க ண் டு ம் நன்கு தெரிந்த பெயர்களே.

விஜயம் செய்த கலேஞர்களுக்கு, சென்னே அவர்களுக்குப் பழக்கமான சூழ்நிலேயில் இருப்பதாகவே தோன்றியது இவர்களுக்கு வரவேற்பளித்து உபசரிக்கும் இந்த சென்னே ராஜ்யம் எவ்வாறு வங்காள குடாக்கடலுக்கும் அராபிய சமுத்திரத்துக்குமிடையே இருக்கிறதோ அதேபோல் உஸ்பெக்கிஸ்தானும் காஸ்பியன் கடலுக்கும், யூரல் கடலுக்குமிடையே இருக்கிறது. பருவநிலே சம்பந்தத்திலும் உஸ்பெக்கிஸ்தானில் குளிர்காலம் மிகவும் குறுகியதாகவே இருக்கிறது; கோடைக்காலம் அதிகமாக இருக்கிறது. சென்னே ராஜ்யத்தின் சீதோஷ்ண நிலேயும் இதைப் போன்றதுதான்.

உஸ்பெக்கிஸ்தான் கிராமிய சங்கீதமும், நடனமும் மக்களால் பெரிதும் விரும்பிப் பாராட்டப்படுகின்றன. உஸ்பெக் கிராமிய கலா நிபுணர்களுக்கு அவர்களின் திறமையை மெச்சி தேசியப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. உஸ்பெக் கிராமிய நடனம் இப்பொழுதும் பெரும்பாலும் பழைய பரம்பரைக் கலாச்சார பாணியையும் அம்சங்களேயுமே கொண்டிருந்த போதிலும், கிராமியப் பாடல்களில் புத்துணர்ச்சியும் புத்துயிரும் பொங்கித் ததும்புகின்றன. இவற்றில், நமது நாட்டில் சுதந்திரம் வந்ததற்குப் பின்னரும், புனர் நிர்மாணத்துக்காகப் பல பெரிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பிறகும் நிலவும் நிலே தற்போது காணப்படுகின்றதுதான். ★

## மகான்களின் முடிவு இப்படியா ?

| | | |
|---|---|---|
| கி. மு. | 399. | சாக்ரடீஸை விஷமிட்டுக் கொன்ருர்கள்! |
| கி. பி. | 29. | ஏசுநாதரைசிலுவையில் அறைந்தார்கள்! |
| ,, | 660. | முகமது நபி மெக்காவுக்குத் தப்பி ஓடினர்! |
| ,, | 1865. | ஆப்ரகாம் லிங்கனே கொலே செய்தார்கள்! |
| ,, | 1918. | லெனினே துப்பாக்கியால் ஒருவன் சுட்டான் அக் குண்டு உடம்பிலேயே தங்கி 1924-ல் அவரைக் கொன்று விட்டது! |
| ,, | 1948 | மகாத்மா காந்தியை மதவெறியன் ஒருவன் சுட்டுக் கொன்ருன்! |

# தியாகபிரம்மத்தின் கிருதிகள்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ ஸ்வாமிகள் சமாதியடைந்த தினம் வரும் பகுள பஞ்சமியில் வருகிறது. அதை யொட்டியே இக்கட்டுரை.

தியாகராஜஸ்வாமிகள் இயற்றியுள்ள கீர்த்தனைகளின் எண்ணிக்கை 24000 என்று சொல்லப்படுகிறது. (வால்மீகி ராமாயணத்திலுள்ள ஸ்லோகங்களும் 24000தான்) தியாகராஜ ஸ்வாமிகள் தனக்குத் தோன்றும் போதெல்லாம் பாடிக்கொண்டே யிருந்ததால் அவ்வளவு கிருதிகளையும் பாடியிருக்க முடியும். இக்கீர்த்தனைகளில் நமக்கு கிடைத்துள்ளவை என்னமோ சுமார் ஆயிரம் தான்.

இவர் பாடிய கிருதிகளில் சிலவற்றைத் தவிர்த்து மற்றவைகள் எல்லாம் அவர் தியானத்திலிருந்தபொழுது மெய்ம்மறந்து பாடியதாகும். இசையும் சாஹித்யமும் அவருடைய உள்ளத்தினின்று பொங்கி வந்தவை. அவர் தியானத்தில் இருக்கும்போது அவருடைய முகத்தில் மலர்ச்சி தோன்றும். அதுதான் புது கிருதி பாடபோவதற்கான அறிகுறி.

'ஸங்கிரஹ சூடாமணி என்கிற நூலில் லக்ஷணப்படுத்தியுள்ள 366 ராகங்களில், சுமார் 200 ராகங்கள் தான் தியாகராஜஸ்வாமியால் உபயோகிக்கப்பட்டிருப்பதாகத் தீர்மானிக்கலாம்' என்று பேராசிரியர் ஆர். ஸ்ரீனிவாசன் கருத்து வெளியிட்டிருக்கிறார். ஆனால் தியாகராஜர் பாடி, சிஷ்யர்களால் இவை முறைப்படி பாடம் செய்யப்படாமல் விடப்பட்டிருக்கலாம்.

தியாகராஜரின் காலம் 1767—1847. கர்நாடக சங்கீத சரித்திர காலத்தில் இக்காலத்தை மிகச் சிறப்புற்ற காலம் என்று சொல்லலாம். பெருமை வாய்ந்த இசைப் புலவர்களும் சங்கீத வித்வான்களும் சங்கீத சாஸ்திர வல்லுநர்களும் வசித்த காலம் அது. துளஜாஜி, சரபோஜி மன்னர்கள் வசித்த காலம் அது. தஞ்சை சமஸ்தானத்தில் அக்காலத்தில் 360 வித்வான்கள் இருந்தனர். ஒவ்வொரு வித்வானுக்கும் ராஜசபையில் பாட வருஷத்தில் ஒரு தினம்தான் கிடைக்கும். முதல்தரமான வித்வான்களுக்கு ஆதரவு இருந்த காலம் அது. இரண்டாம் பக்ஷமான சங்கீதத்தை ராஜசபையிலாவது வேறு பெரிய இடங்களிலாவது அக்காலத்தில் கேட்க முடியாது.

அந்தக் காலத்தில் தியாகையர் வாய்மொழியாக வெளியிட்ட கீர்த்தனங்கள் சிரஞ்சீவித்வம் பெற்று விட்டவை. அக்கீர்த்தனங்கள் சென்ற நூறு வருஷங்களாக பாடப்பட்டு வருகின்றன. எத்தனை தடவை கேட்டும் அலுப்பு என்னமோ தட்டுவதில்லை. ★

### ஸ்வரார்ணவம்


தியாக பிரம்மத்திற்கு இதரவாக்கேயகர்களுக்குக் கிட்டாத சில பாக்கியங்கள் கிட்டின. அவற்றுள் ஒன்று தெய்விகமாக கிடைத்த நாரதீயம், ஸ்வரார்ணவம் என்ற இசை நூல்கள். ஓலைகளில் கிரந்த லிபியில் எழுதப்பட்ட நூல்கள் இவை. இந்தச் சுவடிகள் சுவாமிகளின் ஸித்தி காலம் வரை இருந்ததாகத் தெரிகிறது. பின்னர் அவர் பூஜித்த விக்ரகம் மட்டும் தக்கிற்று. சுவடி எப்படியோ மறைந்து விட்டது.

ஸ்வரார்ணவம் என்ற நூல் பரமசிவன் பார்வதி தேவிக்கு சங்கீத விஷயங்களைப் போதிக்கும் முறையில் எழுதப்பட்ட நூல் என்று தெரிகிறது.

ஸ்வரார்ணவத்தின் ஆரம்பத்தில் காணப்படும் ஸ்லோகமானது:

> ''ஆத்ம மத்யகத: ப்ராண:
> ப்ராண மத்ய கதோத் த்வனி:
> த்வன மத்ய கதோ நாத:
> நாத மத்யே ஸ்தா சில:

இதன் அர்த்தம், தேகத்தின் மத்தியில் பிராணனும் பிராணனின் மத்தியில் தொனியும், தொனியின் மத்தியில் நாதமும் நாதத்தின் மத்தியில் பரமசிவனும் என்பதாகும்.



# கதிர்காமம்

யாத்திரை


தமிழ்க் கடவுளாகிய குமரனுக்கு தமிழ் நாட்டில் ஆறு படை வீடுகள் உள் ளன. இந்த ஆறு புண்ணிய ஸ்தலங்களைப் போலவே பிரசித்தமுடையது இலங் கைத் தீவிலுள்ள கதிர்காமம் என்னும் திவ்விய க்ஷேத்திரம். சமீப காலம்வரை கதிர்காமம் செல்பவர்கள் பன்னிரண்டு மைல் கரடுமுரடான காட்டுப் பாதையில் கால் நடையாகத்தான் செல்லவேண்டி யிருந்தது. ஆனால் தற்போது முதல்தா ரஸ்தா மூலம் சௌகர்யமாகச் சென்று வரலாம். கொழும்புவிலிருந்து தெற்குக் கோடியிலுள்ள மாத்திரை வரை ரயிலில் செல்லலாம். பிற்பாடு பஸ்ஸிலோ காரிலோ சென்று கதிர்காமத்தை அடையலாம்.

இலங்கை செல்லும் ஹிந்துக்கள் கதிர்காமக் குமரனை தரிசிக்காமல் வரமாட் டார்கள். வள்ளி தெய்வயானை சமேதராய் விளங்கும் முருகக் கடவுள் பொதிந்த திரை ஒன்று கர்ப்பக் கிரகத்தை மறைத்து நிற்கிறது. இதன் பின் என்ன இருக் கிறது என்பது 'சிதம்பர ரகஸ்யம்.'

ஆடித் திருநாள் கதிர்காமக் கடவுளின் முக்கியத் திருவிழா. இத்திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் கதிர்காமத்தில் கூடுகின்றனர்.

இருபத்திரண்டு பேர்களடங்கிய இந்திய கோஷ்டி யொன்று சென்ற வருஷம் கதிர்காமத்தில் முருகனை தரிசிப்பதற்காக இலங்கை சென்றது. அச்சமயம் எடுக்கப்பட்ட போட்டோக்கள் இந்த யாத்திரைப் பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன.









தலைமன்னார்— ரயில் மார்க்கமாகப் பிரயாணம் செய்பவர்கள் இலங்கையில் பார்க்கும் முதலிடம். இங்கிருந்து கொழும்புவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் ரயில் வண்டிகள் போகின்றன.


நமது யாத்திரை கோஷ்டி பஸ் ஒன்று அமர்த்திக்கொண்டு இலங்கை பூராவும் சுற்றி வந்தது. இலங்கை ரஸ்தாக்கள் நன்கு பரிபாலிக்கப்பட்டு பஸ் போக்குவரத்துக்கு சௌகர்யமாக உள்ளன. வழியிலிருந்த ஊர்களிலெல்லாம் பஜனை — எங்கும் அமோகமான வரவேற்பு.






கதிர்காமத்தில் ஓடும் மாணிக்க கங்காநதியின் பேரில் அமைக்கப்பட்டிருக்கும் தொங்கு பாலம். மலைப்பிரதேசங்களிலிருந்து வெளிக்கிளம்பும் நதியின் தண்ணீர் பளிங்குபோல் சுத்தமாக இருக்கும்.

திருவிழாவுக்கென ஆயிரக்கணக்கான மக்கள் கதிர்காமத்தில் குழுமியிருக்கின்றனர்,




பக்தர்கள் காலில் சதங்கை கட்டிக்கொண்டும் அலகு குத்திக்கொண்டும் ஆண்டவனது அருளை வேண்டிச் செல்கிறார்கள்...காவடி தாங்கிய பக்தர்கள் ஆடிக்கொண்டும் ஆண்டவன் புகழ் பாடிக்கொண்டும் வள்ளியம்மையின் ஆலயத்தை அணுகுகிறார்கள்.









யாத்திரை கோஷ்டியார் இலங்கையிலுள்ள பல இடங்களுக்குச் சென்றனர். சிகிரியாவிலுள்ள கல் வெட்டுச் சித்திரங்களும் போலானுருவாவிலுள்ள புத்தர் பிரானின் மாபெரும் சிலைகளும் அவர்கள் பார்வையிட்டவைகளில் சில.






கொழும்பு நகரத்தில் யானைகள் ஆனந்தமாகக் குளித்துக் கொண்டிருக்கின்றன ..... அனுராதபுரம் மிகவும் பழமையானது. அங்குள்ள மாபெரும் புத்தராலயம் மிகவும் பிரசித்தி பெற்றது.



சிகிரியாவின் மலைப் பிராந்தியங்களைச் சுற்றிப் பார்த்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ அரண் அமைத்திருக்கிறார்கள். இலங்கைக் காட்சிகள் மனோரம்மியமானவை. எங்கு சென்றாலும் மலைகளும் குளிர்ந்த காட்சிகளும் பார்ப்போர் மனதைப் பரவசப்படுத்துபவை.







# சிலைகள் சொல்லும் கதை

எஸ். நடராஜன்

வெய்யிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் எவ்வளவோ சிலைகள் சென்னை நகரின் முச்சந்தியிலும் முக்கிய இடங்களிலும் உடல் கருத்து நிற்கின்றன. சிலைகளிலும் சில அதிருஷ்டசாலிகள் உண்டு. இவை கட்டிடங்களின் உட்பகுதியில் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்னை வாசிகளில் பெரும்பாலோர் தினம் போகும்போதும் வரும்போதும் இவைகளைப் பார்த்துக் கொண்டுதான் போகிறார்கள். இவைகளில் சில பெரும் சரித்திரத் தகவல்களை வெளியிடக்கூடியவை என்பது அநேகருக்குத் தெரிந்திராது.

சென்னையில் முதன் முதலாக வைக்கப்பட்ட சிலை கர்னல் நீல் என்பவனுடையதே. இதற்குப் பின்தான் விக்டோரியா மகாராணியின் சிலை வைக்கப்பட்டது. மவுண்ட் ரோடில் இப்போது பெரிய வட்டமான நந்தவனம் (ஸ்பென்ஸர் அருகில்) இருக்கிறதே அங்குதான் நீல் சிலை முன்பு இருந்தது. இங்கிருந்து அந்தச் சிலையை மியூஸியத்திற்கு அனுப்பி வைக்க சத்யாக்கிரக இயக்கமே நடத்த வேண்டி யிருந்தது.

## கொலை பாதகனுக்கு சிலை!

1857-ல் சுதந்திரப் புரட்சியின் போது சென்னையில் சைன்ய அதிகாரியாக இருந்தவன் கர்னல் நீல். இவன் புரட்சியாளர்களை அங்கங்கே காணப்பட்ட மரங்களில் தூக்கிட்டுக் கொல்ல உத்திரவிட்டவன். கிராமத்திற்கு தீ வைத்து தப்பி ஓட முயன்றவர்களை சுட்டுக்கொன்ற பாதகன். இந்தச் சிலையை அகற்றவேண்டும். இல்லையேல் உளியும் சுத்தியும் கொண்டு தகர்ப்பது என்ற இயக்கம் 1927 ஆகஸ்டு 15 உ ஆரம்பமாகியது. ஆனால் காந்திஜியின் யோசனைப்படி தகர்க்கும் முறை கைவிடப்பட்டது. கொலை பாதகன் சிலை விஷயத்தி

லும் அவர் தன் அஹிம்ஸையைக் கைவிட விரும்பவில்லை. அப்போது இந்தியா முழுவதும் சைமன் கமிஷன் பகிஷ்காரம் நடைபெற வேண்டி யிருந்ததால் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சத்யாக்ரகமே நிறுத்தப்பட்டது. 1937–ல் ராஜாஜி தலைமையில் அமைந்த மந்திரிசபை இச்சிலையை முதலில் மியூஸியத்திற்கு மாற்றிவிட்டு மறுவேலை பார்த்தது. மியூஸியத்தில் ஒரு இருண்ட மூலை யில் கர்னல் நீல் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறன்!

## பல இடங்கள் சுற்றிய சிலைகள்

லார்ட் ரிப்பன் சிலையும், லார்ட் கார்ன்வாலிஸ் சிலையும் பல இடங்க ளில் சுற்றியபின் இப்போது நிரந்தர மான இடங்களைப் பிடித்துக் கொண் டிருக்கின்றன.

ரவுண்ட் டாண என்று சொல்லப் படும் இடத்தில் பதினறு கால் மண்ட பம் ஒன்று இருந்தது. பலருக்கு நினை விருக்கலாம. அமமண்டபத்திற்கு முன் வடக்கு நோக்கி ரிப்பன் சிலை இருந்துவந்தது. மண்டபத்தைத் தகர்த்தபின் சிறிது தெற்கே தள்ளி நான்கு மூலை சந்தியில் வைத்திருந் தார்கள். இங்கும் போக்கு வரத் துக்கு இடைஞ்சலாக ரிப்பன் இருந் தார். இவர் ஸ்தல ஸ்தாபனங்களுக் காக மிகவும் பாடுபட்டவர். 'ரிப்பன் எங்கள் அப்பன்' என்று இவர் அழைக் கப்பட்டு வந்தார். இதையெல்லாம் உத்தேசித்தோ என்னமோ இவரை கார்ப்பரேஷன் காரியாலயமான 'ரிப் பன்' கட்டிடத்திற்கே அனுப்பி விட் டார்கள்!

## கஷ்டப்பட்ட கார்ன்வாலிஸ்

மியூஸியத்தை யொட்டிய கனி மாரா லைப்ரெரியில் புஸ்தகங்களுடன் தங்கி இருந்த லார்ட் கார்ன்வாலிஸ் இப்போது கோட்டை மியூஸியத்தில் இடம் பெற்றிருக்கிறர். இவர் மியூஸி யத்திற்கு வந்ததே பெரிய கதை. கஸ்டம் ஹவுஸ் என்று சொல்லப் படும் துறைமுகத்தின் எதிரிலுள்ள பிரதேசத்தில் ஒரு வட்டமான மண் டபத்தை இன்றும் காணலாம். இம் மண்டபத்தின் எல்லா பக்கங்களி லும் கார்ன்வாலிஸ் என்று எழுதப் பட்டிருப்பதையும் காணலாம். இம் மண்டபத்திற்குள்தான் கார்ன் வாலிஸ் எழுந்தருளி யிருந்தார்.

இந்தச் சிலை நிற்கும் பீடத்தில் திப்பு சுல்தான் வெள்ளையர்களிடம் தன் இரண்டு பிள்ளைகளை ஒப்படைப்பது போன்ற காட்சி செதுக்கப்பட்டிருக் கிறது. சென்னை நகரிலுள்ள முஸ் லீம்கள் பலர் இதை ஆட்சேபிக்க ஆரம்பித்தனர். இந்த ஆட்சேபத்தை அதிகாரிகள் பொருட்படுத்தவில்லை. ஆகவே இச்சிலை மீது முஸ்லீம்கள் கற்களை வீச ஆரம்பித்தனர். அதன் பேரில்தான் இச்சிலையை பொது இடத்தில் வைப்பது ஆபத்து என்று கனிமாரா லைப்ரெரிக்கு எடுத்துச் சென்றனர். அங்கிருந்து பின்னர் கோட்டை மியூஸியத்திற்கு இச்சிலை அகற்றப்பட்டது. கனிமாரா லைப்ரெரி யில் கார்ன்வாலிஸ் இருந்த இடத் தில் மகாத்மா காந்தியின் சிலை வைக் கப்பட்டிருக்கிறது. இதை சைத்ரிக நிபுணர் ஸ்ரீ ராய் சௌத்ரி செய்தார்.

சமீப வருஷங்களில் இடம்பெயர்ந்த மற்றெரு சிலை ரோதம் என்பவ ருடையதாகும். இவருக்கு எதற்காக சிலை வைக்கப்பட்டது என்பதை லேசில் கண்டுபிடிக்க முடியவில்லை. பொதுஜன நலனுக்காக மிகவும் உழைத்த நீதிபதியாம் இவர். இவர் ஐலண்டு மைதானத்திற்கருகாமையில் ஒரு கூண்டிற்குள் நின்றிருந்தார். இவரை தேப்பியர் பார்க்கிற்கு அனுப்பி வைத்திருக்கிறர்கள். நீதி பதியாயிற்றே, ஹைகோர்ட்டிலேயே இவருக்கு இருக்க இடம் கொடுத் திருக்கலாமே!

## அரசியல் வாதிகளுக்கு சிலை

அரசியல் தலைவர்களுள், அன்னி பெஸண்டுக்கும், கோபால கிருஷ்ண கோகலேக்கும் சிலைகள் சென்னையில் இருக்கின்றன. அன்னி பெஸண்ட் விஷயமாக தனி அபிமானம் போல் இருக்கிறது. ஆகவே இவருக்கு சென்னையில் இரு இடங்களில் முழு உருவச் சிலைகள் இருக்கின்றன. ஒன்று கோகலே ஹாலில்; மற்றென்று மரீனவில்.

ஆலயப் பிரவேச பிரகடனம் விடுத்ததைப் பாராட்டுவதற்காக திருவாங்கூர் மன்னரின் சிலை ஹைகோர்ட் காம்பவுண்டில் இடம் பெற்றுள்ளது.

கல்வித் துறையில் பாடுபட்டவர்களான ஸ்ரீ வி. கிருஷ்ணசாமி அய்யர், ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் இவர்கள் சிலை செனட் ஹவுஸிலும், ஸர் லக்ஷ்மணஸ்வாமி முதலியார் சிலை சர்வகலாசாலை கட்டிட மன்றத்திலும் வைக்கப்பட்டுள்ளன.

## குதிரைமீது மன்றோ

சென்னையிலுள்ள சிலைகள் எல்லாவற்றையும்விட மிக கம்பீரமானது குதிரைமீது ஆரோகணித்துள்ள மன்றோவின் சிலையாகும். இவர் நிலச் சீர்திருத்தம், நீதிபரிபாலனம் இவைகளை சீர்பட நடத்திவைத்தவர். இவர் சென்னை ராஜ்ய நிர்வாகத்திற்காக அரும்பாடு பட்டிருக்கிறார்.

மன்றோ சிலையைச் செய்த பிரபல சிற்பியின் பெயர் பிரான்ஸிஸ் ஸான்ட்ரி. பாஸ்டன் நகரிலுள்ள வாஷிங்டன் சிலையைச் செய்தவரும் இவரே. மன்றோ சிலையை செய்வதற்காக இவருக்கு 70,000 பவுன் அளிக்கப்பட்டது.

இச்சிலையில் ஒரு குறை இருப்பதாகக் கூறப்படுகிறது. சிலை செய்து முடிக்கப்பட்டபின்தான் அத்தவறு கண்டுபிடிக்கப்பட்டதாம். குதிரை மேல் வீற்றிருப்பவர்கள் கால்கள் வைத்துக்கொள்ள 'ஸ்டிரப்' என்று ஒரு வளையம் சேணத்திலிருந்து தொங்கும். இந்த 'ஸ்டிரப்' மன்றோவின் குதிரையின் சேணத்தில் இல்லை. அடக்கு முறையை தீவிரமாகக் கையாண்ட வைஸ்ராய் லார்ட் வெலிங்டனுக்கும் சென்னையில் சிலை இருக்கிறது. (இவர் சென்னையில் கவர்னராக இருந்தவர்). இச்சிலையை இன்னும் அந்த இடத்தில் விட்டு வைத்திருப்பதே, இந்தியர்களுக்கு அநீதியை மறந்து விட்டு மன்னிப்பது என்ற குணம் இருப்பதைக் காட்டுகிறது.

## தமிழ் தாத்தாவுக்கு சிலை

தமிழுக்காக அரும்பாடுபட்டு சேவை செய்த டாக்டர் உ. வே. சாமிநாதய்யருக்கு பிரஸிடென்ஸி காலேஜிலேயே சிலை வைக்கப்பட்டிருக்கிறது. வைத்திய உலகில் மிக நிபுணராகவும் ஏழைப் பங்காளனாகவும் விளங்கிய டாக்டர் ரங்காச்சாரியாரின் சிலை ஜெனரல் ஆஸ்பத்திரி காம்பவுண்டில் இடம் பெற்றிருப்பது மிகப் பொருத்தமே.

பிரிட்டிஷ் அரசியான விக்டோரியா, மன்னர் ஏழாவது எட்வர்ட், இவர்களுக்கும் சிலைகள் உள்ளன. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சிலை இரண்டு இருக்கின்றன. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் முடிவதற்கு முன்பே பிரிட்டிஷ் மன்னர்களுக்கு சிலை வைப்பது நின்று விட்டது. அதனால்தான் ஆறுவது ஜார்ஜ் மன்னரின் சிலை சென்னையில் இடம் பெறாது போய்விட்டது.

சென்னை நகரம் பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் வந்தது லார்ட் கிளைவின்



தமிழ் தாத்தா

சாமர்த்தியத்தினுல்தான். ஏன் இந்த கிளைவுக்கு ஒரு சிலைகூட வைக்காமல் போனூர்கள் என்பது தெரியவில்லை!

ஹைக்கோர்ட்டுக்குள் நடுநாயகமாக ஸர் திருவாரூர் முத்துஸ்வாமி அய்யர் சிலை இடம் பெற்றுள்ளது. இவர் நீதிஸ்தலத்தில் நீதிபதி ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் இந்தியர். இந்தியர்கள் முயன்ருல் முன்னுக்குவர முடியும்; அதற்கு உதாரணம் 'நானே' என்று சொல்வது போல இச்சிலை விளங்குகிறது. நீதிபதி வேம்பாக்கம் பாஷியமய்யங்காருக்கும் சிலை கோர்ட்டுக்கு வெளியே உள்ளது.

சென்னையின் அரசியியலிலும் கல்வித் துறையிலும் அரும்பாடு பட்டவர் ஸ்ரீ சத்தியமூர்த்தி. அவருக்கு ஒரு சிலைகூட சென்னையில் இல்லை.

சிலைகள் சிலவற்றை அகற்ற வேண்டும் என்று சிலர் சொல்லி வருகிருர்கள். இவைகளை வைப்பதற்கே எவ்வளவோ பணம் செலவாகி யிருக்கும். இவைகளை அகற்ற இனியும் வீணில் செலவிடுவானேன்?

நாம் கௌரவிக்கத் தகுந்தவர்களின் சிலைகளை இப்போதுள்ளபடி அனுதரவாக விட்டு வைக்கலாகாது. சுதந்திர தினம், குடியரசு தினம் போன்றதினங்களிலாவது அவைகளை சுத்தப்படுத்தி வைக்கலாமே! ★

## அழகிகளால் ஆபத்தா?

அழகிகள் பல தேச சரித்திரங்களில் முக்கிய ஸ்தானத்தைப் பெற்றுள்ளனர். வானத்தில் காணப்படும் தூமகேதுவைப்போல இவர்கள் அரசியல் வானில் ஜ்வலிப்பவர்கள். அரசர்களையும் சக்ரவர்த்திகளையும் கைப்பொம்மை மாதிரி ஆட்டிவைப்பார்கள். அழகிகள் இல்லாத ராஜ்யமே இருந்ததாகத் தெரியவில்லை. சரித்திர நிபுணர்கள் இந்த அழகிகளுக்கு பிரதான்யம் கொடுத்தது போல கவிகளும் தங்களாலான புகழுரைகளை எல்லாம் இவர்கள்மீது பொழிந்துள்ளனர்.

கிளியோபாட்ராவின் ஒப்பற்ற அழகில் மயங்கியகாரணமாகவே ஜூலியஸ் ஸீஸருக்கு எகிப்தைக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டது.

ஆஸ்திரிய ராஜகுமாரி மேரிய லூஸியாவின் அழகில் மயங்கி அவளைப்பெற நெப்போலியன் விரும்பியதாலேயே அவனுடைய வீழ்ச்சிகு வித்து விதைக்கப்பட்டது.

மாதாஹரி போன்ற அழகிகள் வேவு வேலையில் ஈடுபட்டு எல்லோரையும் ஆட்டிவைத்தது உலகறிந்த விஷயம்.

இந்தியாவின் சரித்திரத்திலும் அழகிகள் இடம்பெற்றிருக்கிருர்கள். சந்திரகுப்தன் மௌரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தியதற்கு ஒரு அழகி வெளியிட்ட யோசனைதான் காரணம்.

அலாவுதீன் கில்ஜி பத்மினியின்மீது ஆசைப்பட்டதால் சித்தூரே விழ்ச்சியடைந்தது.

அக்பர் அநேக அழகிகளை மணந்தார். அவர்கள் காரணமாகவேதான் அக்பருக்கு ஹிந்து முஸ்லிம் ஐக்ய மனப்பான்மை ஏற்பட்டது.

அழகி நூர்ஜஹான் நாட்டையே ஆட்டிவைத்து, உலகத்தையே பிரகாசிக்கச் செய்தாள்.


# விவேகானந்தர் பெருமை உலகறியச்செய்தது சென்னையே

இப்போது ஸ்வாமி விவேகானந்தர் உயிருடன் இருப்பாராகில் அவருக்கு 93 வயது நிறைந்திருக்கும். ஆனால் அவர் பல வருஷங்களுக்கு முன்பே சமாதி யடைந்து விட்டார். விவேகானந்தரின் பெருமையை உலகறியச் செய்தது நம் சென்னையே

விவேகானந்தர் சிகாகோவில் நடைபெறும் உலக மத பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற யோசனை அவருக்குத் தெரிவிக்கப்பட்டது சென்னையில்தான். அவர் அமெரிக்காவுக்குச் செல்ல வேண்டிய ஏற்பாடுகளையும், பண உதவியையும் செய்தவர்கள் மதராஸிகள்தான்.

விவேகானந்தர் சென்னைக்கு முதல் தடவையாக விஜயம் செய்த போது சென்னையில் அக்கௌண்டெண்ட் ஜெனரலாக இருந்த பட்டாசார்ஜி என்கிற வங்காளியின் விருந்தினராகத் தங்கி இருந்தார். மரீனா கடற்கரையில் காவியுடை யணிந்து கமண்டலம் ஏந்திச் செல்லும் சாமியார் இங்கிலீஷ் பேசுகிறார் என்று தெரிந்ததும் அவரை பல பிரமுகர்கள் சந்தித்துப் பேசினர். ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் தலைமையில் கடற்கரை கூட்டத்தில் விவேகானந்தர் பிரசங்கம் செய்தார்.

அப்போது அவருடன் மிக நெருங்கிப்பழகிய மதராஸிகள் ஸ்ரீரங்காச்சாரியார், அழசிங்கப்பெருமாள், நரசிம்மாச்சாரியார். பின்னர் குறிப்பிடப்பட்ட இருவரும் பச்சையப்பன் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள்.



ஸ்வாமிகளுக்கு குழந்தைகள் என்றால் மிகவும் பிரியம். எவ்வளவோ போட்டோகிராபர்கள் அவரைப் படமெடுக்க முயன்றனர். ஆனால் அவர் அதற்கு இடம் கொடுத்ததில்லையாம்.

ஸ்வாமிகளின் அமெரிக்கப் பிரயாண செலவை தான் ஏற்பதாக அப்போது ராமநாதபுரத்தின் ராஜாவான பாஸ்கர சேதுபதி முன் வந்தார். ஸர் எஸ். சுப்பிரமணிய அய்யர் கேத்ரி மகாராஜாவுக்கு, உதவி கோரி தந்தி அனுப்பினர். அவர் ரூ. 600 உடனே அனுப்பி வைத்தார். ஸ்வாமிகள் ஜப்பான் வழியாக அமெரிக்கா சேர்ந்தார்.

அங்கு சென்றதும் சர்வ மதக் கூட்டம் ஒத்திப் போடப்பட்டதை அறிந்தார். பணமின்றி தவிக்கும் நிலை அவருக்கு ஏற்பட்டது. மைசூர் மன்னர் சாம ராஜேந்திர உடையாரும் கேத்ரி மகாராஜாவும் மீண்டும் அவருக்கு பண உதவி செய்தனர்.



விவேகானந்தர் அமெரிக்கா செல்லுமுன் இங்குதான் வழி அனுப்பும் கூட்டம் நடைபெற்றது.

---

ஸ்வாமிஜி பாஸ்டனிலிருந்த போது சர்வமத மகாநாட்டின் தலைவர் பாரோஸ் என்பவருக்கு அவரை அறிமுகம் செய்வித்து மிஸ்டர் ரைட் என்பவர் ஒரு கடிதம் கொடுத்தார் பாஸ்டனில் ஒரு கண் காட்சியைச் சுற்றிப் பார்க்கையில் ஸ்வாமிகளிடமிருந்த இக்கடிதம் தொலைந்து விட்டது.

ஸ்வாமிஜி சிகாகோவில் செய்த பிரசங்கம் உலகமறிந்த விஷயம். விவேகானந்தர் 'சிகாகோ மகாநாட்டில் பேச ஆரம்பிக்கு முன்பே 'சகோதரர்களே, சகோதரிகளே' என்று அழைத்தது எல்லோரையும் வசீகரித்து விட்டது. அதுவரை பேசியவர்கள் யாவரும் சீமான்களே, சீமாட்டிகளே என்று ஆரம்பித்துப் பேசினர். விவேகானந்தர் சென்னையில் 'பிரபுத்த பாரதா' என்ற சஞ்சிகையை ஆரம்பித்து, அதற்கு பி. ஆர். ராஜமய்யரை ஆசிரியராக அமர்த்தினர். இந்து மதத்தின் சிறப்பை உலகிற்கு உணர்த்தியவர் விவேகானந்தர்.

விவேகானந்தர் அமெரிக்கா செல்லுமுன் அவருக்கு வழி அனுப்புக்கூட்டம் திருவல்லிக்கேணி துளசிங்கப்பெருமாள் தெருவிலுள்ள ஒரு வீட்டின் மாடி ஹாலில் நடைபெற்றது. அன்று சென்னை பிரமுகர்களில் சிலர் இவரை அமெரிக்கா செல்ல வேண்டும் என்று கூறியதற்கு ஸ்வாமிஜி மறுத்திருப்பரேயானல் விவேகானந்தரின் பெருமையை உலகம் அறியவே வழி ஏற்படாமல் போயிருக்கும். ★

## என் கடன்
## பணிசெய்து கிடப்பதே

"இக்காலத்துக்கு நீங்கள் மஹாவீரனன அனுமாருடைய ஒழுக்கத்தை உங்களுடைய லட்சியமாகக் கொள்ளல்வேண்டும். ஸ்ரீ ராமச்சந்திரனுடைய கட்டளைக்காக அவர் கடலையே தாண்டியதை நோக்குங்கள். வாழ்வையோ சாவையோ பற்றிய கவலை அவருக்கில்லை. தமது இந்திரியங்களை முழுவதும் வென்றவர். ஆச்சரியமான புத்தி கூர்மையுடையவர். ஒருவருக்காக பணி செய்தல் என்ற பெரிய லட்சியத்தை அடிப்படையாக்கி உங்கள் வாழ்க்கையை அதன்மீது கட்டல் அவசியமாகிறது. அதன் வாயிலாக மற்றைய லட்சியங்கள் தானகவே வெளிப்படும். எதிர்மொழியின்றி குருவிற்கு கீழ்ப்படிதலும் பிரும்மச்சரியத்தை கண்டிப்பாக பின்பற்றலுமே வெற்றிக்காண இரகசியங்கள்.

ஒருபுறம் அனுமார் பணிசெய்யும் லக்ஷயத்தற்கு அறிகுறியாதல்போன்று மறுபுறம் உலக முழுவதையும் அஞ்சி நடுங்கச் செய்யும் சிம்ம திரத்திற்கும் அவரே அறிகுறியாகின்ருர்."

—ஸ்வாமி விவேகானந்தர்.

# சீட்டு விளையாட்டு

ராசு

நம் நாட்டில் அனேகமாக எல்லோருக்கும் சீட்டாட்டம் தெரிந்திருக்குமென்று சொல்லலாம். சிறுவர் முதல் பெரியோர் வரையில் இவ் விளையாட்டிலே ஈடுபடாதவர் கிடையாது, ஒரு சிலருக்கு எல்லாவித மான ஆட்டங்களும் தெரிந்திருக்கும். மற்றுஞ் சிலருக்கு ஏதோ ஒன்று இரண்டு வகையான ஆட்டங்களே தெரிந்திருக்கும். சீட்டாட்டமே தெரியாது என்று சொல்பவர் மிகக் குறைவு,

நாரீகம் முதிர்ந்த தற்காலத்தில் சிறந்த பொழுதுபோக்கான விளையாட்டுகளில் சீட்டாட்டம் முதன்மையாக நிற்கிறது. பஞ்சமா பாதகங்களில் ஒன்ருன சூதாட்ட வகையைச் சேர்ந்தது என்று கருதப்பட்டு வந்த கிராமாந்திரப் பகுதிகளிலும் இந்த ஆட்டம் வெகுவாகப் பரவியிருக்கிறது. ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகவும், பொழுதுபோக்கவும் ஏற்படுத்தப்படும் 'கிளப்பு'களில் சீட்டாட்டம் இல்லாமலிருப்பது அபூர்வம்.

இப்போது வழக்கில் உள்ள சீட்டாட்டம் நம் நாட்டு விளையாட்டு அல்ல; ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்தபோது தங்களுடன கொண்டு வந்த சரக்கு என்று சொல்கிருர்கள். அவர்கள் நம் நாட்டிற்கு வந்த பிறகே இந்த ஆட்டம் பிராபல்ய மடைந்துள்ளது என்பது உண்மையே. ஆனுல், ஆங்கிலேயர்கள் இந்த நாட்டில் காலடி வைப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் சீட்டாட்டப பிராபல்ய மடைந்திருக்கிறது. ஒரு வகையில் பார்த்தால், நம் நாட்டிலிருந்துதான் இந்த ஆட்டம் வெளி நாடுகளுக்குப் பரவியிருக்க வேண்டும் என்றும் சொல்லாம்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வங்காளத்திலே விஷ்ணுபூர் என்னும் நகரத்தைச் சேர்ந்த பகுதியிலே இந்த ஆட்டம் பிரசித்தி பெற்றிருந்தது.

தற்காலம் வழக்கில் இருக்கும் சீட்டுக்கட்டிலே ஐப்பத்து இரண்டு சீட்டுகள் உண்டு. ஆடுதன், கிளாவர், டைமண்ட், இஸ்பெட் என்று நான்கு வகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகைக்கும், ராஜா, ராணி, ஜாக்கி, ஒன்று முதல் பத்து வரையில் எண்கள் கொண்ட பத்துச் சீட்டுகள் ஆக மொத்தம் பதின் மூன்று சீட்டுகள் உண்டு. ஆனுல் வங்காளத்திலே பிரசித்தி பெற்றிருந்த விஷ்ணுபுரச் சீட்டு மொத்தம் நாற்பத்தெட்டுச் சீட்டுகளைக் கொண்டது. வகைக்குப் பன்னிரண்டாக

---

இந்தியாவில் முதன்முதலில் சீட்டு விளையாட்டை விளையாடினவர் முகலாய மன்னர் பாபர். அக்பர் 144 சீட்டுகளடங்கிய விளையாட்டு ஒன்றை ஆடிவந்ததாக சரித்திரம் கூறுகிறது. அதன்பின் 96 சீட்டுகளடங்கிய விளையாட்டு ஒன்று வழக்கத்திலிருந்து வந்தது. 'கஜினபா' எனற இத்தகைய சீட்டாட்டம் இன்னும் இந்தியாவின் பல பகுதிகளிலும் விளையாடப்பட்டு வருகிறது.

முகலாயப் பேரரசு வியாபித்திருந்தபோது இந்தியர் இதே சீட்டாட்டத்தை கொஞ்சம் சிக்கலான முறையில் விளையாடி வந்தனராம். தென்னிந்தியாவில் இத்தகைய விளையாட்டு எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

'ஸ்ரீ தத்வநிதி' என்ற சீட்டு விளையாட்டு நூல் மைசூர் மன்னராகவிருந்த கிருஷ்ணராஜ உடையாரின் ஆதரவு பெற்று எழுதப்பட்டுள்ளது. அதில் சீட்டாட்டத்தைப் பற்றிய முழு விவரங்களையும் காணலாம்.



நான்கு வகைகள் உண்டு. ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் சீட்டில் அரச உருவம் ஒன்றிருக்கும். இந்தச் சீட்டுதான் 'ஏஸ்' ஆகும். இரண்டு மல்லர்கள் குஸ்தி போடுவது போன்று இருப்பது இரண்டு என்பதைக் குறிக்கும். மூன்றாவதும் நான்காவதும், முறையே மூன்று இலைகளையும், நான்கு சங்குகளையும் கொண்டிருக்கும், அவ்விதமே ஐந்து என்னும் எண்ணைக் குறிக்கும் சீட்டிலே ஐந்து மலர்களும், ஆறு எண்ணைக் குறிக்கும் சீட்டிலே ஆறு திண்டுகளும் காணப்படும். ஏழு கத்திகள் ஏழாம் சீட்டையும், எட்டு பகுளப் பழங்கள் எட்டாம் சீட்டையும் குறிக்கும். ஒன்பதாவது சீட்டிலே ஒன்றாக மலர்ந்த ஒன்பது மலர்கள் இருந்தன. பத்தாவது சீட்டில் பத்து இறகுகள் காணப்பட்டன. ஒற்றைக் குதிரை வீரன் பதினோராம் சீட்டையும், ஒற்றை யானைவீரன் பன்னிரண்டாம் சீட்டையும் குறிக்கின்றன. இவ்வாறு நான்கு வகைகளிலும் சேர்ந்து நாற்பத்தெட்டு சீட்டுகள் கொண்டிருந்தது.

விஷ்ணுபூர் 'பிரதேசத்தில் வழங்கி வந்ததால், விஷ்ணுபுரச் சீட்டு என்னும் பெயர் கொண்ட இச்சீட்டு இப்போது வழக்கில் இல்லை, இந்தச் சீட்டுகளின் தோற்றத்தையும், இவற்றுள் காணப்படும் உருவங்களையும் கவனித்தால், இவை நீண்ட காலத்துக்கு முன்பாகவே வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்பது நன்கு தெரியவரும்.

அரசனைக் குறிக்கும் சீட்டிலே அரசன் உருவம் ஒன்று குறிக்கப்பட்டிருக்கும் என்று மேலே தெரிவித்தோம். சீட்டை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அவ்வுருவம் பெண்ணைப் போன்று தோற்றமளிக்கும். ஊன்றிக் கவனித்தால் பெண்ணுடை தரித்த ஆண் உருவம் என்பதைத் தெளிவாகக் காணலாம். அக்காலத்தில் வங்காளத்தை ஆண்டு வந்த அரசனான மல்லன் என்பவனுடைய உருவத்தையே இது குறிக்கிறதென்று சொல்கிறார்கள். அரசன் நாட்டின் க்ஷேம நலங்களைக் கருதாமல் சதா பெண்களுடனேயே பொழுதைக் கழித்து வந்திருக்க வேண்டும். அதைக் குறிக்கவே இவ்விதம் அரசன் உருவத்துக்குப் பெண்ணுடை அணிவித்தார்கள் போலும்.

இதே காலத்தில் அந்தப் பிரதேசத்தில் தசாவதாரச் சீட்டு மற்றொரு வகையிலும் பிரசித்தி பெற்றிருந்தது. இந்த வகைச் சீட்டிலே மொத்தம் நூற்றிருபது சீட்டுகள் உண்டு. மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்

களையும் பத்து வகைகளாக ஏற்படுத்தியுள்ளனர். அதன் காரணமாகவே இந்த வகைக்குத் தசாவதாரச் சீட்டு என்று பெயர் ஏற்பட்டது. மத்ஸ்யம், கூர்மம், வராகம், நரஸிம்மம், புத்தர், வாமனர், பரசுராமர், ராமர், பலராமர், கல்கி என்று முறையே பெயரிடப்பட்டுள்ள பத்து வகைகளிலும் வகைக்குப் பன்னிரண்டு சீட்டுகள் இருந்தன. ஒவ்வொரு வகையிலும் ராஜா, மந்திரி, ஒன்று முதல் பத்து வரையில் எண்கள் கொண்ட சீட்டுகள் ஆக பன்னிரண்டு சீட்டுகள் இருக்கின்றன.

ராஜா, மந்திரி இரண்டு சீட்டுக்களிலும் விஷ்ணுவின் அந்தந்த அவதாரத்தின் உருவம் காணப்படும். அதாவது மத்ஸ்ய வகையில் மத்ஸ்ய அவதாரமும், கூர்ம வகையில் கூர்ம அவதாரமும் காணப்படும். மேலும் ராஜா சீட்டுக்கும் மந்திரி சீட்டுக்கும் வித்தியாசம் தெரிய வேண்டாமா? அதற்காக அரசனைக் குறிக்கும் சீட்டிலே, அரசனுக்குப் பக்கத்தில் இரண்டு துவார பாலகர்களின் உருவங்கள் காணப்படும்.

ராஜா மந்திரியைத் தவிர, வெறும் எண்கள்மட்டும் கொண்ட பத்துச் சீட்டுகளிலும் மகாவிஷ்ணுவின் திருஅவதாரப் படம் காணப்படாது. ஆனுல், அவை எந்த வகையைச் சேர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வெவ்வேறு குறிகளைக் கொடுத்திருந்தனர். மத்ஸ்ய வகைச் சீட்டுகளிலே மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். கூர்மத்தைக் குறிக்க ஓர் ஆமையும், வராகத்துக்குச் சங்கும் நரஸிம்மத்துக்குச் சக்கரமும், புத்தருக்குத் தாமரை மலரும் வாமனருக்குக் கமண்டலமும் ராமருக்கு அம்பும் பலராமருக்குக் கதையும் கல்கிக்குக் கத்தியுமாகக் காணப்படும்.

இந்த வகைச் சீட்டிலே புத்த பகவானைத் திருமாலின் ஐந்தாவது அவதாரமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் புத்தருக்கு நான்கு கைகளும் அச்சீட்டுக்களிலே காணப்படுகின்றன, அன்றி அந்த வகையிலே எண்களைக் குறிக்கும் சீட்டுக்களிலே புத்தரைக் குறிக்க, தாமரை மலர் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.



வெகு நாட்களுக்கு முன்பு உபயோகத்தில் இருந்த சீட்டுகள் வட்ட வடிவமாகவே இருந்தன. அவைகளில் காணப்பட்ட உருவங்கள் இங்குள்ள படங்களில் காணப்படுகின்றன.

ஆனால் புத்த பகவானை மகாவிஷ்ணுவின் திரு அவதார வரிசையில் ஒன்பதாவதாகத்தான் பொதுவாகக் கருதுகிறார்கள். அப்படியாயின் ஐந்தாவது அவதாரமாகக் கருதுவது எப்போது?

கி. பி. 12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜயதேவர் காலத்திலும் புத்த பகவானை மகாவிஷ்ணுவின் ஒன்பதாவது அவதாரமாகவே கொண்டிருந்தார்கள். அதற்கு முன் நூற்றாண்டில் இருந்த க்ஷேமேந்திரரும் அவ்விதமே தெரிவிக்கிறார். ஆகவே திருமாலின் ஐந்தாவது அவதாரமாகப் புத்தரைக் கருதி வந்தது அதற்கும் முன்னதாகவே இருந்திருக்க வேண்டும்.

மேலும் இச்சீட்டுகள் பிரபலமடைந்திருந்த வங்காளத்திலே ஒரு காலத்தில் புத்தமதம் பரவியிருந்தது. கி. பி. 800-க்கும் 1200-க்கும் இடையே பாலவமிச மன்னர்கள் வங்காளத்தை ஆட்சி புரிந்து வந்தபோது, அங்கு மஹாயான புத்தமதம் பரவியிருந்தது. தவிர, அந்தப் பிரதேசத்தில் பத்மபாணி என்று புத்தருக்கு ஒரு பெயர் உண்டு. அதைக் கொண்டுதான் புத்தரைக் குறிக்க சீட்டிலும் தாமரை மலரை உபயோகித்தார்கள் போலும்.

கி. பி. 40-ம் ஆண்டில் தோன்றிய குஷான் ராஜ்யத்தின் சிறந்த அரசனான கனிஷ்கர் காலத்திலே மஹாயான புத்தமதம் தோன்றியது. அதன் விளைவாக விக்கிரக ஆராதனை தோன்றியது. புத்தரைப் பல உருவங்களில் அமைத்து வணங்கி வரத் தலைப்பட்டனர். புத்தரைத் தெய்வ அவதாரமாகக்கொண்டு உரு அமைக்கப்பட்ட பொழுது சாதாரணமாகத் தெய்வங்களுக்குக் காணப்படும் நான்கு கைகளையும், அவருக்கு வைத்து விட்டனர் என்றே கருத வேண்டி யிருக்கிறது.

இவைகளைக் கொண்டு நாம் பார்க்குமிடத்து தசாவதாரச் சீட்டுகள் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே வங்காளத்தில் வழக்கில் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது.

மிகப் பழங்காலத்திலேயே வழக்கில் இருந்த இந்தச் சீட்டுக்கள் தற்போதுள்ளவை போன்று சதுரமாக நான்கு மூலைகளையும் கொண்டனவாக இல்லை. வட்ட வடிவமாகவே அமைந்திருந்தன. சீட்டுக்களின் மத்தியிலே கட்டம் கட்டி அதற்குள்ளாக உருவமோ எண்களோ குறிக்கப்பட்டிருந்தன.

முன் பக்கத்தில் காணப்படும் வட்டமான சீட்டுக்கட்டுகளில் எல்லாம் பிரதானமாக கணபதி, யானை இவ்வுருவங்களே காணப்படுகின்றன. பல விதங்களில் கணபதி காட்சி அளிக்கிறார். இரு யானைகள் சண்டை போடுவது, பல யானைகள் வட்டமாக நிற்பது இதெல்லாம்தான் அக்காலத் சீட்டுகளிலுள்ளவைச் அக்காலத்தில் இந்த சீட்டுகள் தந்தத்தினால் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. இக்காலத்திலும் தந்தத்தினால் ஆன சீட்டுக்கட்டுகளும் வர ஆரம்பித்திருக்கின்றன.

அக்காலத்தில் நம் நாட்டுக்கு வந்த அயல்நாட்டு யாத்ரீகர்கள் மூலமும் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு வியாபாரம் செய்யச் சென்றவர்கள் மூலமும் இந்த விளையாட்டு அரபு, சீனா, முதலிய நாடுகளுக்குப் பரவி, அங்கிருந்து ஐரோப்பாவுக்குச் சென்றிருக்க வேண்டும். அவ்விதம் நம் நாட்டிலிருந்து சென்ற சீட்டாட்டம் திரும்பவும் வேறு உருவத்தில் நம் நாட்டிற்கே வந்திருக்கிறது.

தவிர, தற்காலம் நாம் விளையாடும் முறைக்கும் பழங்காலத்தில் விளையாடப்பட்டு வந்த முறைக்கும் அனேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ★

---

★ இந்தியாவில் மோட்டார் வைத்துக் கொள்வது என்பது இன்னும ஆடம்பரமாகவே இருந்து வருகிறது. ஜனத் தொகையில் 100,000 பேர்களுக்கு 93 கார்கள் என்ற கணக்கில் இந்நாட்டில் மோட்டார் கார்கள் இருந்து வருகின்றன, ஆனால் யுனைடெட் ஸ்டேட்ஸில நான்கு பேர்களுக்கு ஒருவர் மோட்டார் வைத்திருக்கிறார்.

# ஜீவராசிகள் எப்படித் தோன்றின?

பரணிகுமார்

அண்ட சராசரம் கிடுகிடுக்கும் படியான கோரசப்தம்! பூமியின் நிலப்பரப்பிலே எங்கோ பொத்தல் கண்டு விட்டதுபோலக் கடல் கொந்தளித்து பூமியைக் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிக்கொண்டே யிருந்தது. சமவெளி, குன்றுகள், பிரம்மாண்டமான மலைகள், பறவையினம் தவிர மற்ற ஜீவராசிகள் அனைத்தும் கடலிலே கலந்தன. சிறகடித்துப் பறந்த பறவை இனம் சிறிது நேரம் கூட உயிர் வாழ்ந்தபின் இறகுகள் நோகவே, இறங்க இடமின்றித் தவித்தது. கடைசியாகக் கடலிலே விழுந்து இறந்தது.

யுகம் முடிந்தது!

மூச்சு விடமுடியாமல் ஆஸ்த்மாவினால் தவிக்கும மனிதன் மார்பைப் போல எம்பிக்கொண்டிருந்த பேரலைகள், இறந்தவனைப் போலச் சலனமற்று விட்டன. காற்று கிடையாது; வெளிச்சம் கிடையாது. எங்கும் 'ஜலமயம் ஜகத்'தாக இருந்தது.

அமைதியைக் கலைத்துவிட்டு நீர்ப் பரப்பிலே குமிழ்விட்டபடி மேலே கிளம்பியது ஐந்து தலைப் பாம்பு. அண்ட சராசரங்களையும் அப்படியே விழுங்கிவிட்ட கடலில் இந்தப் பாம்பு மட்டும் எப்படி உயிருடனிருந்தது? ...ஓஹோ, விஷயம் புரிந்துவிட்டது. அவர் ஆதிசேஷன் அல்லவா! பாற் கடலிலே தோன்றிய அந்தப் பாம்புப் படுக்கையிலே பரந்தாமன் பள்ளி கொண்டிருந்தார்! பாதத்தருகே பத்தினி லக்ஷ்மிமாதா வீற்றிருந்தாள். அன்னையின் வதனத்திலே சோகம் அரும்பியது. மனைவியின் மனவேதனையை மணவாளன் அறியாதவரா என்ன? மக்களை இழந்த மாதாவின் மனதுக்கு மகிழ்ச்சிதர தீர்மானித்தார் பகவான்.

அவரது நாபியிலிருந்து தாமரையைப் பீடமாகக்கொண்ட பிரம்மா தோன்றினார். படைப்புத் தொழிலை பிரம்மாவிடம் ஒப்படைத்தார் பரமாத்மா. பிரம்மா தன் கடமையைச் செய்ய ஆரம்பித்தார். மனம் வகுத்த வகையில் ஜீவராசிகளைப் படைக்க ஆரம்பித்தார். இதற்கு அது; அதற்கு வேறொன்று என்று ஜீவராசிகளின் இனம் பெருகியது காலத்தைத் துணையாகக் கொண்டு தான் படைத்தவற்றை அழிக்கும் பொறுப்பை சிவபெருமானிடமே விட்டுவிட்டார் பிரம்மா. ஒரு யுகம் முடிந்து மறுயுகம் ஆரம்பமாகி விட்டது. தன் லீலைகளுக்கு இலக்காக ஜீவராசிகளை ஆண்டவன் படைத்து விட்டான். புராணத்திலும் வேதம, சாஸ்திரங்களிலும் நம்பிக்கையுள்ளவர்களின் கூற்று இது.

நமது இந்து சாஸ்திர புராணங்கள் மட்டும் இப்படிக் கூறவில்லை. கிறிஸ்தவ வேதமான பைபிளும் இப்படித் தான் கூறுகிறது. ஆதாம், ஏவாள் இருவரையும் கர்த்தர் படைத்தார். ஆண், பெண் என்ற இரண்டு ஜாதிகள் மட்டுமே உலகில் உண்டு என்பதை விளக்கும் நோக்கத்தோடு இவர்கள் படைக்கப்பட்டனர் போலும். ஆனால் ஆறறிவு பெற்ற பெற்ற மனிதன் கடவுளை அவமதித்து பல வேறு ஜாதிகளைக் கற்பித்து அழிவுப் பாதையிலே செல்லுகிறான். ஆதாம், ஏவாள் இருவரும் இயற்கையின் அருளால் உண்ணவும உடுக்கவும் உறங்கவும் வசதிகள் பெற்று, பிரம்மனுக்கு உதவியாகப் படைப்புத் தொழிலில் ஈடுபட்டார்கள்.

புராணங்கள் கூறுவது போல் கடவுள்தான் ஜீவராசிகளைப் படைத்தாரா? விஞ்ஞானம் இதைப்பற்றி என்ன சொல்லுகிறது? ஆறறிவு பெற்ற மனிதர்களில் பலர் அழிவுப் பதையில் சென்றபோது அறிஞர்கள் பலர் ஆராய்ச்சியிலிறங்கினார்கள். தங்கள் தங்கள் காலத்திலே அவர்கள் செய்த ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஆராய்ச்சி பல விதமாக இருந்தாலும் படைப்பின் கடைசி

கட்டம் மனிதன்தான் என்பது புலனுகிறது.

விஞ்ஞானம் கூறுகிறது.

சூன்யப் பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருந்த தீப்பிழம்பான சூரியனிலிருந்து சிதறி விழுந்ததுதான் பூமி. இது தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றிவர ஆரம்பித்தது. போகப்போக பூமியின் உஷ்ணம் குறைந்து அது குளிர்ந்து இறுகியது. மேற்பரப்பு குளிர்ந்தாலும் உள்ளே தீக்குழம்பு இருந்தது. திடீரென இக் குழம்பு வேகமாகப் பொங்க ஆரம்பித்து மேற்பரப்பில் வழிந்து இறுகி கற்பாறையாகியது; உலோக தாதுப் பொருள்களாகியது. நெருப்புக் குழம்பிலிருந்து வீசும் கந்தக ஆவி, காற்றுடன் சம்பந்தப்பட்டதால் நீராக மாறியது. கற்பாறைகள் காற்ருலும் தீக் குழம்பாலும் மோதுண்டு சிதறிப் பொடிப் பொடியானதால்தான் மண் ஏற்பட்டது

பூமியின் இந்த வளர்ச்சிக்குப் பல ஆயிரம் வருஷங்களுக்குப்பின் ஜீவராசிகள் தோன்றின. அறிஞர்கள் ஜீவராசிகளின் பிறப்பு பற்றிக் கூறியிருக்கும் தத்துவம் ரசமாக இருக்கிறது. உலகப் புகழ்பெற்ற உயிர்நூல் வல்லுநர் சார்லஸ் டார்வின் ஜீவராசிகளின் தோற்றத்தைப்பற்றி எழுதியிருப்பவைகளையே பெருவாரியான மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள். ஜீவராசிகளிலே கடைசியாகப் பிறந்தவனை மனிதன், 'குரங்கிலிருந்து பிறந்தவன் என்பதை மட்டும் யாரும் மறுக்கவில்லை!

ஜீவராசிகளின் தோற்றம்பற்றி விஞ்ஞானம் கூறுகிறது.

நீரும் நிலமும் சூரிய உஷ்ணத்தாலும் வெளிச்சத்தாலும் தாக்கப்பட்டு உணர்ச்சி மயமானதொரு சக்தியைப் பெற்றன. நீரும் நிலமும் தழுவும் இடத்தில் தரையில் நீர்ப்பாசி படர்ந்தது. இதுதான் உலகிலே பிறந்தமுதல் ஜீவராசி. இது பல்லாயிரம் வருஷங்களுக்குப்பிறகு அமீபா என்ற தசை வடிவம் பெற்றது. பால் ஏட்டைப் போன்ற இந்த ஜீவராசி ஒரு அங்குலத்தில் நூறில் ஒரு பங்குதான் இருக்கும். உடல் முழுதும் வாய் கொண்ட இந்த ஜீவராசி அடிக்கடி உருமாறியதுடன் இரண்டாகப் பிரிந்து ஜீவராசிகளை விருத்தி செய்தது. அமீபாவின் ஒரு பிரிவு மயிர்க் கால்கள் போன்ற சிலும்பலுடன் நீரின் மேற்பரப்பில் படர்ந்தது. இதன் மூலம்தான் தாவர வர்க்கம் பிறந்தது. மற்ருெரு பிரிவு சதைக் கோளமாக கரையில் ஒதுங்கியது. இதிலிருந்துதான் ஜீவராசிகளின் 'உயிர்த்தாது' உண்டாயிற்று.

அமீபாவின் பிரிவுகளினுல் ஏற்பட்ட சதைத் துண்டங்கள் 'ஜெல்லிமீன்' என்ற மீனுருவம் பெற்று நீரில் நீந்த ஆரம்பித்தன இவை நாளடைவில் உருமாறி புழுவாக மாறின. நீரின் மேல் பரப்பிலிருந்து தரைமட்டத்திற்குச் சென்று ஊர்ந்து கொண்டிருந்தன. இந்தப் புழுவகை பல உருவம் பெற்று வரும்போது அதற்கு மீசைக் கொம்புகள் வளர்ந்து அவற்றின் சக்தியால் பார்வை பெற்றன. இவைகளே பின்னர் கண்களாக மாறிவிட்டன. பிறகு இவை நட்சத்திர மீன்களாக மாறி, பிறகு தலைப் பிரட்டைகளாகி தவளைகளாகி விட்டன. இவைகளே பல்லி. பாம்பு, முதலைகளாகப் பெருகின.

இதைப்போலவே மயிர்ச் சிலும்பல்களாக இருந்தவை கடற்பஞ்சாகி நாளடைவில் பவளப்புற்ருகின. இவை கரையில் ஒதுங்கியபோது பூமியில் ஊன்றி புல் பூண்டுகளாயின. கால வேகத்தில் புல், செடி, கொடி, மரமாக வளர்ந்தது.

இந்த இருவகைப் படைப்பில் ஏற்பட்ட அத்தனை ஜீவராசிகளும் உயிருடனிருந்தால் உலகில் இடம் ஏது? பிறக்கும் ஜீவராசிகளில் பல அழிந்து போகின்றனவே, இது ஏன்? ஜீவராசிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான மாறுபாடுடன் பிறந்தன. இவைகளிடையே எளியாரை வலியார் வாட்டும் மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது. இன விருத்தி நோக்கத்தோடு கூடி வாழ்ந்தவை யெல்லாம் ஒன்றுக் கொன்று மாறுபாடு கொண்டன. இவைகள் "வாழவேண்டி போராட்டம், நடத்துகின்றன. சக்தியற்றவை அழிக்கப்பட்டபின் "தகுதியுடையவை எஞ்சி' நிற்கின்றன. இவைகளின் சந்ததிகளும் இவ்வாறே வாழ்கின்றன.

ஏதாவது ஒரு இனம் தோன்றி விட்டால் அது தானாக வாழ முடிவதில்லை. தன் வாழ்வுக்கு அது மற்றொன்றை நிச்சயம் நம்பி எதிர்பார்த்திருக்கிறது. (படைப்பின் தத்துவமே இப்படி இருக்கும்போது ஆறறிவு பெற்ற மனிதன் யார் தயவும் இன்றி வாழ்ந்து விட முடியும் என்று நினைப்பது விசித்திரமாக இல்லையா?) தவளைகளின் இனம் பெருகும்போது பாம்பு போன்ற இனம் தோன்றி அழிக்கிறது. இல்லாவிடில் உலக முழுதும் தவளை மயமாகத்தானே இருக்கும்! தாவரவர்க்கமும் இப்படியே. பிரம்ம தண்டு பூண்டு ஒரு பருவத்தில் முப்பதாயிரம் விதைகளை உற்பத்தி செய்யுமாம். அதை மற்ற தாவர இனம் தடுக்காவிடில் உலக முழுவதுமே பிரம்ம தண்டுதானே இருக்கும்! தங்கள் இனம் தங்களுடன் போகக் கூடும் என்ற பயம் ஏற்பட்டதாலேயே ஜீவராசிகள் உற்பத்தியிலீடுபட்டபடி இருக்கின்றன.

நீரிலிருந்து மீனினம் எதிரிகளிடமிருந்து தப்ப, கரைக்கு வந்து செதில்களின் மூலம் வானத்திலே பறக்க ஆரம்பித்தது. இதுவே பறவையினம் வளரக்காரணமாயிருந்தது. ஜீவராசிகளின் ஒரு முக்கிய திருப்பம் எலி இனத்தில்தான் ஏற்பட்டது. உஷ்ண ரத்தமும் ஐம்புலனுணர்ச்சியும் ஏற்பட்ட இந்தக் காலத்தில்தான் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் நிலை ஏற்பட்டது; எலியின் மூலமே பன்றி, கரடி, யானை குரங்கு முதலியவை தோன்றின. மீனினத்திலிருந்து பறவைகள் தோன்றின. பல்லி இனத்திலிருந்து ஆடு, மாடு, மான், குதிரை, புலி, சிங்கம் முதலியவை தோன்றின. குரங்கிலிருந்து கடைசியாக மனிதன் தோன்றினான். அதுவும் சாதாரண வகையைச் சேர்ந்தவனா மனிதன்! உராங் உடான், சிம்பான்ஸி, கொரில்லா போன்ற வகைகளிலிருந்து தோன்றியவன் அவன்!

மற்ற ஜீவராசிகளின் பிறப்பின் மூலத்தில் யாருக்கு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும் மனிதனின் மூலம் குரங்கு இனம் தான் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். அவன் பொரிகடலை, வாழைப்பழம் சாப்பிடுகிறான்! கோபம் வந்தால் 'உர்' என்கிறான்! தாவித் தாவி ஓடுகிறான்! குரங்கின் சேஷ்டைகளை மனிதன் ஒருவன்தான் அப்படியே பிரதிபலிக்கிறான்! மனிதன் கற்காலத்திலிருந்து தற்காலவாதியாகும் வரை அவன் அறிவு வளர்ச்சி பெற்றது. ஆனால் அவன் ஆக்கும் சக்தியை அழிவுப் பாதையிலே பிரயோகித்தான் அவனது பூர்வீக ஞாபகம் அவனை விட்டுவிடவில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் — மனிதன் மிருகமாக மாறும்போது—உலகத்தை உய்விக்க வேண்டி அறிவுச் சுடர்கள் பிரகாசிக்க ஆரம்பித்தன. விஞ்ஞானம் கூட 'தெய்வாம்சம்' என்று புகழும் ஏசுகிறிஸ்து, புத்த பகவான், நபிகள் நாயகம், மகாத்மா காந்தியடிகள் போன்ற மனித தெய்வங்கள் பூமியில் தோன்றி வாழும் வழியைக் காட்டிவிட்டுப் போகிறார்கள்.

இப்போது அணுயுகம் நடக்கிறது. அணுகுண்டும் ஜலவாயு குண்டும் படைக்கப்படுகின்றன. ஆனால் இந்தக் குண்டுகளின் மூலம் இயற்கையின் ஆதரவில் வளர்ச்சி பெற்ற ஜீவராசிகளை ஒழிக்கும் வேலையிலேயே மனிதன் ஈடுபடுகிறான். தன் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த—தன் பிறப்பிடமான—கடலிலே இந்தக் குண்டுகளை வெடிக்க வைத்துப் பரீட்சை செய்கிறான் மனிதன், வளர்த்த கடா மார்பில் பாய்வது போல. இதனால் கடல் கோபித்துக் கொந்தளித்து ஸ்வர்ண பூமியை ஸ்மசான பூமியாக ஆக்கி வருகிறது. ஆக்கும் சக்தியை மனிதன் ஆக்க வேலைகளுக்கே ஈடுபடுத்தா விட்டால் விரைவில் மீண்டும் பிரளயம் வந்து, கற்காலம் மறுபடியும் வரத்தான் செய்யும். ★

---

★ கைத்தறி நெசவுத் தொழில் மூலம் இந்தியாவில் ஒரு கோடி பேர்களுக்கு வேலை கிடைக்கிறது. நாட்டில் சுமார் 20 லக்ஷம் தறிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது ஒருவருஷத்தில்உற்பத்தியாவது 200 கோடி கஜ துணி.

# எப்போது எப்படி தூங்குவது?

'கும்பகர்ணன்'

ரிப் வான் விங்கிள் என்பவன் தூங்கினன். நீண்ட காலம் தூங்கி விட்டான். அவன் விழித்து எழுந்திருக்கும்போது சகலமும் மாறிவிட்டிருந்தன.

இத்தாலியில் ஒரு டாக்டர் பல வருஷ காலம் நிம்மதியாகத் தூங்காமல் தவியாகத் தவித்து, சமீபத்தில் தான் இறந்து போனுர். அவர் டாக்டரானதால் தூங்கும் போது உடம்புக்குக் கிடைக்கும் ஓய்வை எப்படியோ கிடைக்க வழிசெய்து கொண்டார்.

உணவு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தூக்கமும். ஒரு மனிதன் சுமார் 90 மணி நேரம் வரை தூங்காமல் விழித்திருக்கலாம். அதற்கு மேல் முடியாது. முடியவே முடியாது.

தூக்கத்தின் அளவு அவரவர்கள் உடல் நிலையைப் பொருத்தது. பழக்கத்தைப் பொருத்தது. காந்திஜீ 15 நிமிஷ நேரம்தான் தூங்குவார். அவரை யாரும் எழுப்ப வேண்டியதில்லை. அவராகவே குறிப்பிட்ட காலம் முடிந்ததும் எழுந்து விடுவார். அந்த 15 நிமிஷமும் அவர் அயர்ந்து தூங்கியிருப்பார்!

நேரு, சர்ச்சில், நெப்போலியன் போன்றவர்கள் தூக்கத்திற்கு வெகு குறைந்த அளவு காலத்தையே ஒதுக்கி இருக்கிருர்கள். தூங்க ஆரம்பித்த முதல் மணி நேரத் தூக்கம் அயர்ந்த தூக்கமாகும் பிற்பாடு தூங்குவதை அப்படிச் சொல்வதற்கில்லை.

புதிதாகப் பிறந்த குழந்தைக்கு 22 மணி நேரம் தூக்கம் அவசியம். உடல் பருத்தவர்களுக்கு 7 மணி நேரத் தூக்கம் அவசியமென்ருல் ஒல்லியான ஆளுக்கு 9 மணி நேரத் தூக்கம் அவசியம்.

தூங்கும்போது புரண்டு படுக்காதவர்கள் இருக்கவே முடியாது. ஒரு இரவில் குறைந்தது முப்பது தரமாவது ஒருவர் புரண்டு படுக்க நேரிடும்.

சார்லஸ் டிக்கென்ஸுக்கு வடக்கே தலைவைத்து படுத்தால் தான் தூக்கம் வருமாம்! இதற்காக வடதிசையைக் காட்டும் காம்பஸ் ஒன்றை அவர் எங்கு போனுலும் கொண்டு போவது வழக்கம்.

களைத்த உடல் கண்ணுறங்கினுல் தான் சோர்வு நீங்கி சுறு சுறுப்படையும். வேலை செய்வதன் காரணமாக தளர்ச்சியடையும் நாடி நரம்புகளும் மூளையும் மறுபடியும் உணர்வும் உணர்ச்சியும் பெறுவதற்கு தூக்கம் மிகமிகத் தேவையாக இருக்கிறது. சில துரதிர்ஷ்டசாலிகளுக்கு இரவில் சில நிமிஷநேரத் தூக்கம்கூட இருப்பதில்லை. அவர்கள் தூக்க மின்மையாலும் அரைத் தூக்கத்தாலும் அவதிப் படுகிருர்கள். கண்ணுறங்கும் போது கனவுகள் காரணமாகவும். தூக்கத்திலே அர்த்தமற்ற முறையில் புலம்புவதன் காரணமாகவும் பலருக்கு தூக்கம் கெடுவதும் உண்டு. ஆகையால் உடலுக்கு வலிவும் உள்ளத்திற்கு உற்சாகமும் தரும் வகையில், எப்போது தூங்குவது, எப்படித் தூங்குவது என்பதை நன்குணர்ந்து பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும்.

உறங்கும்போது நரம்புகள் தளர்ச்சியடைந்து உடல் ஒருவிதமான மயக்கத்திலே ஆழ்கிறது. வியர்க்கும் தன்மை குறைவதோடு தசைகளின் வலிவும்குறைந்து வருகிறது. கரியமில வாயு அதிகமாக வெளியே விடப்பட்டு நிதானமாக பிராணவாயு வேண்டிய அளவிற்கு உட்கொள்ளப்படுகிறது. ரத்தக் குழாய்களில் ரத்தம் சமசீராக ஓடுகிறது மூளையிலே ரத்தம் குறைவதோடு கைகால்களிலே அதிகமாக ரத்தம் பாய்ந்தோடுகிறது. கண்

விழிகள் மேலே செருகிக்கொள்ளுகின்றன. உறங்கும்போது சரியான நிலையில் உடல் இயங்குகிறது என்பது ஜீரணசக்தி உறுப்பு வேலைசெய்து கொண்டிருக்கின்றன என்பதைத் தான்காட்டுகிறது.

ஒருவன் தூங்கிக்கொண்டிருக்கும் போது, அவன் இவ்வுலகத் தொடர்பையோ நிகழ்ச்சிகளையோ அறிந்து கொள்ளாதவிதம் உணர்ச்சியற்று விடுவதில்லை. பல திறப்பட்ட உடற்கூறு மாற்றங்கள் அவன் உறங்கும்போது, விழிக்கும்படி செய்யாமலேயே அவனிடம் உண்டாகின்றன.

உடலுறுப்புக்கள் உணர்வற்றுக் கிடக்கும் ஒருவிதமான சமாதி நிலைதான் தூங்கும்போது ஏற்படுகிறது. மார்பின், குளோரபாரம் முதலியமயக்க மருந்துகள் உட்கொண்டதுபோலுள்ள நிலைக்கும் தூங்கும்போதுண்டாகும் நிலைக்கும் அதிகமான பேதங்கள் இல்லை. ஆனால் உறங்கும் விதத்தில் பல மாறுபாடுகள் உண்டு. அதுதான் நல்ல தூக்கம், அரைத் தூக்கம் என்றெல்லாம் சொல்லப்படுவது.

ஒன்பது மணிநேரம் உறக்கத்திற்காக படுத்துப் புரண்டு கொண்டிருப்பதைவிட ஒருமணி நேரம் நிம்மதியாகத் தூங்குவது நல்லது. இந்த விதமான தூக்கத்தைத்தான் நாம் பழக்கப் படுததிக்கொள்ளவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் உறக்கம் கொள்வது, குறிப்பிட்ட நேரத்தில் விழித்துக் கொள்வதும்தான் அறிவாளிகளின் வழக்கமாக இருக்கிறது. தூக்கம் வராமல் இருக்கும்போது, அதை வலிய வருவித்துக் கொள்வதற்காக வீண் சிரமம் கொள்வது கூடாது.

உறக்கத்தின் தன்மையை, தூங்கிய பிறகுண்டாகும் அதன் விளைவுகளைக் கொண்டு நிச்சயப்படுத்திவிடலாம். நோயாளி உறங்கியபிறகு எப்படி இருக்கிறான்? அவனுக்கு எத்தகைய உறக்கம் தேவை என்பதை இந்த முறை கொண்டுதான் டாக்டர்களும் நர்ஸ்களும் முடிவு செய்கிறார்கள். இப்படி அல்லாமல் உறங்கிக் கொண்டிருப்பவனின் உணர்வுகளைப் பரீக்ஷிப்பதன் மூலம் எடைபோட்டு (அவனுடைய தூக்கம் எத்தகையது என்பதை) நிர்ணயிப்பது தவறாகும். உதாரணமாக உறங்கிக் கொண்டிருக்கும் போது ஒருவனுடைய போர்வையைப் பிடித்திழுப்பதும், அவன் அதை உணராமல் இருந்தால், நல்ல தூக்கம் போல் இருக்கிறது என்று நாம் முடிவு கட்டுவதும் குழந்தை விளையாட்டாகும். அர்த்த ராத்திரிக்குப் பிறகு, அதாவது அசைவற்ற உலகச் சூழ்நிலையில் உணர்வற்ற நிலையில் உறக்கம் கொள்வதைத்தான் நிம்மதியான தூக்கம் என்கிறார்கள் உடற்கூறு வல்லுநர்கள்.

தூக்கத்திற்கு மாறுபட்ட பல நிலைகள் உண்டு. ஆறுமணிநேரம் தூங்கும் ஒருவனின் உறக்கத்தை ஒரேவிதமானது என்று கொள்ளுதல் மிகையாகும். தூங்கும் ஒருவன் சிறுகச் சிறுக ஆழ்ந்த நித்திரையிலீடுபட்டு தன் நிலையை மறந்து விடுகிறான். பிறகு சிறிது சிறிதாக தூங்குபவன் உணர்வுபெற்று விழிப்படைகிறான்.

கனவு, இராப்புலம்புதல் முதலியவையாலும் தூக்கத்தின் நிலை பாதிக்கப் படுகிறது. அடிக்கடி இவைகள் தோன்றுவதால் ஒருவன் எவ்விதமான தூக்கத்தை அனுபவித்தான் என்பதை சுலபமாக நிர்ணயித்துக் கொள்ளலாம். தூங்கும்போது இந்தவிதமான இடர்களுக்கு காரணம் என்ன என்பதை நன்றாக ஆராய்ந்து புரிந்து கொள்வதோடு அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.

கனவு, இராப்புலம்பல் முதலிய இடர்கள் அதிகப்படியாக உண்டாவதற்குக் காரணம் அஜீர்ணமாகும். இருதயநோய், வயிற்றிலே ஏற்படும் உபாதை இவைகள் மூலமாகத்தான் இந்த உபத்திரவங்கள் உண்டாகின்றன.

நாம் தூக்கத்திலாழ்ந்திருக்கும் போது என்னென்ன ஏற்படுகின்றன என்பதை நாமே உணரமுடியாமல் இருக்கிறோம். அந்தப் 'புதிரை' புரிந்து கொள்வதற்கு உறக்கம், விழிப்பு என்பவைகளை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும். அதோடு மனநிலை, உணர்வின் தன்மை இவைகளும் எந்தநிலையில்இருக்கின்றனஎன்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். உடலின் எல்லாவித உறுப்புகளும்

உறக்கத்தில் ஈடுபடுவதில்லை. சுவாச கோசமும் இருதயமும் ஓயாமல் இயங்குகின்றன. இதயத்தின் சில ரத்தக்குழாய்களும் வேலை செய்கின்றன. இதயம் உறங்கிவிடுவதில்லை. அதன் துடிப்பு நீடித்துக் கொண்டிருக்கும் போதே ஏனைய உறுப்புகள் இளைப்பாறுகின்றன. இதுதான் தூக்கத்தின் தன்மை.

மனிதர்களுள் தூக்கம் பலருக்கு பல விதமான தன்மைகளில் தேவையாக இருக்கிறது. குழந்தைகளுக்குத் தூக்கம், அவர்களுடைய வளர்ச்சிக்கு மிகவும் தேவையானதும் போஷணையானதுமான கால அளவாக இருக்கிறது. குழந்தைகளின் தூக்கம் காலக் குறைவாக இருக்கிறது.

சாதாரணமாக முதியவர்களுக்கு தூக்கம் குறைவுதான் என்று நாம் எண்ணுகிறோம். அது சில சமயம் சரியாகத் தோன்றினாலும் உண்மை நிலை அதுவல்ல. வயதானவர்களுக்கு முதுமையினாலும் வலிமை இழந்ததினாலும் அவர்களது தூங்கும் தன்மை மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. முதியோர்களை சரியான முறையில் பாதுகாக்க விரும்பும் நாம், அவர்களை அதிகநேரம் தூங்கும்படியான நிலைக்குத் தயாராக்கவேண்டும்.

அதிகநேரத் தூக்கம் குழந்தைகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் அவசியமாக இருப்பதால் நடுப்பகல் உணவுக்குப்பின் இவர்களை நன்றாக உறங்கச் செய்யவேண்டும்.

உறக்கத்தின் சிறந்த நிலை மூளைக்குக் கிடைக்கும் வேலையற்ற நிலை. இதிலே கோளாறு ஏற்பட்டால், மூளை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணவேண்டும். தூக்கம் உடல் வலிமைக்கும், தெளிவான அறிவிற்கும் நோயற்ற வாழ்விற்கும் அடிப்படையான ஓர் தேவை. ★

## பசுக்களே முதல் செல்வம்

மனிதன் பசுவின் மூலமாகவே ஏனைய உயிருள்ள ஜந்துக்களின் அருமையை உணர்கிறான்

இந்தியாவில் 400 கோடி மக்களுக்கு சுமார் 200 கோடி மாடுகள் உள்ளன. உலகிலுள்ள மாடுகளில் மூன்றில் ஒரு பங்கு நம் நாட்டிலுள்ளன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பூகோள ஆசிரியர் மார்க்கோ போலோ "பாரத மக்களுக்கு மாடுகளே முதல் செல்வம்" என்று கூறியிருக்கிறார்.

பசு, பாலையும் காளைகளையும், சிறந்த எருவினையும் தந்து, இறந்த பின்பும் தன் எலும்பையும தோலையும் தந்து உதவுகிறது.

"பசு சம்ரக்ஷணையின்றி புண்ணியஸ்தல யாத்திரை செய்வதாலும் இடைவிடாது மந்திரம் ஜபிப்பதாலும் ஒரு இந்துவின் பெருமை விளங்காது"

பசு சம்ரக்ஷணைக்காகவே மகமதியரும் இந்துக்களும் சகோதரர் போன்று வாழவேண்டும்; சட்டத்தால் விளையும் நன்மையை விட அன்பாலும் நட்பாலும் விளையும் நன்மை அதிகம்.

இந்தியாவின் செல்வம் பசு சம்ரக்ஷணையின் அடிப்படையில் தான் வளருகிறது.

—காந்திஜி.

# ஷெல்லியின் பொன்னகரப் புரட்சி

பி. கோதண்டராமன்

கவி தன் எண்ணங்களையும் உள்ளத்தெழும் உன்னத உணர்ச்சிகளையும் சுயேச்சையாகவும் ஆர்வமுடனும் இசை நயத்துடனும் வெளியிடும் சிறு காவியத்தை 'லிரிக்' என்பர். இந்த லிரிக் வகையில் ஆங்கிலக்கவி ஷெல்லி அற்புதமான பாடல்கள் பல பாடியுள்ளார். குழந்தையுள்ளம் படைத்தவரும் லட்சியக் கற்பனையுலகில் சஞ்சரித்தவரும் ஆன அவர், புரட்சியும் கொந்தளிப்புமாயிருந்த தம் காலத்திய வாலிபர்களின் உள்ளத்திலெழுந்த சுதந்திர ஆர்வங்களையும், தாம் கண்டு களித்து அனுபவித்த இயற்கைக் காட்சிகளையும் கட்டுக்கடங்காத விசித்திரக் கற்பனைகளையும் இசையும் அழகும் பொருந்தப் பாடியுள்ளார். அவர் உணர்ச்சிக்கவி மட்டுமல்லர்; சீர்திருத்தக்காரராகவும் விளங்கினார். வருங்காலத்தைப் பற்றிக் கனவுகள் பல கண்ட அவர் உலகைச் சீர்திருத்தவும், உட்டோப்பியா என வழங்கும் கற்பனையுலகைக் கொண்டு வரவும் முயன்றார். இருபத்தொன்பது ஆண்டு இந்நிலவுலகில் வாழ்ந்த அவர் ஆங்கிலக் கவிதைக்கு ஒரு புதிய அழகும் அமைப்பும் சுவையும் தந்து விட்டுச் சென்றார்.

ஷெல்லி கருத்துலகில் ஆழ்ந்து வாழ்ந்தவர். பிரெஞ்சுப்புரட்சி ஆரம்பித்த மூன்று ஆண்டுகளுக்குப்பின் பிறந்த அவர், அப்புரட்சியின் பின் விளைவுகளாலும் அது சிந்தனையுலகில் செய்த புரட்சியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டார். கொடுங் கோன்மையையும் அநீதிகளையும் எதிர்த்துச் செய்யப்பட்ட அப்புரட்சி பல கொடுமைகளையும் அநீதிகளையும் செய்து சர்வாதிகாரத்தில் முடிந்தது. நெப்போலியனின் வீழ்ச்சிக்குபபின் மக்கள் வறுமையிலும் பலவகைத் துன்பங்களிலும் ஆழ்ந்து அல்லற்பட்டனர். அறிஞர்கள் சமூக நிலையையும், மக்களின் துன்பங்களுக்கான காரணங்களையும் ஆராய்வதில் முனைந்தனர். சமூகமும் அதன் ஸ்தாபன அமைப்புக்களும் சம்பிரதாயம், சட்டம், ஒழுங்கு, சமயம் என்ற பெயரில் இரக்கமற்று பலவிதக் கொடுமைகளையும் அநீதிகளையும் இழைத்து வந்ததைக் கண்டு மனங் கொதித்தனர். உணர்ச்சி மிகுந்த ஷெல்லி உளுத்துச் செல்லரித்துப் போன சமூக அரசியல் ஸ்தாபனங்களையும் சமயம் வளர்த்த குருட்டு நம்பிக்கைகளையும் எதிர்த்தார். சின்னஞ்சிறு வயதிலிருந்தே அவர் இவ்வெதிர்ப்பைக் காட்டி வந்தார். ஈட்டன் கல்லூரியில் மாணவராயிருந்தபோது மூத்த மாணவர்க்கு மாமூல்படி கடுமையாக ஊழியஞ் செய்யும் சம்பிரதாய முறையை எதிர்த்தார். அவ்வயதிலிருந்தே காட்வின் என்னும்



ஷெல்லி

அறிஞர் எழுதிய "அரசியல் நீதி" என்னும் நூலைப்படித்து அதில் விளக்கப்பட்ட கருத்துக்கள், கொள்கைகளின்படி ஒழுக ஆரம்பித்தார். ஆக்ஸ்போர்டு கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது "நிரீசுவர வாதத்தின் அவசியம்" என்னும் துண்டுப் பிரசுரத்தை எழுதி வெளியிட்டார். கலாசாலை அதிகாரிகள் வெருண்டு அவரை சர்வகலாசாலையினின்று வெளியேற்றினர். அர்த்தமற்ற சமூக சம்பிரதாயங்களையும், சிந்தனைக்கு வேலிபோட்ட விதிகளையும் எதிர்த்து நின்றார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம் என்னும் கொள்கைகள் அடையத்தக்க லட்சியங்களே எனக்கொண்டு, மனித மனத்தின் வளர்ச்சியைத் தடை செய்த யாவற்றையும் பலமாக எதிர்த்தார். அரசாங்கத்தையும் சமயத்தையும், மன்னர்களையும் பூசாரிகளையும் அழுத்தமாகக் கண்டித்தார். தம் பத்தொன்பதாம் வயதில் ஐரிஷ் விடுதலை இயக்கத்தை ஆதரித்துத் துண்டுப் பிரசுரமொன்றை வழங்கினர். செல்வக்குடும்பத்தில் பிறந்த அவர் தம் சமூக அடிப்படைகளையே இங்ஙனம் தாக்கியதற்காகத் தம் பெற்றோர்களின் ஆதரவையும் இழக்க நேர்ந்தது.

ஷெல்லியின் சமூக அரசியற் கொள்கைகளையும், ஏன் அவர் சிந்தனையையுமே, உருப்படுத்திய காட்வின் எழுதிய 'அரசியல் நீதி', புரட்சி செய்த ஒரு நூலென்றே சொல்லலாம். அந்நூல் சமூக நிலையையும் சமூகத்தின் அடிப்படைகளையும் அடியோடு ஆராய்ந்து புரட்சிமயமான சீர்திருத்தங்களைப் பிரசாரம் செய்தது. அதில் காட்வின், சமூகம் ஏற்றுவித்த சம்பிரதாயங்கள் கொள்கைகள் சித்தாந்தங்கள், ஸ்தாபன அமைப்புகள் ஆகிய யாவற்றையும் பலமாகத் தாக்கினர். தனிச் சொத்துரிமையைத் தாக்குகையில் ஒருவன் மற்றொருவனின் உழைப்பினல் உற்பத்தியாவதின்மீது ஆதிக்கங்கொண்டு அதைத் தன்னிஷ்டப்படி விநியோகிப்பது ஒழுக்கமற்றதென்றார். மக்கள் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருந்தாலன்றி அதை ஒருவன்மட்டும் அனுபவிப்பது அதருமம் என்றார். ஒரு சமூகத்தில் இயற்கை அளிப்பதை அனைவரும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொண்டால் எவனும் மற்றவனுக்குப் பகைவனகத் தேவையில்லை என்றும், லட்சிய சமுதாயத்தில் ஒருவன் தனக்குத் தேவையானதை உற்பத்தி செய்ய அரைமணி நேரம் உழைத்தால் போதுமென்றும் பறையறைந்தார். அவர் சமூகம் பெரிதும் மதிக்கும் திருமண முறையையும் தாக்கினர். மணமக்களை ஒருவரையொருவருக்குக் கட்டுப்படுத்திவருவது ஒரு தீமையே என்றார். எவ்விடத்திலும் பலவந்தமோ வலுக்கட்டாயமோ கூடாதென்றார். சமூகத்தின் மனச்சரிவுகள், விருப்பு வெறுப்புகள், சம்பிரதாயங்கள் இவையாவும் சட்டத்தின் சக்திபெற்றுத் தனி மனிதனின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாக, அமுக்குவான் 'பிசாசு போன்று சகிக்க முடியாதவையாக உள்ளன என்றார். சமூகத்திலும் சமயத்திலும் இருந்து வருகிறது. மூடநம்பிக்கைகளும், மன்னர் பூசாரிகளின் ஆதிக்கமும் தனி மனிதரின் சுதந்திரங்களைப் பறிக்கின்றன ஆதலால், இவை மானிட அபிவிருத்தியைத் தடைசெய்யும் பகைச் சக்திகளே என்றார், அவர் எத்தகைய பலாத்காரத்தையும் எதிர்த்தார், மானிடரின் மனத்தை எவ்வித அடிமைத்தனத்தினின்றும் விடுவிப்பதே தம் வாழ்க்கையின் குறிக்கோள் என்றார். சுதந்திரப் பிரியரான ஷெல்லியின்மீது இக்கருத்துக்கள் இளவயதிலிருந்தே செல்வாக்கு பெற்றன. மானிடன் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து பூரணத்துவம் அடைய முடியும் என்ற நம்பிக்கை வலுப்பட்டது. அன்பே இறுதியில் வெல்லும், அஹிம்சையே விழுப்பமுடையது என்ற நம்பிக்கை திடப்பட்டது. எவ்வித பலாத்காரமும், சுயேச்சையைத் தடுக்கும் எத்தகைய தடையும் ஒழியவேண்டுமென்றும். மானிட சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சமூக ஸ்தாபனங்கள் மாற்றியமைக்கப் படவேண்டுமென்றும், அவை மாறினல்தான் மானிடனும் மாற முடியுமென்றும் அவர் கருதினர். காட்வினின் கொள்கைகள் அவர் உள்ளத்தில் ஆக்கம் பெற்று கவிதை வடிவில் மெல்ல மெல்லப் பரிணமிக்கலாயின. அவர் எழுதிய கவிதைகளில் சீர்திருத்தக் கருத்துக்களும், வருங்காலத்தைப்

பற்றிய கனவுகளும் உட்டோப்பியா வைப் பற்றிய எண்ணங்களும் மிளிர் கின்றன.

ஷெல்லியின் முதல் முக்கியமான கவிதை 'குவீன் மாப்' என்பது. இது 1813–ல் வெளிவந்தது ஷெல்லிதம் ஞானகுருவான காட்வினைச் சந்தித்த ஓராண்டுக்குள் வெளிவந்த இதில் காட்வினின் செல்வாக்கைக் காண் கிறோம். அடுத்த முக்கியமான கவிதை யாகிய 'அலாஸ்டர்' 1816-ல் வெளி வந்தது. 1817–ல் 'லயோனும் சித்ஞ வும்—அல்லது பொன்னகரப் புரட்சி' என்ற தலைப்பில் பனிரண்டு காண் டங்கள் அடங்கிய காவியமொன்று வெளிவந்தது. 1818–ல் அது 'இஸ் லாமின் புரட்சி' என்ற தலைப்பில் சில திருத்தங்களுடன் வெளியிடப் பட்டது. அது வெளிவந்த சமயம் ஷெல்லியின் குடும்பத்தில் பல தொல்லைகள் ஏற்பட்டிருந்தன. அவ னுடைய முதல் மனைவி ஹாரியட் தற்கொலை புரிந்து கொண்டாள். இரண்டாம் மனைவி மேரியின் தந்தை யும் தம் குருவுமான காட்வினுடன் மனஸ்தாபமேற்பட்டது. அந்த நிலை யிலும் ஷெல்லியின் மனோதிடம் சிறிதும் தளரவில்லை. பல கவலை களுக்கிடையே, பெரிய காவிய மொன்று இயற்ற வேண்டும் என்ற பேராவல் இருந்து வந்தது. அதை ஆறு மாதத்திற்குள் எழுதி 'பொன் னகரப் புரட்சி' என்ற தலைப்பு கொடுத்து வெளியிட்டார். தேம்ஸ் நதிக்கரையில் கண்ட அழகிய ஆங் கிலேய இயற்கைக் காட்சிகளையெல் லாம் அந்நூலில் புகுத்தினர். இன் றைய சமூகம் வீழ்ச்சியுற்று சமத்து வம், சகோதரத்துவம், சுதந்திரம் என் பவற்றை அடிப்படையாகக் கொண்டு உதயமாகப்போகும் புதுத் துலகை அதில் பாடினர். வாசகரின் உள் ளத்தில் சுதந்திரம், நீதி என்னும் கொள்கைகள்பால் ஆர்வமுண்டாக்கு வதும் நல்லதில் நம்பிக்கை எழுப்பு வதுமே தம் நோக்கமென அதன் முன்னுரையில் கூறினர். சட்டம், சம்பிரதாயம் என்னும் பிடியிலிருந்து விடுவித்து மக்கட் குலத்தை உயர்த் திப் புத்துயிரளிக்கும் தத்துவக் கன வாகவே அது காணப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சி பற்றிக் கவியின் உள்ளத்திலெழுந்த காட்சியையும், அப்புரட்சியின் பின் விளைவுகளையும் கூறுவதும், கத்தியின்றி, ரத்தமின்றி நடக்கும் புரட்சியொன்றைப் பிரசாரஞ் செய்வதுமான இக்காவியம் சில விடங்களில் கட்டற்ற கற்பனை மொழி யாலும் சங்கேத மொழிகளாலும் தெளிவற்றிருப்பினும், இசைநயம், மொழிநயம், கருத்தழகு ஆகியவற்று டன் விளங்குகிறது.

சிறு வயது முதற்கொண்டே வளர்ந்து, வயது வந்ததும் காதலர்க ளாக மாறிய லயோனும் சித்னுவும் தம் நாட்டை விடுதலை யடையச் செய்யப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தனர்.

லயோனும் அவனுடன் வாழ்ந்த சித்னு என்னும் சிறுமியும் குழந்தைப் பருவம் முதற்கொண்டே சுதந்திர உணர்ச்சி கொண்டிருந்தனர். முற் காலத்தில் சுதந்திர நாடாயிருந்து கலையொளி வீசிய கிரீஸ் இன்று அடி மைப்பட்டு அவல நிலையிலிருந்தது கண்டு அவர்கள் கவலையடைவ துண்டு. அவர்கள் தம் நாட்டை விடுவிப்பது பிறவி வேலையெனக் கொண்டனர். அங்கங்கே பஞ்ச மும் நோயும் களிநடனம் புரிந்தன. லயோன் மக்களைத் தட்டியெழுப்பவும் கொடுங்கோல் பூட்டிய அடிமைத் தளை யினின்று விடுதலையடைவதற்கான சுதந்திர ஆர்வம் பொங்கியெழச் செய்யவும் எண்ணங் கொண்டான். சிறுமி சித்னுவும் அதற்கு உடன்பட் டாள். காதலர் இருவரும் தம் நாட் டில் சுதந்திர சுவேஷத்தைப் பிர சாரஞ் செய்யத் தலைப்பட்டனர். லயோன் பொன்னகரைச் சுற்றியும், சித்னு நகருக்குள்ளேயும் வேலை செய்வதென ஏற்பாடாயிற்று. அவர் கள் கத்தி எடுத்துப் போர் செய்யக் கருதவில்லை. சுதந்திர ஆர்வத்தை எழுப்பும் சொற்கள் கொடுங்கோல ரின் சிம்மாசனத்தைச் சிதற வைக்கும் ஆற்றலுடையன என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். கடலில் மிதந்த கப்பலில் நின்று அவர்கள் சுதந்திரம் எனும் சொல்லைச் சொன்னதும் சுற்றி யிருந்த கடற்கரைப் பிரதேசங்கள் யாவும் அச்சொல்லின் தொனியினு லேயே உணர்ச்சி பெற்றெழுந்து மெய்சிலிர்த்தன. உள்ளத்தைத் தொடும் உருக்கமான சொற்பொழிவு ஒன்றினுலேயே சித்னு, அடிமைகளை யும் பண்டங்களையும் பட்டாளத்திற்கு ஏற்றிச் சென்ற கப்பலோட்டிகளின்

மனம் மாறச் செய்தாள். அவர்களிடையே புரட்சியில் நம்பிக்கை ஏற்படுத்தச் செய்து, 'எழுங்கள்! பணம் தன் சக்தியையும் மன்னர் தம் அதிகாரத்தையும் இழப்பது உறுதி! மனிதர் படும் துன்பங்கள் யாவற்றிற்கும் காரணம் இயற்கையன்று. மன்னரும் மன்னரை ஆதரித்த மத ஸ்தாபனங்களுமே காரணமென்ருள். அவள் மொழி வேலை செய்தது. ஆயினும், புரட்சி தோல்வியுறுகிறது. ஏனெனில் புரட்சியின் பலன் நீடித்திருக்க மனம் மாறியவர்களைக் கட்டுப்படுத்தி ஒழுங்காயமைந்த சங்கமாக ஆக்க வேண்டியிருந்தது. பழைய தீங்குகள் மீண்டும் தலைகாட்டுகின்றன. சர்வாதிகாரம் தலைகாட்டிற்று. கொடுங்கோலன் மீண்டும் தோன்றிக் குடிகளை வாட்டினான். அவர்களின் குடில்களுக்குத் தீவைத்தான். சித்ரு மன்னனின் அந்தப்புரத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டாள். லயோன் சமுத்திரத்தைப் பார்த்த பிரம்மாண்டமான ஸ்தூபமொன்றில் சிறைப்படுத்தப்பட்டான். உணவளிக்கப்படாமல் வாட்டப்பட்டான். நான்கு நாட்கள் சென்றன. லயோன் பைத்தியம் பிடித்தவன் போலானான். அது சமயம் முதுபெருந் துறவி யொருவர் அவனை விடுவித்துத் தம் பர்ணசாலைக்கு அழைத்துச் சென்ருர். நடந்த செய்திகள் யாவற்றையும் பின்னர் அவனுக்கு எடுத்துச் சொன்ஞர். பொன்னகரில் அழகிய நங்கை யொருத்தி தம் சொற்பொழிவுகளால் மக்களைத் தட்டி எழுப்பியதையும் தேசபக்தர் இரவும் பகலுமாகக் கொடுங்கோலனின் அரண்மனையைச் சூழ்ந்து முற்றுகையிட்டதையும் அறிந்து கொண்டான். துறவி அவனை வீடு தலை வீரனெனப் போற்றிப் பொன்னகர் அனுப்பினர், பொன்னகரில் தேசபக்தர் பத்தாயிரம் பேர்களைக் கொன்ற கொடுங்கோலனின் படைவீரர் லயோனின் விருப்பத்திற்கிணங்க மன்னனின் சேவையிலிருந்து விலகி மக்கள் கட்சியில் சேர்ந்தனர். இம் மங்கலச் செய்தியால் மக்களிடையே எங்கும் குதூகலமேற்பட்டது. லயோனும் சித்ருவும் ரட்சகர் எனப் போற்றப்பட்டனர்.

விரைவில் கொடுங்கோலன் பிடிபட்டான். ஆனால் அஹிம்சை வீரனை லயோனின் ஆணைக்கிணங்க அவன் தப்பவிடப்பட்டான். மன்னன் மக்களின் எழுச்சியை அடக்க அயல்மன்னரின் உதவியை நாடினன். தேசபக்தர் பலர் அயலவரின் வாளுக்குப் பலியாயினர். லயோன் கடைசிவரையில் தீவிரமாகப் போராடினன். ஒரு சமயம், உயிரைக் கொள்ளைகொண்டு போகவல்ல பலத்த அடி அவனுக்கு விழுந்தது. அப்போது சித்ரு, பிரமாண்டமான டார்ட்டாரியக் குதிரையொன்றின் மீதேறி வந்து அவன் பகைவரைத் தாக்கி அவனை விடுவித்துக் கடலைப் பார்த்த பாழடைந்த கோட்டை யொன்றிற்குத் தூக்கிச் சென்ருள். அங்கே காதலர் இருவரும் திருமணம் புரிந்தனர். அதுசமயம் தான் கொடுங்கோலனின் வசமிருந்த போது குகையொன்றில் சிறைப்பட்டதையும், பெண் குழந்தையொன்று ஈன்றதையும். அக்குழந்தை கொடுங்கோலனின் ஆட்களால் தூக்கிச் செல்லப்பட்டதையும், பின்னர் பூகம்பத்தால் குகை பிளந்து தான் விடுதலையடைந்ததையும் அவள் அவனுக்கு விவரமாகச் சொன்னாள். புரட்சியின்பால் நம்பிக்கை சிறிது குலைந்ததாயினும், விடுதலையின் வித்து விதைக்கப்பட்டு விட்டதால், இறுதி வெற்றி நிச்சயமெனக் கருதி அவர்கள் திருப்தியடைந்தனர்.

இந்நிலையில் கொடுங்கோலன் சும்மாயிருக்கவில்லை. மக்களை மேலும் வேட்டையாட விரும்பினன். அயல் மன்னவர் பலரின் உதவி கொண்டு மக்களை மீண்டும் அடிமைப்படுத்தக் கருதினன். அயல் நாட்டுப் படையினர் திரள் திரளாக வந்து நாட்டைச் சூறையாடினர். கொலை, தீ, கடுஞ்சறை இவை கோரத்தாண்டவம் புரிந்தன. ஏழாவது நாள் அமைதி யேற்பட்டது. ஆனல் வயல்களும் கிராமங்களும் பாழடைந்துபாலைவனம் போலாய் விட்டன. எங்கும் பிண நாற்றம் வீசியது. பசி, பீதி, கொள்ளை, நோய், பஞ்சம் இவை தலைகாட்டின. உண்ண உணவில்லை, பருக நீரில்லை. வானம் பொழிந்தால்தானே!

அந்த நிலையில் ஐபீரியன் பூசாரி யொருவன் வந்து, தெய்வத்தின் சினத்தைத் தணிக்க லயோனையும் சித்ருவையும் உயிருடன் தீயிட்டுச் சடலத்தைத் தேவர்களுக்குச் சமர்ப்

பிக்க வேண்டுமென்ருன். இதை எதிர்பார்த்த லயோன் தஞ்சமடைந்து சித்னுவுக்கு மட்டும் உயிர்ப்பிச்சை யளிக்க வேண்டுமென்றும் அவளை சுதந்திர நாடான அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். கொடுங்கோலனும் பூசாரிகளும் ஒப்பினர்.

ஆனல் சித்னு காதலனை விட்டுப் பிரிய மனமில்லாமல், தானும் சரண டைந்தாள். விடுதலை வீரர் இருவ ரும் பிரமாண்டமான சிதையொன் றில் ஏற்றப்பட்டனர். ஆவி பிரிந்த காதலர் விண்ணுலகு ஏகினர்.

கதையின் போக்குக்கு சரித்திர ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் கதையின் உட்கருத்தை நோகின், அது மக்கட் புரட்சியின் பால் நம்பிக்கையூட்டும் ஒரு காவிய மாகவே திகழ்கின்றது. மக்களின் விடுதலைப் போராட்டத்திலும் லட்சிய உலகிலும் அக்கறை கொண்ட ஷெல்லி இக்காவியத்தில், மக்கட் குலம் பரிபக்குவமும் பூரணத்துவம் அடைய முடியும் என்பதையும், அராஜகமே சிறந்த அரசியல் நிலையென்றும், எதிர்த்துத் தாக்காமல் அஹிம்சையுடன் ஒழுகுவதே சரி யான வழியென்றும், அகில உயிர் கள்பாலும் அன்பும் தயையும் காட் டுவதே உயரிய கொள்கை யென் றும், துன்பமும் துயரும் மானிடத் தன்மைக்கு விரோதமான, பலாத்கார மான சக்திகளிடமிருந்தே வருவன வென்றும் கவி ஷெல்லி உபதேசிக் கிருர். இக்காவியத்தையும் பின்னர் வெளிவந்த 'கட்டகன்ற புரொமீதஸ்' என்ற காவியத்தையும் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானல் ஷெல்லியின் குணப்போக்கையும் வாழ்க்கைபற்றி அவர் கொண்ட கருத் துக்களையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். இத்திறவு கோலின்றி இக்காவியங்கள் பொரு ளற்றனவாகவே இருக்கும்.

இப்புரட்சிக் காவியத்தின் சுவை இதில் காட்வினின் கருத்துக்களும் மனைவி மேரியின் கருத்துக்களும் கலந்து பரிணமிப்பதிலேயே உள் ளது. பெண் அடிமைப்பட்டிருக்கை யில் மனிதன் சுதந்திரமாயிருக்க முடியுமாவென மேரி ஓரிடத்தில் கேட்கிருள். பொன்னகரப் புரட்சி யில் பெண்களுக்குத் தலைமை வகித்த சித்னு இதே கேள்வியைக் கேட்டது போல வர்ணிக்கப்படுகிருள். லயோன், புரட்சிவீரர் வீழ்த்திய கொடுங்கோலனை அவர்கள் கொல்ல விருந்தபோது, அவன்பால் தயையும் கருணையும், சகோதர பாவத்தையும் காட்ட வேண்டுமென உபதேசிக் கிருன். பின்னர் அக்கொடுங்கோலனை விடுவித்து மன்னித்து விடுகிருன். தன்னைக கட்டவந்த அடிமைகள் வெட்கமடையச் செய்கிருள் சித்னு. அவளது தருமத்தின், தீரத்தின் அழகை யுணர்ந்த அவர்கள் அழு கின்றனர். இறுதியில் கொடுங்கோல் மன்னனின் ஆட்கள் விடுதலை வீரர் களைத் தாக்கியபோது அவர்கள் இஷ் டப்படியே பலியாக வீரர்கள் இணங்கு கின்றனர். லயோன் சுயேச்சையாக ஈமக்கட்டை ஏறுகிருன். சுதந்திர மாக வாழ அனுமதிக்கப்பட்ட சித்னு வும் கொழுந்து விட்டெரியும் ஜ்வாலை யில் விழுந்து உயிர்த்தியாகம் செய் கிருள். மக்கட்குலம் ஈடேறத் தியா கம் இன்றியமையாததென்பது வலி யுறுத்தப்படுகின்றது. இந்த லயோ னும் சித்னுவும் வேறு யாருமில்லை; ஷெல்லியும் மேரியுமே.

ஷெல்லி புரட்சிவீரன்; சுதந்திரப் பிரியன்; அஹிம்சையாளன்; அன் பாளன்; மானிட அபிவிருத்தியில் பெருநம்பிக்கை கொண்ட தீர்க்க தரிசி. ★

### ஆங்கிலத்தில் கீதை!

சமஸ்கிருதம் பிரிட்டனில் சிறந்த வளர்ச்சி பெற்று வருகி றது. 18-ம் நூற்றுண்டின் இறுதி யில் அதன் பெருமையை ஆங் கிலேயர் உணர்ந்தனர். முதன் முதலில் சமஸ்கிருதம் கற்ற ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம் பெனியிலிருந்த வில்லியம் ஜோன்ஸ். இவர்தான் கீதையை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.




# தமிழ் நாட்டில் புயல் – பழைய நினைவுகள்

தமிழ் நாட்டில் புயலினல் அடிக்கடி பாதிக்கப்படும் பிரதேசம் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த கடற்கரையோரப் பகுதிகளாகும். என்ன காரணத்தினலோ தஞ்சை ஜில்லாவில் வீசிய புயல்கள் எல்லாம் பெரும்பாலும் நவம்பர் மாதத்திலேயே வீசியிருக்கின்றன என்பது கும்பினியார் கால ரிகார்டுகள், கலெக்டர்களின் ரிப்போர்ட்டுகள் இவைகளிலிருந்து தெரியவருகிறது.

மூன்று வருஷங்களுக்கு முன் இதே நவம்பர் 30 வ தான் தஞ்சை ஜில்லாவில் புயல் வீசி பெரும் சேதத்தை விளைவித்தது. இப்போது வீசிய புயலும் நவம்பர் 30 வ தான் ஆரம்பமாகியது என்பது நினைவிருக்கும்.

முன்பெல்லாம் புயலுடன் வெள்ளக் கொடுமையும் அதிகமாக இருந்தது. இப்போது மேட்டூர் அணை இருப்பது காரணமாக வெள்ள ஆபத்து குறைந்துள்ளது.

* 1681-ல் நவம்பர் 10வ ஆரம்பித்த புயல் தஞ்சை ஜில்லா கடற்கரை யோரங்களை கடுமையாகத் தாக்கியது. கடலும் பொங்கியது. நாகபட்டினத்திலுள்ளவர்கள் புயலின் கொடுமை தாங்காமல் ஒரு கோயிலுள் அடைக்கலம் புகுந்தார்கள். கோயில் இடிந்து விழுந்ததால் அவ்வளவு பேரும் இடிபாடுகளில் சிக்கி மாண்டனர். இப்புயல் 3 நாட்கள் இரவும் பகலும் விடாமல் அடித்தது.

* 1871 நவம்பர் 6வ கடும்புயல் வீசியது. அப்போது கும்பகோணத்தில் 10 அங்குல மழைபெய்தது. அதன்பின் கும்பகோணத்தில் பெரு மழை பெய்தது இப்போதுதான்.

* 1880 நவம்பரில் வீசிய புயலால் தஞ்சை கடற்கரைப் பிரதேசத்திற்கு கடும் சேதம் ஏற்பட்டது.

* 1884 நவம்பர் 30வ ஆரம்பித்து பெய்த கடும் மழையினல் கிராமங்கள் தண்ணீரில் மூழ்கி ஏராளமான நாசம் விளைந்தது.

* 1891 நவம்பரில் கடும் மழை பெய்த காரணமாக தஞ்சை நகரிலிருந்து கடல் வரையில் சுமார் 50 மைல்களுக்கு ஒரே வெள்ளக் காடாகி இருந்தது.

* 1897 நவம்பர் 12வ பெரும்புயல் வீசியது.

* 1903 நவம்பரில் சென்னை தாங்கம்பாடி ரஸ்தாவிலுள்ள கொள்ளிடம் பாலம் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டது.

சென்ற 65 வருஷங்களில் (1891-1955) 17 பெரும்புயல்கள் சென்னை ராஜ்ய கிழக்குக் கடற்கரையில் வீசியுள்ளன. இவைகளில் 7 (1930, 1931, 1934, 1935, 1939, 1952, 1955) நாகப்பட்டினம் அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வீசியுள்ளன. மற்ற 10 புயல்கள் நாகப்பட்டினத்திற்கு வடக்கில் ஏற்பட்டதாகும்.

இந்த ஏழு புயல்களில் 1930, 1935, 1939, 1952, 1955 இவ்வருஷங்களில் வீசியவை மிககடுமையானவையாகும்.

இப்போதுள்ள சேதத்தைப்போல மிகப்பெரும் அளவு கடும்சேதம் ஏற்பட்டது 1930-ல் தான். இதற்குமுன் 40 வருஷங்களில் இம்மாதிரி கடும்

புயல் அடித்ததில்லை. 1955-ம் வருஷப் புயல்போல இனி புயல் தோன்ருத நிலைமையை கடவுள்தான் உண்டாக்கவேண்டும்.

## புயல் இழைத்த கொடுமை சில பரிதாபக் காட்சிகள்.

காவிரிப்பூம் பட்டினத்தை கடல் கொண்டுவிட்டது என்று நாம் படித்திருக்கிறேம். அது உண்மையில் நடந்திருக்கக்கூடியதுதான் என்பதை சென்ற மாதம் ஆரம்பத்தில் ஏற்பட்ட புயலும் கடல் கொந்தளிப்பையும் பார்த்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். கடல் நீர் கொந்தளித்து வசிக்கும் பகுதிகளில் புகுந்தது காரணமாக வீடுவாசல்களையும் உற்ருர் உறவினரையும் இழந்து நிர்கதியானவர்கள் எவ்வளவோ பேர்.

'புயலில் அகப்பட்ட தோணி' என்பார்களே அதுபோல மக்கள் சீர்குலைக்கப்பட்டனர். எங்கும் நீர் பிரவாகம். இத்தகைய பரிதாபக் காட்சியை வ. வே. சு. அய்யர் கண்டிருக்க வேண்டும். அவர் எழுதியதை அப்படியே இங்கு தருகிருேம்.

'ஏ பிரகிருதி தேவி! உன் குழந்தைகள் கதறுகிருர்களே, தவிக்கிருர்களே உனக்கு இரக்கமில்லையா? குழந்தைகளை மார்போடு மார்பாக அணைத்துக் கொண்டு பொந்துகளில் ஒடிப் பதுங்க முயற்சிக்கும் ஏழைத் தாயாருக்கு மனமிரங்கு. மணியையும் பொன்னையும் புறக்கணித்து, அன்னை தந்தையரை கூடைகளில் தூக்கிவரும் செல்வப் புதல்வர்களுக்கு இரங்கு. புது மணம் புரிந்து கொண்டு ஒருவரை ஒருவர் பிரிய முடியாமல் தத்தளிக்கும் காதலர்களுக்கு இரங்கு. மாடு கன்றுகள், குழந்தைகள், கிழவர்கள், பண்டிதர்கள், பாமரர்கள், காதலர் காதலிகள் எல்லாரையும் பாராபட்சமின்றி சீர்குலையச் செய்து விட்டாள் சிறிய இயற்கை அன்னை.'

வ. வே. சு. அய்யர் எழுதியது இப்போது புயலால் அவதிப்படடவர்களைப் பற்றி எழுதுவதற்கு மிகவும்



புயலினல் சீர்குலைந்த ஒரு வீடு—இம்மாதிரி சின்னபின்னமான வீடுகள் எவ்வளவோ!

பொருந்தும். கடல் நீர் எட்டு அடி ஆழத்திற்கு நகருள் புகுந்து தேங்கி நின்றுவிட்டது. கடலிலேயே பழகி மீன் பிடிக்கும் தொழில் செய்பவர்களுக்கும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது தவிக்க வேண்டி நேரிட்டது என்றால் சாதாரணமாக கடல் தண்ணீர் வழிக்கே போகாதவர்களின் நிலைமை எப்படி இருந்திருக்கும்? அப்படி நீந்திக் கரை சேர முயன்றவர்களையும் கோரைப்புற்கள் சுற்றி மேலெழும்ப முடியாதபடி செய்து விட்டதால் அநேகர் யமனுக்கிரையாக நேரிட்டது. ஆயிரக்கணக்கானபேர் உயிரிழந்து போயினர். லட்சக்கணக்கான பேர் வீடிழந்து ஆடையும் இழந்து தவிக்கிறார்கள். சாதாரணமாகக்காற்றுக்கூரைகள் பறப்பதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஓடுகளும் தகரகூரைகளும் கடும்காற்றில் பறந்து விழுகிறது என்றால் சூறாவளி எத்தன்மை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பவர்கள் கிடைத்ததை பிடித்துக் கொண்டு நீந்தி அகப்படும் இடத்தில் ஒட்டிக்கொள்ள முயன்றது மிகப் பரிதாபமான காட்சி.

ஒரு குடிசை தெப்பமாக மிதந்து வருகிறது. அதில் கைக் குழந்தையுடன் ஒரு யுவதி பாதியில் மூழ்கியவளாக உட்கார்ந்து இருக்கிறாள். நாழிக்குநாழி குடிசை நீரில் அமிழ்ந்து வருகிறது. பெரிய பெரிய கட்டிடங்களே தவிடுபொடியாயிற்றென்றால் குடிசைகள் எம்மாத்திரம்? தென்னந் தோப்புகள் வாழைக் கொல்லைகள் எல்லாம் சர்வநாசமாகியுள்ளன. நிவாரண வேலைகள் ஜரூராக நடைபெறுகின்றனவென்றாலும் பழைய நிலைமை ஏற்பட வெகுகாலம் பிடிக்கும்.

வேதாரண்யம் மக்கள்தான் புயலின் சீற்றத்தால் சகிக்க முடியாத கஷ்டத்திற்குள்ளானவர்கள். வட கட்டளை, ஆறுமுகக் கட்டளை, வெட்டியக்காடு, அகஸ்தியம்பள்ளி, தீபக்காடு, மணியந்தீவு, தோப்புத்துறை. கோடியக்கரை ஆகிய சிற்றூர்கள் கடல் ஓரத்தில் உள்ளவை பன்னிரண்டடி உயரம் கடல் நீர் புயல் வேகத்துடன் இக்கிராமங்களைத் தாக்கியதால் இன்று இந்த கிராமங்கள் இருந்த இடமே தெரியவில்லை. ஆயிரம்பேர் இறந்து விட்டனர்.

பல சவுக்குத் தோப்புகளுக்குள்ளிருந்து இன்னும் பிணங்களின் துர்நாற்றம் வந்துகொண்டிருக்கிறது. கடல் தண்ணீர் புகுந்ததால் வீடுகள் நாசமடைந்தது மட்டுமல்ல, பயிர்களும் அழுகிவிட்டன.

சென்னை ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி சுத்தாநந்தாவும் சுவாமி சர்வக்ஞானந்தாவும் முறையே வேதாரண்யத்திற்கும் பரமக்குடிக்கும் சென்று நிவாரண வேலையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் உணவு, உடை இவைகளை விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர். இடுப்பளவு ஆழமான தண்ணீரில் நடந்து சென்றும், அதிக ஆழமான இடங்களை கட்டுமரங்களில் கடந்து சென்றும் இவர்களும் இவர்கள் கோஷ்டியினரும் உதவி வருகின்றனர். ★

புயல் இழைத்த கொடுமையை எழுத்தால் வர்ணிப்பது இயலாத காரியம். அந்த கோரக்காட்சியைப் படங்களின் மூலம் வெளியிடுவதைவிட. நேரில் சென்று பார்த்தால் புயலுக்கு பலியான குடும்பங்களின் அவலநிலை நமக்கு நன்கு தெரியும்.

'தென்னாட்டின நெற்களஞ்சியம்' என்றழைக்கப்பட்டு வரும் தஞ்சை ஜில்லா வளம் மிகுந்த தன் பகுதிகளை யெல்லாம் இந்தக் கடும் புயலுக்கிரையாகக் கொடுத்து விட்டுத் தவிக்கும் நிலை கண்டு தமிழகத்தின் மற்ற ஜில்லாக்கள் உதவ முன்வர வேண்டும் ராமனாதபுரத்தையும் புயல்விட்டு வைக்காமல் தன் கோரதாண்டவத்திற்கு இடமாக்கிக்கொண்டு விட்டதை நாம் மறந்துவிடக் கூடாது!

# ★ ரசவாதம்! ★

(இதற்கு மூலிகைகள் தேவையில்லை. மூளை தான் வேண்டும்!)

தமிழ் ஒரு சாகரம் போன்றது என்றால் அதில் வந்து சங்கமிக்கும் ஜீவ நதிகளுக்கு உபமானமாகத் தமிழ் வார்த்தைகளைச் சொல்லலாம். தமிழ் வார்த்தைகளை ஒரு ஜீவநதிக்கு ஒப்பிட்டோமானால், அந்த ஜீவ நதியை வற்றவிடாது வந்து சேருகிற சிற்றோடைகளுக்கு தமிழ் எழுத்துக்களைக் குறிப்பிடலாம். இந்த ஒருமைப்பாடு எவ்வளவு பாந்தமாகப் பொருந்துகிறது என்பதற்கு கீழே தரப்பட்ட சொற்களிலே எத்தனை வித அர்த்த பேதங்களைக் காண்கிறோம் என்பதே போதுமானது.

பத்து வார்த்தைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் முதல் வார்த்தை 'ரசவாதம்' என்பதாகும். இந்த வார்த்தையில் ர-ச-வ-ா-த-ம் ஆகிய ஆறு எழுத்துக்கள் இருக்கின்றன. இந்த ஆறு எழுத்துக்களை எப்படி எப்படி வேண்டுமானாலும் முன் பின்னாகச் சேர்த்துப் பார்த்தால், நமக்குக் கிடைக்கிற வார்த்தைகள் பல. அவையாவன (1) ரசம். (2) ரதம், (3) சவம், (4) சரம், (5) சதம், (6) சாதம், (7) சதாரம், (8) சவரம், (9) சாரம் (10) வரம் (11) வசம், (12) வதம், (13) வாதம், (14) வாசம், (15) வாரம் (16) தாவரம், (17) தரம், (18) தவம், (19) தசம், (20) தாரம் (21) ராம், (22) தாம் இன்னும் பல.

இதே போல மிச்சமுள்ள ஒன்பது வார்த்தைகளையும் அக்கக்காகப் பிரித்து எழுத்துக்களை முன் பின்னாக எப்படி வேண்டுமானால் புரட்டிச் சேர்த்து சொற்களைத் தேடிப்பாருங்கள்.

1. ரசவாதம்
2. அசாத்தியம்
3. சதுரங்கம்
4. தாம்பாளம்
5. கலவரம்
6. சாத்தியம்
7. புதையல்
8. காரணம்
9. கபாலம்
10. மகரம்

★ மேற்கண்ட வார்த்தைகள் தூய தமிழா என்ற சர்ச்சைக்கு இங்கே இடமில்லை.

# மொகலாயர் ஆட்சியில் பசு பாதுகாப்பு

பண்டிட் வி. நடேசன்

பசு வதைத் தடுப்பு முறையை ஹிந்து மன்னர்கள் மட்டும் ஆதரிக்கவில்லை; மொகலாய மன்னர்கள் காலத்திலும் பசுக்களைப் பாதுகாத்து வர சட்டங்கள் இருந்து வந்ததை சரித்திரம் கூறுகிறது.

பாரத நாட்டிற்கு ஹிந்துக்களும் முஸ்லீம்களும் புதிதாக வந்தவர்களே. முதல்வர் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள். பின்னவர் அரேபியாவிலிருந்து வந்தவர். முன் பின்னாக வந்தாலும் இரு ஜாதியினரும் இரு கண்களாக இந்தியாவில் வாழ்ந்தனர். பசு சம்ரக்ஷணத்திற்கும் கலாசாரத்திற்கும், கலைக்கும் சித்திர வேலைக்கும் சிற்பத்திற்கும், இசைக்கும் இலக்கியத்திற்கும் பெரும் சேவை செய்துள்ளனர்.

மொகலாயர் காலத்தில் மாடுகளின் க்ஷேமம், பசுவின் சம்ரக்ஷணை எப்படி இருந்ததென்பதையே இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவை ஆண்ட முதல் மொகலாய மன்னர் பாபர்தான். இவர் ஹிந்துக்களின் வீரத்தைப் போற்றியவர். ஹிந்துக்களின் மனம் புண்படாது ஆண்டவர். பசுவினிடத்தில் ஹிந்துக்களுக்குள்ள விசுவாசத்தையும், பசு சம்ரக்ஷணையையும் பக்தியையும் பாதுகாத்தவர். பாபர் மாட்டிறைச்சி தின்னவில்லை. ஆட்டிறைச்சி தின்றார். ஒட்டக மாமிசம் தின்பதில் பாபருக்கு மிக பிரியமாம். பாபரின் அரண்மனையில் விருந்துக்கும் இறைச்சி சமைப்பது கிடையாதாம்.

ஆப்கானிஸ்தானத்திலிருந்த மகம்மதியர்கள், குதிரை, ஒட்டகம் மாமிசங்களை உணவாகக் கொண்டனர் என்று தெரிகிறதே யொழிய பசுவைக் கொன்று தின்றதாக எச்சரித்திரமும் கூறவில்லை. தைமூர், சமைத்ததும் வறுத்ததுமான குதிரை மாமிசத்தை விருந்தாளிக்கு இட்டான் என்று ஆசிரியர் மான்ஸ¬ரேட் கூறுகிறார். எனவே பாலைவனத்தில் அரேபியரும் ஒட்டகத்தைக் கொன்று தின்றனரே யொழிய மாட்டைக்கொன்று தின்கிற வழக்கமில்லை என்று அறியப்படுகிறது.

பாபர் இறக்கும்போது தன் மகன் ஹுமாயூனைக் கூப்பிட்டு எல்லா மதங்களையும் மதித்து நடக்கும்படியும் அவரவர் மதத்தைத் தழுவி நியாயம் வழங்கும்படியும் பசுக்கொலையைத் தவிர்க்கும்படியும் புத்தி கூறினார். மொகலாயர் ஆட்சி ஆரம்பத்திலேயே பசு பாதுகாப்புக்காக கசாப்புக்காரர்களிடம் வரி வசூலிக்கப்பட்டது. ஒரு பசுவுக்கு 12 "ஜீடால்" வரி விதிக்கப்பட்டது. 200 வருஷங்கள் அமுலிலிருந்த இந்த பசு வரி, கசாப்புக் கடைக்காரர்களின் வேண்டுகோளுக்கேற்ப பெரோஷ்ஷா ஆட்சியில் விலக்கப்பட்டது.

அக்பர் சக்கரவர்த்தி எல்லா மதங்களையும் ஆராய்ந்து, மதம் மனதைப் பற்றியது என்பதை உணர்ந்து, எம்மதத்தையும் சம்மதமாக்கிக் கொண்டார். கொல்லாமையே எல்லா சமயத்திற்கும் மூலம். ஜைன மதத்தை நன்கு உணாந்ததால் மாமிச உணவுகளை வெறுத்தார். புலால் உணவு என்று உண்டாலும் வெள்ளிக்கிழமை தோறும் மட்டும் அவர் அதைத் தொடக்கூட மாட்டார்.

முகம்மது துக்ளக் தன் அரண்மனையின் சமையலறையில் மாட்டிறைச்சி சமைக்கக் கூடாது என்று சட்டம் போட்டார். பரட்சுல்முல்க தன்னுட் சிக்குட்பட்ட குஜராத் முழுவதும் பசுக்கொலையைத் தடுத்தார். பின்பு ஆண்ட சுல்தான் நைருல்டீன் குஷ்ரோவும் பசு வதையை அறவே ஒழித்தார்.

பண்டையில் மகம்மதியர்கள் பசு வதை தம் குரான் வேதத்திற்கு புறம்பானது என எண்ணி வாழ்ந்தனர். பசுக்கொலையை குரான் போன்ற எந்த வேதமும் சம்மதிக்காது என்பது அறிஞர் துணிவு. பசு சம்ரக்ஷணைக்கென்றே சிவாஜி பிறந்தார் என்றும் கூறுவர். ஹிந்துவையும் மகம்மதியரையும் பிரிக்க அயலார் தூண்டிய எண்ணங்கள் பலவற்றுள் பசுவதை ஒன்று எனலாம். ★

# கவியும் கனலும்

கே. என். பாலசுப்பிரமணியன்

'உணர்ச்சி தன்னை யறியாமல் பொங்கிப் பிரவகித்துப் பெரு வெள்ளமாகப் பொழிவதுதான் கவிதை' என்று இலக்கணம் வகுத்தான் ஆங்கிலக கவிமணி வேர்ட்ஸ் வொர்த் 'உள்ளத் துள்ளது கவிதை' என்றார் நமது கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

ஆம்; கவிதையில் உணர்ச்சிப் பெருக்கும், உள்ளப் பாங்கும்தாம் முதலிடம் பெறுகின்றன. அறிவு இரண்டாம் பட்சம்தான். பாரதியாரின் கவிதைகளில், அறிவை அப்புறப்படுத்திவிட்டு, உணர்ச்சிப் பெருக்குக்கு இடம் கொடுத்திருப்பதைப் பல இடங்களில் காணலாம். ஏன்? சிற்சில கவிதைகளைப் படிக்கும் போது, பாரதியார் தம்மை மறந்து, உலகை மறந்து, ஏதோ வெறி கொண்டவர்போல் பாடியிருப்பது தெரியவரும்.

இவ்வாறு தம்மை மறந்து மதோன் மத்தமான நிலையில் பாரதியார் பாடியுள்ளதாகத் தோன்றும் பாடல்களுள் 'நந்தலாலா'ப் பாட்டும் ஒன்று:

திக்குள் விரலை வைத்தால்
நந்தலாலா—நின்னைத்
தீண்டும் இன்பம் தோன்றுதடா
நந்தலாலா

என்று பாடல் முடியும்பொழுது, ஒரு பரவச நிலைதான் ஏற்படுகிறது. மூட்டும் தீயைத் தீண்டும் செயல், கவிஞருக்கு ஓர் இன்பக் கற்பனையாக மாறி விடுகின்றது. இந்த மாற்றத்தை ஏற்படுத்தும் திறமைதான கவித்திறன்.

தீக்கும் கவிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டோ என்ற எண்ணம் நம் மனத்துள் பன்முறை எழக்கூடும். கவிதை என்பது கண்ணால் காண முடியாத ஒரு பொருள் அல்ல; அது, பல மூலபொருள்கள் சேர்ந்த ஓர் அற்புதக்கலவை. ஒரு காவியம் செய்ய எத்தனை எத்தனையோ கருத்துகள் தேவைப்படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் தீயும்:

கள்ளையும் தீயையும் சேர்த்து—
நல்ல
காற்றையும் வான வெளியையும்
சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—
பல
தீஞ்சுவைக் காவியம் செய்து
கொடுத்தார்.

என்று, பாரதியார் 'தமிழ்த்தாய்' என்ற பாடலில் இந்த கலவைக்கான வாய்ப்பாட்டை எடுத்து விளக்குகிறார். உமர் கய்யாம் கவிதைகளைப் படிக்கையில் துணையாகக்கொண்ட பொருள்களுள் மதுவும் ஒன்று. ஆனால், பாரதியின் கவிதையிலே கள் கலந்திருக்கிறது; தீ சேர்ந்திருக்கிறது; ஏன், 'நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவருளியும்' இடம் பெற்றிருக்கின்றன. சுருக்கமாகச் சொன்னால், ஐம்பெரும் பூதங்களும் ஒன்று சேர்ந்து அணி செய்து பணி புரியக காத்து நிற்கின்றன.

சுதந்திரப் பெருமைகளைப்பற்றி உரைக்கின்ற பகுதிகளிலும் பாரதியாரின் இந்தத் தன்னை மறந்த பரவசநிலை, அவரை விட்டுப் போக வில்லை. தீயைப் பற்றி மட்டும் கூறாது, தீயினால் விளையும் துன்பத்தைக் குறித்தும் கவிஞர் பாடி யிருக்கிறார்.

ஊனுடல் தீயினும் உண்மை நிலை
தவற
உடன்படும் ஆ(று)உளதோ?

என்கிறார். அவர் 'சுதந்திரப் பெருமை' யில்,

நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர் – உ
வந்தேசொல்வது

'வந்தே மாதர' மந்திரந்தான் என் பது பாரதியின் துணிபு. இதை நிதரிசனமாக அண்மையில் கோவா புரட்சியிலும் கண்டோம் அல்லவா?

'கேட்பன' என்ற தலைப்பில் காணும் இருபாடல்கள் மூலம், பாரதியார் 'சுடர்மிகும் அறிவுடன் படைத்து விடப்பட்டவர்' என்பது நன்கு விளங்கும். ஆனால், அவர் கேட்பதற்கெல்லாம் சிகரமாக விளங்குவது ஒன்று தான் :

தசையினைத் தீ சுடினும்—சிவ
சக்தியைப் பாடு(ம்) நல் சுகம்—
கேட்டேன்

பராசக்தியிடம் பாரதியார் கேட்கும் வரம் புதுமையாக இல்லையா ?

கடவுளரைப் பாடுங்கால் அழலையும் கனலையும் மறவாது கூறுகின்றார் கவிஞர். 'வெறிகொண்ட தாய்' என்ற பாடலில் ;

காயல் ஏந்திய பித்தன்—தனைக்
காதலிப்பாள் எங்கள் அன்னை.

காயும் அழலை ஏந்தி நிற்பவன் ஒரு பித்தன். அவனைக் காதலிக்கின்ற அன்னையும் அவனுக்கேற்ற பிச்சியாகத்தானே இருக்க வேண்டும்? இந்தப் பித்தர் இருவரையும்கூட மறந்து, அந்தக் காயழலையே தன்னுணர்வின்றிப் பாடுகின்ற கவிஞன் எத்தகையவன்? அதற்கும், பாரதியே பதில் உரைக்கின்றான்.

'பெண்மை'யின் உயர்வு குறித்துப் பாடுங்கால்,

அன்னம் ஊட்டிய
தெய்வமணிக் கையின்
ஆணை காட்டில்
அனலை விழுங்குவோம்

என்கிறார் கவிஞர். 'காற்றிலேறி அவ் விண்ணையும் சாடு'ம் திறத்தை யெல்லாம், அனலை விழுங்கும் அற்புதச் செயல் விஞ்சிவிடுகின்றதல்லவா ?

நெருப்புக்கு மட்டுமா கவிஞர் அஞ்ச வில்லை; நஞ்சைக் கண்டும் அவர் நெஞ்சம் சஞ்சலமுறவில்லை. திருவள்ளுவர்,

பெயக் கண்(டு) நஞ்(சு)
உண்(டு)
அமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்றுதான் கூறினர். ஆனால், பாரதியாரோ, இன்னும் ஒரு படி மேலே சென்று விட்டார்.

நஞ்சை வாயி லேகொணர்ந்து
நண்பர் ஊட்டு போதிலும்
அச்ச மில்லை அச்ச மில்லை
அச்ச மென்ப தில்லையே

என முழங்கினர்.

ஒருவன் தவறு புரிந்தான் என்றால், அவனைத் தண்டிப்பதற்கும் ஏற்றது எரிதழல்தான். 'பாஞ்சாலி சபத'த்தில் ஓர் அருமையான கட்டம். தருமபுத்திரன் நாடு நகரம் சொத்து சுதந்திரம் தம்பியர், தாரம் எல்லாம் சூதிலே இழந்து ஏதும்பேசாது நிற்கிருன். பீமன் உளங் கொதித்து, அண்ணனைக் கடிந்து பேசுகிருன்; கடைசியாக தம்பி சகாதேவனைப் பார்த்துச் சொல்கிருன்.

இது பொறுப்ப தில்லை – தம்பி!
எரி தழல் கொண்டு வா;
கதிரை வைத் திழந்தான்
– அண்ணன்
கையை எரித் திடுவோம்!

பஞ்சவர்க்கும் உரிய பத்தினிக் கதிர் பாஞ்சாலியைப் பொய்ச் சூதிலே தோற்ற குற்றவாளிக்கு ஏற்ற தண்டனை தான் இது! இம்மாதிரி இடங்கள் பாரதி பாடல்களில் பல உண்டு.

புலவன் ஒரு மந்திரவாதி. அவன் விரும்பினால், ஆணையிட்டால்—ஏன், கடைக்கண் பணித்தால் — எதுவும் அவன் ஏவல் கேட்கும். சொல்லைக் கொண்டு அவன் பின்னும் எல்லையற்ற கவிதை வெள்ளத்தில் எந்தப் பொருளும் அவன் கட்டளைப்படி நடக்கும்.

பாரதியின் கவிதைகளில் அவர் தீயைத் தம் இஷ்டப்படி ஆட்டி வைப்பதைக் காணலாம். தீ என்னவெல்லாம் செய்கிறது? கவிதையில் கலக்கிறது; புடம் போட்டு எடுக்கிறது; தண்டனை அளிக்கிறது; எல்லாவற்றுக்கும் மேலாக, இஷ்ட தெய்வத்தை ஸ்மரித்துப் யாவர்க்கும் பேரானந்தத்தையே அளித்து விடுகிறது! கவிஞன் கை பட்டுக் கவின் பெருத பொருள் எது?

மகாகவி பாரதியின் கவிதைத் தீயிலே—அந்த மகா யக்ஞத்திலே—'தீக்குள் விரல்' ஒரு பெருங் கொழுந்து! அந்தக் கொழுந்தின் செந்நாக்குகள் என்றென்றும் மேலும் மேலும் பாய்ந்து பரவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ★

# ஆண்டு விழாக்கள்

ஸி. ராஜப்பா

ஒவ்வொரு தேசத்திலும் பண்டிகைகள் கொண்டாடப்படுவது அந்தந்த தேச மக்களின் பழக்க வழக்கங்களைப் பொருத்து அமைந்திருக்கிறது ஆனால், உலகின் எந்தப் பகுதியில் வசிக்கும் ஜனங்களும் ஏகமனதுடன் கொண்டாடப்படும் வைபவம் ஒன்றுண்டு. அதுதான் ஆண்டு நிறைவு வைபவம்.

முதல் வருடம் நடந்த குறிப்பிடத்தக்க சம்பவம், மறுவருடம் பிறந்தவுடன் நம் ஞாபகத்திலிருந்து நழுவி விடாமலிருக்கவே இந்த நியதி ஏற்பட்டிருப்பதாக சரித்திரம் கூறுகிறது.

உலகில் பல மகான்கள் தோன்றி, மறைந்துள்ளனர். புத்தர், யேசு, மகமதுநபி போன்ற மத ஸ்தாபகர்களும், பிளேட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரடீஸ் போன்ற அறிவியல் மேதைகளும், காந்திஜீ, லிங்கன் போன்ற சுதந்திரப் பிரியர்களும், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் போன்ற பக்தி மார்க்க போதகர்களும் உலகம் உள்ளளவும் ஒவ்வொரு மனிதனுடைய நினைவிலும் நிலைத்திருக்க வேண்டியவர்கள். ஆகவே இவர்கள் பிறந்த தின வைபவத்தை ஆண்டுதோறும் கொண்டாடி வருவது வழக்கத்திலிருந்து வருகிறது.

ஆண்டு நிறைவு வைபவங்கள் கொண்டாடப்படும் போது அவை மகிழ்ச்சிக்குரிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அந்த வைபவங்கள் மனதிற்கு 'மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றன. துக்ககரமான சம்பவத்தைக் கொண்டதானால் மனம் துயரத்தில் மூழ்குகிறது. ஆகவே, 'உலகின் இன்ப துன்பங்கள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல; அதுமட்டுமின்றி சாதாரண மனிதனுக்கு மட்டும்தான் துன்ப வாழ்வு நீடித்திருப்பதாக நினைப்பது தவறு. பெரிய மகான்களுக்கும் பலவித துன்பங்கள் நேர்ந்துள்ளன' என்பதை இத்தகைய ஆண்டு நிறைவு வைபவங்கள் நமக்கு நினைவுறுத்துகின்றன.

ஒவ்வொரு வருட காந்தி ஜெயந்தியின்போதும் அஹிம்ஸாமூர்த்தி அண்ணல் நம பாரத நாட்டில் பிறந்து, அதன் விடுதலைக்குப் பாடுபட்டு, சுதந்திரம் பெற்ற, அரிய சாதனைகளை எண்ணி மகிழ்கிறோம்.

ஆனால், அந்த மகானின் முடிவை நினைக்க முற்பட்டால்; நம் கண்களில் நீர்துளிர்க்கிறது புதுவருடம் பிறந்து, முதல் மாதத்தின் முதல் தேதி யன்று மகிழ்ச்சி பொங்க வருடப் பிறப்பைக் கொண்டாடும் நாம முப்பதாம் தேதி யன்று முகத்தில் கவலைக்குறி படரக் காக்ஷி யளிக்கிறோம்! காரணம், அண்ணல காந்தி அமரத்வம் அடைந்த தினத்தை நினைவுறுத்தும் நாள் அந்நாள். ஒரு மதவெறியனின் குண்டுக் கிரையான தேசப் பிதாவை மறக்காமலிருக்கவும், அவரது கொள்கைகளான அஹிம்சை, சத்தியம், சுதந்திரம் ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்பதையும் ஆண்டுதோறும் வலியுறுத்திக் கூறும் நாள் இந்த 'சர்வோதய தினம்'.

இதேபோல் மகான் புத்தரின் 2500-வது ஆண்டு ;விழாவைக் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்திருப்பதை செய்திகள் மூலம் நாம் அறிந்து வருகிறோம். அரசபோகத்தைத் துறநது, உலக ரக்ஷகராக விளங்கிய மகானின் வாழ்வைச் சிந்தரித்து, அவரது 2500-வது ஆண்டு நிறைவு வைபவத்தையொட்டி, திரைப்படம் ஒன்றை வெளியிட வடஇந்தியப் படமுதலாளி ஒருவர் முயற்சித்து வருகிறார்.

மகான் யேசு பிறந்த தினத்தைத்தான் கிறிஸ்தவர்கள் வருடந்தோறும் டிஸம்பர் 25-ந்தேதி 'கிறிஸ்துமஸ்' பண்டிகையாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சாதாரண மக்கள் ஆண்டு விழாவைக் கொண்டாடி வருவதைப்பற்றிச் சிந்திப்போம். தத்தம் சக்திக்கேற்ப இந்த ஆண்டுநிறைவு வைப

வத்தை அவர்கள் கொண்டாடுகிறார்கள். குழந்தைகளின் பிறந்த தின விழாவைக் கொண்டாடி மகிழ்வது பெற்றோர்களின் வழக்கம். பிறந்த தினத்தை யொட்டி வழங்கப்படும் பரிசுகளுக்காக குழந்தைகள் தங்கள் ஆண்டு நிறைவு வைபவங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

நம் தலைவர் ராஜாஜிக்கு இந்த 'ஆண்டு நிறைவு வைபவம்' கொஞ்சமும் பிடிப்பதே இல்லை யென்பதை அவர் அவ்வப்போது தெரிவித்து வருகிறார்.

வருடந்தோறும் இதை முன்னிட்டு அவரைப் பேட்டிக்கண்டு மலர் மாலைகளையும் பழக்கூடைகளையும் அனுப்பிவைத்து அவரது வயதை வருடா வருடம் ஒவ்வொன்ருகக் கூட்டிக் காண்பித்து வரும் அபிமானிகளின் மீது அவருக்கு ஓரளவு கோபம் தான் வருகிறதாம் 'எனக்கே நான் பிறந்த தினம் சரியாக ஞாபகமில்லை. இவர்களுக்கு ஏன் அதில் இவ்வளவு அக்கறை!' என்று அவர் ஹாஸ்யமாகச் சொல்லி வருவதுண்டு.

இந்துப் பண்டிகைகள் பெரும்பாலும் ஆண்டு நிறைவு வைபவத்தை அடிப்படையாகக் கொண்டே கொண்டாடப்படுகிறது. ஸ்ரீ ஜெயந்தி, விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகைகள் முறையே கிருஷ்ண பகவானும், யானைமுகக் கடவுளும் அவதரித்த தினங்களை ஆண்டுதோறும் நமக்கு நினைவுறுத்தும் நாட்கள். அதேபோல் தீபாவளி தினம், திருமால் நரகாசுரனைக் கொன்ற தினம் என்பதற்காக் கொண்டாடப்படுகிறது.

இனி ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு அவற்றின் ஆண்டு நிறைவு வைபவங்களை ஏராளமான பொருட் செலவில் கொண்டாடி வருவதை கவனிப்போம். ஒரு ஸ்தாபனம் ஸ்தாபிதமாகி இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவேறினல் அது 'வெள்ளி விழா'வாகக் கொண்டாடப்படுகிறது. ஐம்பதாண்டுகள் நிறைவேறினல் 'தங்க விழா'; எழுபத்தைந்து ஆண்டுகள் முடிந்து விட்டால் அது 'வைர விழா' அதுவும் கடந்து நூறு ஆண்டுகள் முற்றுப்பெற்று விட்டாலோ அதை 'நூற்றாண்டு விழா' என்று மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. நூறு ஆண்டுகள் ஒரு ஸ்தாபனம் நிலைத்திருந்து, அதன் சேவைகளை நினைத்துப் பார்க்குபோது 'அதன் நீடித்த உழைப்பின் பயனுல்தான் அந்த ஸ்தாபனம் நூற்றாண்டுகள் ஜீவித்திருக்கிறது என்பதை நிதர்சனமாகக் காண்கிறோம். மேனாடுகளில் இம்மாதிரி வைபவங்களை வெகு விசேஷ முறையில் கொண்டாடி வருகின்றனர். சமீபத்தில் ரெயில்வே, தபால் தந்தி ஆகிய ஸ்தாபனங்களின் நூற்றாண்டு விழாக்கள் மிகுந்த பொருட் செலவில் நேர்த்தியான முறையில் கொண்டாடப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது.

இந்துக்களில் அறுபது வயது நிரம்பிய கிழவர் மீண்டும் தன் திருமணத்தை நினைவுறுத்திக்கொள்ள 'ஸஷ்டியப்த பூர்த்தி' கொண்டாடுவது வழக்கம்.

இந்த ஆண்டு விழாக்களால் முக்கியமாகப் பயனடைபவை பத்திரிகாலயங்கள்தான். ஒவ்வொரு சமூக, தேசீய ஆண்டு நிறைவு வைபவங்களுக்கும் விசேஷ கவனம் செலுத்தி, அதை யொட்டி விசேஷ இதழ்கள் கொண்டு வருபவை பத்திரிகைகள். விசேஷ மலர்களை வெளியிட்டு, மகிழ்ச்சியுடன் அந்தத் தினங்களைக் கொண்டாடி வரும் மக்களின் கருத்திற்கு விருந்தளிப்பவை பத்திரிகைகள்.

இவை தவிர, தினச் செய்தித் தாள்கள், பெரிய ஸ்தாபனங்களின் வெள்ளி விழா, தங்க விழா, வைர விழா, நூற்றாண்டு விழா வைபவங்களின் முழு விவரங்களையும் வெளியிடுவதால் பொது ஜனம், ஸ்தாபனங்களின் சேவையைப் பற்றியும், தோன்றிய விதம், தோன்றிய காரணம், அதன் சாதனைகள் ஆகிய முழு விவரங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

''பள்ளி நாட்கள் வாழ்வின் பொன்னுட்கள்' என்பதை எப்போதும் நினைவுறுத்தும் பொருட்டே 'பழைய மாணவர்கள் தினம்' என்பதை ஒவ்வொரு ஆண்டும் கல்விச்சாலைகளில் நாம் கொண்டாடி வருகிறோம்.

'ஆண்டு நிறைவு வைபவ'த்தைப் பற்றிக் கட்டுரை எழுதி முடிக்கும் போது 1955-ம் ஆண்டு நிறைவு பெற்று 1956-ம் ஆண்டு தலைநீட்ட ஆரம்பித்து விட்டது! புத்தாண்டு தோன்றி முதல் மாதத்திலிருந்துவரும் நாம் சென்ற ஆண்டு இதே ஜனவரியில் நடந்த 'ஆவடி காங்கிரஸை' நினைக்காமலா இருந்துவிடுவோம்! ★

# மறக்க முடியாத சம்பவம்

மறக்க முடியாத சம்பவங்கள் சிலவேனும் உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும். அவைகளைப்பற்றி 200 வார்த்தைகளுக்குள் எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும் முதல் கட்டுரைக்கு ரூ. 10 சன்மானம் தரப்படும். பிரசுரம் செய்யப்பட்ட இதர சம்பவங்களுக்கு ரூ. 3 வீதம் கொடுக்கப்படும்.

ஆசிரியர், 'திங்கள்', 17, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2 என்று விலாசமிட்டு எழுதியனுப்புங்கள்.

## மனமாற்றம்

ஐந்து வருடங்களுக்கு முன் நடந்த இந்த சம்பவம் எனக்கு பலத்த மனமாற்றத்தை உண்டாக்கி விட்டது.

காலேஜ் படிப்பு முடிந்து வேலை தேட முற்பட்டபோது 'எம்ப்ளாய் மெண்ட் எக்ஸேஞ்' காரியாலயத்தி லிருந்து ஒருநாள் நேரில் வந்து பார்க்கும்படி ஒரு கார்டு வந்தது. அதில் என்னை தாலுக்காபீஸ் குமாஸ்தா வேலைக்குத் தகுதியான நபர் என்று தேர்ந்தெடுத்திருப்பதாகவும் மறுநாள் பதினொரு மணிக்கு தாசில்தாரைச் சந்திக்கும்படியும் எழுதப்பட்டிருந்தது. உள்ளூர மகிழ்ச்சிதான். ஆனால் ஒரு பிரச்னை தலைதூக்கிற்று.

அப்போது என்னிடம் சரியான உடை தயாராக இல்லை. சலவைத் துணியும் வரும் சமயம் அல்ல. தயாராக எப்போதும் வைத்துள்ள ஒரு உடை என் ஞாபகத்திலிருந்தது. ஆனால் அதன் மீது நான் கொண்டிருந்த வெறுப்பு என்னை அதை உபயோகிக்க விடவில்லை.

ஒரு கதர் வேஷ்டி-ஒரு கதர் ஜிப்பா என் நண்பனின் வற்புறுத்தலினால் தைத்து விட்டேன். ஆனால் உபயோகிக்க நான் ஒருபோதும் சம்மதிக்கவில்லை. அதன் கனம், மற்றபடி அதை உடுத்திக்கொள்வது நாகரீக மல்ல- என்ற எண்ணமும் எனக்கு இருந்து வந்ததால் அதை உபயோகிக்கவில்லை.

ஆனால் மறுநாள் வேறு வழியின்றி அதைத்தான் அணிந்து கொள்ள வேண்டி வந்தது. என்னுடன் அன்று ஏழுபேர் தாசில்தாரைச் சந்தித்துப் போக வந்தனர். என்னைத் தவிர எல்லோரும் நாகரீக முறையில் காட்சியளித்தபோது எனக்கு வீட்டுக்கு கிளம்பி விடலாம் என்று தோன்றியது.

எட்டாவது நபராக நான் அழைக்கப்பட்டேன். தாசில்தார் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னபின் என்னை பிற்பகல் வரும்படி சொன்னார். நானும் அதன்படி சென்றேன். தாசில்தார் மாலையில் கதருடையில் காக்ஷியளித்தார். என்னைக் கண்டதும் "எனக்கு உன்னைப்போல்தான் ஆள் தேவை. என்னைப் போன்ற கதர் அபிமானிக்கு உன்போன்ற எளிய தோற்றமும் அடக்கமும் உள்ளவன் தான் நல்லது! போய் வேலையைக் கவனி!" என்றார். நான் பேசும் சக்தி இழந்து விட்டேன்

சுருங்கச் சொல்லுகிறேன். என்னிடம் இப்போது உள்ள மில் துணி ஆடைகள் ஐந்துதான்! நான் தற்போது பூரண கதர் அபிமானி!

பாபு,
சென்னை.

## முதல் விடுமுறை!

நான் சென்னையில் ஒரு வியாபாரி. அப்பொழுதெல்லாம் ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை கிடையாது. காலை ஏழு மணிக்குக் கடை திறந்தால்

இரவு பத்துமணிக்குத்தான் கடையை மூடுவோம். சுயராஜ்ஜிய போராட்டம் ஆரம்பமாகி யிருந்தது. காந்திஜியை அரெஸ்ட் செய்து விட்டார்கள். காங்கிரஸ் ஊழியர்கள் ஊர்வலமாக வந்து ஹர்த்தால் கொண்டாடும்படி கடை கடையாகக் கேட்டுக்கொண்டு வந்தனர். கடைக்காரர்கள் ஒவ்வொருவராகத் தங்கள் கடைகளை மூடிவிட்டு கடற்கரைக் கூட்டத்துக்குச் சென்றனர்.

நான் கடையை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்றேன். இதற்கு முன்பு நான் சீக்கிரமாக வீடு சென்றதே கிடையாது. என் மனைவிக்கும் நான்கு குழந்தைகளுக்கும் அளவிலாத சந்தோஷம். ஒரு நாளாவது குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடியது கிடையவே கிடையாது. நான் வீடு திரும்புவதற்கு முன் அவர்கள் தூங்கி விடுவார்கள். அன்று மாலை ஐந்து மணியிலிருந்து ஒன்பது மணி வரை என் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டே யிருந்தேன்.

பிற்பாடு சமயம் கிடைத்த போதெல்லாம் ஒவ்வொரு நாள் மாலை நேரத்தை வீட்டில் செலழிக்க ஆரம்பித்தேன். அதன் பிறகு வார விடுமுறை நாளும் வந்து விட்டது. விடுமுறை நாட்களில் மாலை நேரங்களில் வீட்டிலேயே இருந்து விடுகிறேன். ஆயினும் எனக்கு முதல் முதல் கிடைத்த விடுமுறையை ஒவ்வொரு விடுமுறை நாளிலும் நினைத்து மகிழ்கிறேன்.

வெங்கட்ராகவலு.
சென்னை.

## நாய் வளர்ப்பு?

அப்போது எனக்கு வயது பன்னிரண்டு. என் வீட்டாரின் வெறுப்பையும் மறந்து என் நண்பன் வீட்டிலிருந்து நாய் வளர்க்கும் ஆவலில், பிறந்து எட்டு நாட்கள் ஆகாத ஒரு நாய் குட்டியை அதன் தாயை விட்டுப் பிரித்துத் தூக்கிக் கொண்டுவந்து விட்டேன்.

அப்போது மாலை மணி ஆறு இருக்கும். சிறிது நேரம் வரை அந்த நாய்க் குட்டி அமைதியாகத் தானிருந்தது.

அன்று இரவு ஒன்பது மணிக்கெல்லாம், என் வீட்டிலுள்ளவர்கள் படுக்கைக்குச் சென்று விட்டார்கள். நானும் அந்தக் குட்டியை என் பக்கத்திலேயே படுக்கவைத்துக் கொண்டேன். கொஞ்ச நேரத்தில் தன் சக்திக்குத் தகுந்தாற்போல "வாள்" என்று லேசாக ஒரு சப்தம் கொடுத்தது. பக்கத்திலேயே ஒரு கிண்ணியில் பாலையும் வைத்திருந்தேன். சுத்தமான துணியில் நனைத்து அதன் வாயில் பாலைப் பிழிந்தேன். சிறிது நேரம் அமைதியாயிருந்தது அது.

இரவு பத்து மணியிருக்கும். மறுபடியும் "வாள் வாள்" என்று கத்தியது படுக்கையை விட்டு எழுந்து மீண்டும் பாலைப் பிழிந்தேன், வயிறு நிறைந்து சற்று அமைதியாயிருந்தது; நானும் படுத்துக்கொண்டேன்.

இரவு பதினோரு மணிக்கெல்லாம், மீண்டும் கத்த ஆரம்பித்தது. இப்போது நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்தவர்களும் விழித்துக் கொண்டார்கள். கேட்கவேண்டுமா? தூக்கம் கெடுவதாக ஒவ்வொருவரும் முனகினர்.

நாய் பலமாகவே சத்தம்போட ஆரம்பித்து விட்டது. தூங்கிக்கொண்டிருந்தவர்கள் மீண்டும் விழித்துக் கொண்டால் என்ன செய்வது என்ற பயம் வேறு எனக்கு.

கிண்ணியைப் பார்த்தேன், பாலும் தீர்ந்து போயிருந்தது. என்ன செய்வது? அன்று இரவு முழுதும் நானும் படுக்கவேயில்லை. நாய்க் குட்டியின் சப்தமும் ஓயவேயில்லை. எனக்கும் ஒரே வெறுப்பாகி விட்டது.

உடனே மறு யோசனையில்லாமல், அந்த நாயைத் தூக்கிக் கொண்டு போய், என் நண்பன் வீட்டுக் கதவைத் தட்டி எழுப்பி, "இந்தாடா! இந்த நாய்க்குட்டி வியாபாரமே நமக்கு வேண்டாம்...இது இராத்திரி யெல்லாம் கத்தி பிராணனை வாங்கிவிட்டது" என்று சொல்லி அதன் தாயிடம் அதை விட்டு விட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் வந்து விட்டேன்.

அன்றிலிருந்து, இன்றும் நான் நாய் வளர்ப்பவர்களைக் கண்டாலே அவர்களைப் பொறுமையின் சின்னமாய்த்தான் கருதுவேன்.

முத்துலக்கையன்.
திண்டுக்கல்.

ஏஜெண்டுகளுக்கும் வியாபார அபிமானிகட்கும் எமது
பொங்கல் வழ்த்துக்கள்



Regd. No. M.    THINGAL    Jan. 1956

